# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 313 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 18, செவ்வாய்க்கிழமை 04.10.2016



மஹஜன சம்பத

இன்றைய சுப்பர் பரிசுத் தொகை

ரூ.47,497,188/-

தேசிய லொத்தர் சபை


- கேலி கிண்டல் செய்கிறார்கள்
- அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள்
- வறுமையும் வாழ்க்கைக்கான போராட்டமும்

# யாரும் கண்டுகொள்ளாத தரப்பு ஆகிவிட்டோம் நாம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் கண்ணீர்த் துயரம்

மட்டக்களப்பு, ஒக்ரோபர் 4

சமூகத்திலுள்ள ஒரு சாராரின் கேலியும் கிண்டலும், அதிகாரிகளின் புறக்கணிப்பும், வறுமையும், வாழ்க்கைக்கான போராட்டமும் எங்களைக் கடும் நெருக்கடிக்கும் விரக்திக்கும் உள்ளாக்குகின்றன. எவராலும் கண்டுகொள்ளப்படாத தரப்பாக நாம் ஆக்கப்பட்டுள்ளோம்.



இவ்வாறு மட்டக்களப்பு–வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் துயரம் வெளியிட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரில் தங்கி வாழ்ந்த உறவினர்களுக்கு உளநல ஆலோசனை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு - ஆயித்தியமலையில் நேற்று இடம்பெற்றது. அதில் உளநல மூத்த நிபுணர் >> 23ஆம் பக்கம்

## விக்கிக்குப் பாதுகாப்பு தர இராணுவம் தயார்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 4

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பின், இராணுவப் பாதுகாப்பு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக, இராணுவப் பேச்சாளர் >> 23ஆம் பக்கம்

## விக்கிக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஒக். 4

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகப் பொலிஸில் நேற்று முறைப்பாடு பதிவு செய்தது சிங்கலே தேசிய முன்னணி.

கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்ததாக >> 23ஆம் பக்கம்

## அமிருக்கு நடந்த கதி விக்கிக்கும் வரும்

### அவர் செய்வது பூமராங்காக அவரையே தாக்கும் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஒக். 4

இலங்கையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு நடந்ததே, வடக்கு மாகாண முதலமைச்சர் >> 23ஆம் பக்கம்

## விக்கிக்கு கொலை அச்சுறுத்தலா? விசாரியுங்கள் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், ஒக். 4

தன்னைக் கொலை செய்வதற்கு முயற்சிக்கின்ற செய்திகள் வெளியாகியுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த பகிரங்க அறிவிப்புத் தொடர்பில், ஜனாதிபதி மற்றும் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்று முழுமையான விசாரணை நடத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கோருகிறார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் >> 23ஆம் பக்கம்

## பெயர்ப் பலகையை மாற்றுவது எமது வேலைத் திட்டமல்ல

### பொலனறுவையில் தெரிவித்தார் மைத்திரி

கொழும்பு, ஒக். 4

முன்னாள் தலைவர்கள் ஆரம்பித்த திட்டங்களின் பெயர்ப் பலகைகளை அகற்றி, எமது பெயரைச் சேர்த்து அவற்றை மீண்டும் திறந்து வைப்பது எனது கொள்கையல்ல.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். >> 23ஆம் பக்கம்

## டில்லிக்குச் செல்லும் ரணில் மோடியுடன் முக்கிய பேச்சு

கொழும்பு, ஒக். 4

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இந்த வாரம் சிறப்புச் சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக கொழும்பு அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்தது.

நியூசிலாந்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கிருந்து இன்று புதுடில்லிக்கு புறப்படுகிறார். நாளை மறுதினம் >> 23ஆம் பக்கம்

## பிரதி அவைத் தலைவருக்கு மாகாண சபை அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு மாகாண சபையின் அமர்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை, தேநீர் இடைவேளையுடன் முடித்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதனின் இறுதிக் கிரியைகள் அன்றைய தினம் நடைபெறவுள்ளதாலேயே, தேநீர் இடைவேளையுடன் அமர்வு நிறுத்திக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நாளை மறுதினம் வியாழக் >> 23ஆம் பக்கம்



மறைந்த வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதனின் பூதவுடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவப்பிரகாசம் சிவமோகன், சிவசக்தி ஆனந்தன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணம் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். (வ-21,ரி7)

## பிரபாகரனின் உடலை நான் காணவேயில்லை

### அடித்துக் கூறுகிறார் மகிந்த





கொழும்பு, ஒக். 4

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்ததை நான் கனவிலும் காணவில்லை. அவரின் சடலத்தையும் காணவில்லை. >> 23ஆம் பக்கம்

## விக்கியின் கருத்துக்கு எதிராக கொழும்பில் நேற்று போராட்டம்

(விரிவு: பக்கம் 10)

## மலையகத்தின் பல இடங்களில் தொழிலாளர்கள் போராட்டம்



(விரிவு: பக்கம் 11)

## வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் இனவாதி என்பதை ஏற்கவியலாது

### தமிழ் ஊடகவியலாளர்களிடம் உருகி வழிகிறார் மகிந்த

கொழும்பு, ஒக். 4

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் செய்கின்றார். அவர் இனவாதி என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள அவரது அலுவலகத்தில் தமிழ் ஊடகங்களின் செய்தியாளர்களை நேற்று மகிந்த ராஜபக்ச சந்தித்தார். இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாவது: >> 23ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடைவை திருடிய பெண்கள் கைது

சாவகச்சேரி ஒக். 4

புடைவைக் கடையொன்றிலிருந்து மூவாயிரம் ரூபா பெறுமதியான புடைவைகளைத்திருடிக் கொண்டு சென்ற பூநகரி மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த இருபெண்களைக் கடை உரிமையாளர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள புடைவைக் கடையொன்றில் இடம்பெற்றது.

கடைக்குள் வந்த இருவரும், சேலைகள் மற்றும் புடவைகளைப் பார்வையிட்டதுடன், பெறுமதியான சில ஆடைகளை எடுத்து ஒருவர் கைப்பையினுள் வைப்பதைக் கடைச் சிப்பந்தி அவதானித்தார். பின்னர் புடவைகளை வாங்காதவர்கள் போன்று, வேறு கடைகளைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறி நழுவிச் செல்ல முற்பட்ட வேளையில், இருவரும் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி-9)

தவறான நடத்தைக் குற்றச்சாட்டு

# பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 4

கதிர்காமத்தில் பொலிஸ் ஓய்வு விடுதியில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் உபபொலிஸ் பரிசோதகர் ஆகியோர் தவறான நடத்தையில் ஈடுபட்ட சம்பவத்தையடுத்து அவர்கள் இருவருக்கும் தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தவாரம் விடுமுறையில் இருவரும் கதிர்காமம் சென்றிருந்தனர். கதிர்காமத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு என்று அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் ஓய்வு விடுதியில் தங்கியிருந்த சமயம், இளம் பெண்களுடன் தவறான நடத்தையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற கதிர்காமம் பொலிஸாரால் அந்தச் சம்பவத்தை உறுதிப்படுத்தினர்.

இதனை அடுத்து குறித்த பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டது. உபபொலிஸ் பரிசோதகர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கும், யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி மட்டக்களப்புக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# இரணைமடுக் குள சீரமைப்பு; பணியாளர் மின் தாக்கிச் சாவு

கிளிநொச்சி, ஒக். 5

கிளிநொச்சி – இரணைமடு குளத்தின் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் – காரை நகரைச் சேர்ந்த கனகராசா கோபிநாத் (வயது-22) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

கிளிநொச்சி – இரணைமடுக் குளத்தின் சீரமைப்புப் பணிகள் இரவு பகலாக இடம்பெற்று வருகின்றமையினால், அங்கு பணியில் ஈடுபட்டுகொண்டிருந்த போதே மின்சாரம் தாக்கியதிலில் அந்த இளைஞன் உயிரிழந்தார்.

சடலம் பிரேதபரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-21,101,35)

# வடக்கில் வேலைவாய்ப்புக்களின் போது முன்னாள் போராளிகள் புறக்கணிப்பு

## துணுக்காயில் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஒக். 4

வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலும், நாம் புறக்கணிக்கப்படுகின்றோம் என்று துணுக்காய் பிரதேசத்தை சேர்ந்த முன்னாள் போராளிகள் கவலை தெரிவித்தனர்.

வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரனுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரனால் முன்னெடுக்கப்படும் முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் தொடர்பில், துணுக்காய் பிரதேசத்தில் உள்ள நூற்றும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் அறிந்திருக்கவில்லை என்று கூறி, அவர்களுடன் அமைச்சர் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பு துணுக்காய் பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தமது அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வாழ்வாதார திட்டம் அவர்களுக்கு சென்றடையாமைக்கான காரணங்கள் தொடர்பில் அமைச்சர் ஆராய்ந்தார்.

'எமக்கு வேலைவாய்ப்புக்கள் தரப்படும் சந்தர்ப்பத்தில் பலகாரணிகளால் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம். வாழ்வாதார உதவித்திட்டங்களை விட எமக்கான நிரந்தர தொழில் இருப்பின், எம்மால் வாழ்க்கையைக் கொண்டு நாடத்த முடியும்' என்று முன்னாள் போராளிகள் வடக்கு அமைச்சரிடம் தெரிவித்தனர்.

துணுக்காய் பிரதேசத்தில் எவ்வாறான தொழிற்சாலையை நிறுவி வேலைவாய்ப்பை வழங்க முடியுமோ அது பற்றி ஆராயப்படும். அதற்கான ஏற்பாடுகளை செய்துதருகின்றேன். வாழ்வாதார உதவிகள் பற்றி அறியாமைக்கு கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்காமையே காரணம். அவ்வாறு இயங்காத சங்கங்களை இனங்கண்டு எமக்குத் தெரியப்படுத்துமிடத்து, அவற்றின் நிர்வாகத்தைக் கலைத்து புதிய நிர்வாகத் தெரிவுக்கு அனுமதி வழங்கப்படும்.

குறிப்பாக துடிதுடிப்புள்ள இளைஞர்கள் நிர்வாகத்தில் தெரிவு செய்யப்பட வேண்டும். அவர்கள் பொதுநோக்கோடு நேரத்தை ஒதுக்கி கிராமமும் மக்களும் முன்னேற உதவ வேண்டும். மேலும் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றுக்கு பல திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை உபயோகித்தாலே பலருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும். வாழ்வாதார உதவிகள் வழங்கப்படும் போது சிறப்புத் தேவையுடயோரை அவர்களே இனங்காட்ட வேண்டும். எம்மால் ஆன அபிவிருத்திகளை நாம் இந்தப் பிரதேசத்துக்கு செய்துவருவோம் என்றுவடக்கு போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவித்தார். (வ-21)

# ஆசிரியர் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 4

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. கல்லூரியின் மூத்த மாணவ தலைவன் செல்வன் கிருசாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக வடமராட்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்வி பணிப்பாளர் கலந்து சிறப்பிப்பார். (வ-422)

# துர்நடத்தைக்கு முயன்ற இருவரை அடையாளம் காட்டினார் சிறுமி

யாழ்ப்பாணம், ஒக். 4

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் பதின்ம வயதுச் சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரையும் நேற்று நீதிவான் முன்னிலையில் அடையாளம் காட்டினார் பாதிக்கப்பட்ட சிறுமி.

இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்கள் 2 பேரும் பருத்தித்துறை நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். இருவரையும் பாதிக்கப்பட்ட சிறுமி அடையாளம் காட்டினார். அதன்பின்னர் இருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் கடந்த மாதம் 9ஆம் திகதி பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சிறுமியிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் 8 சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டு தேடப்பட்டனர்.

காதலிப்பதாக கூறியே குறித்த சிறுமியை காதலன் அழைத்துச்சென்றார். பின்னர் காதலன் உட்பட 8 பேர் சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்தினர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

கைதான இருவரும் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். மன்றின் உத்தரவுப்படி அவர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,109)

# 7000 குடும்பங்களுக்கு இன்னமும் காணி அனுமதிப்பத்திரம் இல்லை

## வவுனியா நகர செயலர் தெரிவிப்பு

வவுனியா நகர பிரதேச செயலாளர் பிரிவில் பத்தாயிரம் குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் போருக்குப் பின்னர் வழங்கப்பட்டுள்ளன. ஏழாயிரம் குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் இன்னும் வழங்கப்படவேண்டியுள்ளன.

இவ்வாறு வவுனியா நகர பிரதேச செயலாளர் உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வவுனியா நகர பிரதேச செயலாளர் பிரிவானது 42 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது. இங்கு 34 ஆயிரத்து 683 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 849 பேர் வாழ்கின்றனர். இவ்வாறு வாழும் குடும்பங்களில் இதுவரைக்கும் 10 ஆயிரம் குடும்பங்களுக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று இன்னமும் 7 ஆயிரம் குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளன.

எமது பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் காணி உள்ளவர்களில் இன்னும் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு வசதி தேவையாகவுள்ளது. அதேபோன்று 3 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு காணித் தேவையும் உள்ளது. இவ்வாறு காணித்தேவை உள்ளவர்கள் தற்போது தாய் தந்தையுடனும் வாடகை வீடுகளிலும் வாழ்கின்றனர். மேலும் சிலர் உறவினர் நண்பர்களின் வீடுகளிலும் வாழ்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் ஆளுகையில் உள்ள வீதிகள் சீர் செய்யப்படுகின்றன. இருப்பினும் உள்ளூராட்சித் திணைக்களங்களின் ஆளுகைக்குட்பட்ட பல வீதிகள் இன்னமும் சீர் செய்யப்படாமல் உள்ளன. இது தொடர்பில் உரிய சபைகளுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்தில் நிதி விடயமே முக்கிய பிரச்சினையாக சுட்டிக் காட்டப்படுகின்றது - என்றார். (வ-ரி-101)

# குடும்பத்தலைவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த குடும்பத் தலைவர் தலையில் வெடிப்பு ஏற்பட்டு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கிளாயில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் புத்தளம் கொட்டான்தீவு முந்தலைச் சேர்ந்த நிக்கிலஸ் பிரான்சிஸ் (வயது-37) என்பவரே உயிரிழந்தார்.

மீன்பிடிப்பதற்காகச் சென்றிருந்தபோதே அங்கு மதகுடன் மோதுண்டு தலையில் வெடிப்பு ஏற்பட்டது.

காயமடைந்தவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணைஅதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுசடலத்தைஉறவினர்களிடம் ஒப்படைத்தனர். (வ-4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிற்சர்லாந்து நிதி அமைச்சருடன் நேற்று முதலமைச்சர் விக்கி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

பாகுபாடு காட்டாது தமிழ் மக்கள் சமமாக மதிக்கப்படும் நிலமையைப் பெரும்பான்மையினர் உறுதிப்படுத்தினால்தான் புதிய அரசமைப்பினால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏற்படும். ஆனால் பாகுபாடுகளே தற்போதும் தொடர்வதால், முன்வைக்கப்படக்கூடிய அரசமைப்பானது தமிழ் மக்களுக்கு நன்மையளிக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இவ்வாறு சுவிற்சர்லாந்து நீதி அமைச்சரிடம் எடுத்துரைத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.



சுவிற்சர்லாந்தின் நீதி அமைச்சர் சைமனேட்டா சொமாருகா தலைமையிலான 8 பேர் கொண்ட குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. அந்தக் குழு யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தது. கைதடியிலுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சரைச் சந்தித்து சுவிற்சர்லாந்துக் குழுவினர் கலந்துரையாடினர்.

சந்திப்பின் பின்னர் முதலமைச்சர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாறிமாறி ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை அரசுகள் பாகுபாடுகளைத் தொடர்ந்து வந்தன. 1948ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ்காரரின் ஆட்சியில் நாம் சகலரும் சமமாக நடத்தப்பட்டோம். பரீட்சைகள் உள்ளிட்ட சகலவற்றிலும் நாம் சமமாக போட்டியிட்டோம். பாகுபாடு இல்லாவிட்டால் சமமாக எம்மால் போட்டியிட முடியும்.

எனினும், 1948ஆம் ஆண்டின் பின்னர் இந்த நிலமை மாற்றப்பட்டது. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர், இன ரீதியான பாகுபாடு ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்தான கல்வி தரப்படுத்தல்களால் தமிழ் மாணவர்கள் பலர் பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல முடியாது போனது. இவ்வாறான பாகுபாடுகள் தொடர்கின்றன.

இவ்வாறான பின்னணியில் கொண்டுவரப்படக்கூடிய அரசமைப்பானது தமிழ் மக்களுக்கு நன்மையளிக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. பாகுபாடு காட்டாது சகலரும் சமமாக மதிக்கப்படுவர் என்ற நிலமையை பெரும்பான்மையினர் உறுதிப்படுத்தினால்தான் புதிய அரசமைப்பினால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏற்படும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று அரசு உறுதியளித்திருந்தது. ஆனால் அதனை இன்னமும் செய்யவில்லை. நாட்டில் 17 பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக தகவல்கள் உள்ளன. ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இவ்வாறான சில சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

முன்னரைவிட நாட்டில் நிலைமைகள் மாறியுள்ளன. தற்பொழுது ஜனநாயகம் உள்ளது. கலந்துரையாடல்களுக்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. இருந்தபோதும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திலிருந்து இளைஞர்கள் விடுவிக்கப்பட்டாலே தீர்வொன்று கிடைக்கும். வடக்கில் இராணுவப் பிரசன்னம் தொடர்ந்தும் அதிகமாகவே உள்ளது. யாழ்.குடாநாட்டில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இராணுவத்தினர் தற்பொழுது ஓரளவுக்கு அடக்கிவைக்கப்பட்டுள்ள போதும், அவர்கள் பல ஏக்கர் காணிகளைப் பிடித்துவைத்துள்ளனர். அதில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனைக் கேட்பதற்காகவே கடந்தவாரம் நாம் ஊர்வலத்தை நடத்தியிருந்தோம்.

நாம் நடத்தியிருந்த ஊர்வலமானது அரசுக்கு எதிரானது அல்ல. அரசியல் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக சிவில் சமூக அமைப்புக்கள் இருப்பது வழமையானது. அவ்வாறானதொரு அமைப்பின் ஊடாகவே தமிழ் மக்கள் தமது உணர்வுகளை வெளிக்காட்டியிருந்தனர் என்று சுவிற்சர்லாந்து நிதி அமைச்சரிடம் எடுத்துக் கூறினேன் - என்றார். (வ-4,106,ரி)

# எட்கா வர்த்தக உடன்படிக்கை ஊடாக வடக்கில் தொழிலின்மை அதிகரிக்கும்

## எச்சரிக்கிறார் மகிந்த

கொழும்பு, ஒக்.4

இந்தியாவுடனான எட்கா வர்த்தக உடன்படிக்கை மூலம் சேவை சந்தை திறந்துவிடப்பட்டால் வடக்கு மாகாணத்தில் தொழிலின்மைப் பிரச்சினை மேலும் அதிகரிக்கும்.

இவ்வாறு எச்சரிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. பத்தரமுல்லயிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எட்கா உடன்படிக்கை ஊடாக இந்தியாவிலிருந்து ஊடகவியலாளர்கள் வருவார்கள். தமிழ் நாட்டிலுள்ள ஊடகவியலாளர்கள் பலரும் இங்குவருவார்கள். அவர்களுக்கு தமிழ், ஆங்கிலம் நன்கு தெரியும். அவர்கள் சிறப்பாக பயிற்சிபெற்று இங்கு வந்து குறைந்த சம்பளத்தில் தொழில் செய்வார்கள்.

அத்துடன் தகவல் தொழில்நுட்பத்தைப் பாருங்கள். அதிகமான பாதிப்பு வடக்கு மாகாணத்துக்கே ஏற்படும். வடக்கிற்கு மகிந்தோதய ஆய்வுகூடம், தகவல் தொழில்நுட்பம் பல்கலைக்கழகம் என்பவற்றை பெற்றுக் கொடுத்த போதிலும், அவர்கள் வேலை வாய்ப்பை பெறுவதற்காக கடும் பிரச்சினை நிலவும்.

கோடிக்கணக்கானோர் இந்தியாவிலிருந்து வந்தால் வடக்கு, கிழக்கு இளைஞர்களின் நிலமை எவ்வாறு அமையும்? மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்களின் நிலை என்ன? அங்கிருந்து இலட்சக்கணக் கானோர் குறைவான சம்பளத்தில் இங்கு வந்து தொழிலில் ஈடுபடுவதற்கான சூழலை நாங்களே ஏற்படுத்திக்கொடுக்கின்றோம். நாங்கள் கூறுவது அப்படியல்ல. எமது நாட்டிற்கு என்ன நன்மை என்பதையே பார்க்க வேண்டும் என்றார் மகிந்த.

(வ-5)

டிப்பர் வாகனம் வாடகைக்குத் தேவை

கட்டட ஒப்பந்த வேலைக்கு, 4 ½ கியூப் உடைய 6 சக்கர டிப்பர் வாகனங்கள் நீண்டகால வாடகைக்குத் தேவை.
தொடர்பு:-
0777 554528

ஆங்கில ஆசிரியர் தேவை


கிட்ஸ் பார்க்
சுயவிவரக் கோவையுடன்
09.10.2016 இற்கு முன்னர்
விண்ணப்பிக்கவும்.
தொடர்பு:-
077 656 5258
021 205 4654
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1302
சீட்டிழுப்பு திகதி 2016.10.03
வெற்றி இலக்கங்கள்
12 31 32 65 K
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 25,928,160/=
Web: www.dlb.lk

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 30
சீட்டிழுப்பு திகதி 2016.10.03
வெற்றி இலக்கங்கள்
13 27 37
இவ்வார இலட்சாதிபதிகள் 41
வழங்கப்பட்ட மொத்த பரிசு 7,836,340/=
Web: www.dlb.lk

SUPER BALL
சுப்பர் போல
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 558
சீட்டிழுப்பு திகதி 2016.10.03
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
02 40 45 68 N
சுப்பர் ஜக்பொட்
ரூ.53,659,880/=
Web: www.dlb.lk

# திருநெல்வேலி வீடொன்றின் மீது நேற்று இனந்தெரியாதோர் தாக்குதல்



யாழ்ப்பாணம், ஒக்.4

திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் சிவன் ஆலய வீதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று மோட்டார் சைக்கிளில் வந்த சில இளைஞர்கள் வீட்டின் கண்ணாடிகள் அனைத்தையும் அடித்து நொருக்கிச் சேதமாக்கினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அண்மையில் திருநெல்வேலி கிழக்கில் உள்ள பூதவராயர் சிவன் ஆலய வீதியில் உள்ள வீடு ஒன்றின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 3 மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் தமது முகத்தை துணிகளினால் மூடிக் கட்டியவாறு வீட்டுக்குள் சடுதியாக உள்ளிட்டனர்.

இவ்வாறு உள்ளிட்டவர்கள் வீட்டின் கண்ணாடிகள் அனைத்தையும் அடித்து நொருக்கிச் சேதமாக்கியதை அவதானித்த வீட்டு உரிமையாளர்கள் பின்பாதையினால் ஓடித் தப்பியமையினால் உயிர் ஆபத்துக்கள் ஏதும் இன்றித் தப்பினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்து, அங்கு சென்ற பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (வ-101)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. சதாசிவம்
சிவகுமாரன் BA
(ஆசிரியர்)

எமது குமரன் கல்வி நிலையத்தின் இயக்குநர் திரு. S. சிவகுமாரன் அவர்கள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பேராதெனியா பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் (B.A) பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்..

குமரன் கல்வி நிலையம்
ஆசிரியர்கள், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தடைச்சட்டம் மார்ச் மாதம் திருத்தப்படும்

## நியூசிலாந்தில் கூறினார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஒக் 4

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம், அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் திருத்தியமைக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வர்களில் பலர் விடுவிக்கப் பட்டுள்ளனர். இன்னும் சிலருக்கு எதிராக, குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட் டுள்ளன. மனித உரிமைகள் பிரச்சினை கள் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவை யில்லை என்றும் அவர் கூறினார்.

நான்குநாள்கள் உத்தியோகபூர்வபயணம் மேற்கொண்டு, பிரதமர் தலைமையி லான குழுவொன்று, கடந்த வெள்ளிக் கிழமை, நியூசிலாந்து சென்றது. இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை ஹொக்லாண்டில் உள்ள அரச இல்லத்தில் வைத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அரச மரி யாதை செலுத்தி வரவேற்பளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நியூசிலாந்துப் பிர தமர் ஜோன் கீ தலைமையிலான குழுவின ருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் இடை யில், இருதரப்புப் பேச்சு இடம்பெற்றது. இந்தப் பேச்சுக்குப் பின்னர், நியூசிலாந் துப் பிரதமரும், இலங்கைப் பிரதமரும் இணைந்து கூட்டாக, ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது நியூசிலாந்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள் விக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஜனநாயகம் மலர்ந் துள்ளது. பயங்கர வாதத் தடைச்சட்டம் எதிர்வரும் மார்ச் மாதமளவில் மாற் றியமைக்கப்படும். அது குறித்து அச் சம் கொள்ளத்தேவையில்லை.

லசந்த விக்ரமதுங்கவின் (சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்) சடலம் தோண்டியெடுக்கப்பட்டு, உடற் கூற்றுப் பரிசோதனைக்கு மீண்டும் உட்படுத்தப்பட்டுள்ளது. றக்பி விளை யாட்டு வீரரின் (வசீம் தாஜுதீன்) சட லமும் தோண்டியெடுக்கப்பட்டு, உடற் கூற்றுப் பரிசோதனைக்குப் பின்ன ரான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. அவை குறித்து, அச்சம் கொள்ளத்தேவையில்லை-என்றார்.

கேள்வி நேரத்துக்கு முன்னதாக, கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்து வது தொடர்பில் பேசப்பட்டது. தொழில் நுட்பத்துறை, கல்வித்துறை, ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்,



பாற்பண்ணை தொடர்பில் போதி யளவான அறிவைப் பெற்றுக் கொள் ளல் பற்றிக் கலந்துரையா டினோம்.

இலங்கையில், உள்நாட்டு உற்பத்தி யாளர்களை மேம்படுத்தும் நோக் கிலும் பாற்பண்ணைகளை தொழில்நுட்ப ரீதியில் தர முயர்த்து வதற்கான ஆலோசனைகள் மற் றும் வழிவகைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. நியூசிலாந் தில் பின்பற்றப்படும் நாடாளுமன்ற முறைமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வா றானதொரு முறைமை தொடர் பில், நாமும் கவனம்செலுத்தினால், அதற்கு நியூசிலாந்துப் பிரதமரும் இங்குள்ள (நியூசிலாந்து) நாடாளுமன்ற உறுப்பினர் களும் ஒத்துழைப்பு நல்குவதற் குத் தயாராகவே இருக் கின்றனர்.

1 வயது முதல் 5 வயது வரை யிலான குழந்தைகள், வாரத் துக்கு ஒரு குவளை (கிளாஸ்) பசும் பாலைக் குடிக்கவேண்டும். அதற்காக, எங்க ளுக்கு (இலங் கைக்கு) உதவுவதற்கு, நியூ சிலாந்து முன்வருவதற்குத் தயாராகவே உள்ளது.

ஜனநாயகமும் சமாதானமும் மலர்ந்துள்ள நாட்டில், பொருளா தாரத்தை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குவதாக, இந்த இருதரப்புப்பேச்சுவார்த்தையின் போது, நியூசிலாந்துப் பிரதமர் உறுதியளித்தார்-என்றார். (த)

## மனித உரிமை ஆர்வலரிடம் கட்டுநாயக்கவில் விசாரணை

கொழும்பு, ஒக் 4

பிரிட்டனில் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாடு ஒன்றில் பங்கேற்கச் சென்ற இலங்கை மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர் னாண்டோ, கட்டுநாயக்க விமான நிலையத் தில் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப் பட்டுத் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பிரிட்டனின் யோர்க் பல்கலைக்கழகத்தில் நடக்கும் மனித உரிமைகள் கருத்தரங்கு ஒன் றில் பங்கேற்பதற்காக, ருக்கி பெர்னாண்டோ நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலை யம் சென்றிருந்தார்.

அங்கு அவரைத் தடுத்து வைத்துப் புலனாய்வுப் பிரிவினர் நீண்ட விசாரணைக்கு உட்படுத்தி னர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் வரை ருக்கி பெர்னாண்டோ தடுத்து வைத்து விசாரிக்கப் பட்டார் என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரி வித்தார். சட்டவாளர்கள் தலையிட்டதை அடுத்து. விமானம் புறப்படுவதற்கு முன்னரே அவர் விடுவிக்கப்பட்டார்.

பிரிட்டனில் நடைபெறும் மனித உரிமை மாநாடு தொடர்பாகவே ருக்கி பெர்னாண்டோவிடம் புல னாய்வுப் பிரிவினர் கேள்விகளை எழுப்பியுள் ளனர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக தமக்குத் தெரியாது என்று தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி, சம்பந்தப்பட்ட பிரிவிடம் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டியிருப்பதாகத் தெரிவித்துள் ளார். (த)

## அரச வங்கியில் கொள்ளை முயற்சி; முகாமையாளர் உட்பட ஐவர் கைது

கொழும்பு, ஒக் 4

வென்னப்புவ பகுதியில் அமைந்துள்ள அரச வங்கியொன்றில் கொள்ளையிடத் திட்டமிட்ட குறித்த வங்கியின் முகாமையாளர் உள்ளிட்ட ஐவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வென்னப்புவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள், தனது வங்கியின் பாதுகாப்புப் பெட்டகம் இனந்தெரியாத நபர்களால் உடைப்பதற்கு முயற்சிக்கப் பட்டுள்ளது என்று வங்கியின் முகாமையா ளரால் முறைப்பாடொன்று மேற்கொள்ளப் பட் டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தலைம றைவாகியிருந் தமை தெரியவந் துள்ளது.

இதன் பின்னரே, குறித்த வங்கி யின் முகாமை யாளர் உட்பட ஐவர் கைது செய்யப் பட்டனர்.

கடன் பிரச்சி னையில் சிக்கியுள்ள குறித்த வங்கி முகாமையாளர், தன்னுடைய கடனிலிருந்து விடுபடுவ தற்காகவே இந்தக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள் ளது. (த)

**தவறிவிட்டது**

அராலிமேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தவராசா என்பவரது தேசிய அ.அ(643372754V) 26.09.2016 அன்று யாழ்ப்பாண நகர்கடைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (J.5998) (14,17,18)

தொடர்பு: 16/2, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.

**கடை வாடகைக்கு உண்டு**

உரும்பிராய் வடக்கு உரும்பிராயில் (பலாலி வீதி) கடை வாடகைக்கு உண்டு.

077 624 5168

**தேவை**

நல்லூரில் அமைந்துள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை.

தொடர்பு: 077 521 7883

**வீடு காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் 6½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6அறை வீடு விற்பனைக்கு உண்டு. கீரிமலை மற்றும் காங்கேசன்துறை வீதியிலிருந்து 600m தூரத்தில் (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் பார்வையிடலாம்)

077 100 1390

வர்ண கால திருவிழாவில் பரவசம் ததும்பும் புத்தாடைகள்

ABI

பட்டுச் சேலைகள், பான்ஷி சேலைகள், சுடிதார்கள், சுடிதார் மெட்டீரியல்கள்

தீபாவளி கலெக்ஷன்ஸ்

மற்றும் சிறுவர்கள், ஆடவர்களுக்குமான அனைத்து ஆடைத் தெரிவிற்கும்

ABI FASHION WORLD

பட்டு இல்லாமல் தீபாவளியா
பட்டு ஆசை இல்லாமல் பெண்மணியா?



இன்று முதல் 08.10.2016 வரை எம்மிடம் 15000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கை யாளர்களில் இருந்து 15 பேருக்கு SPB நேரடி நிகழ்ச்சிக்கான இலவச ரிக்கற் வழங்கப்படும்.

யாழ் மண்ணில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட அனைத்து ஆடைத் தெரிவுகளுடன் கூடிய மிகவும் பிரமாண்டமான புடைவை மாளிகை

No. 112, K.K.S Road, Jaffna.
Tel: 021 222 3738


Festive Offers
Jackpot
Discounts

f YouTube

abifashionworld@gmail.com

**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

அமரர் **பண்டாரம் வேலாயுதபிள்ளை**



கடந்த 04.09.2016 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் பண்டாரம் வேலாயுதபிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ் வுகள் இன்று (04.10.2016) செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அத னைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உடனிருந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளி யிட்டோருக்கும் மற்றும் ஏனைய உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

[illegible] தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

இல. 35/6, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(c/26447)(12.18)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் ஏற்றும் டிப்பர்களால் சிறாட்டிக்குளம் வீதி சேதம்

## மாந்தை கிழக்கு பிரதேச சபை தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

பாலியாற்றில் இருந்து ஒரு நாளைக்கு 25க்கும் மேற்பட்ட டிப்பர்கள் நட்டாங்கண்டல், சிறாட்டிக்குள வீதியால் பயணிக்கின்றன. அதனால் வீதி மிகவும் சேத முற்றுள்ளது என்று தெரிவித்தார் மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தலைவர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கிழ் உள்ள சிறாட்டிக்குளம் கிராம சேவையாளர் பிரிவின் கீழ் உள்ள சிறாட்டிக்குளம் கிராமத்தில் தற்போது 67 குடும்பங்களைச் சேர்ந்த 206 பேர் வரையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதியாகக் காணப்படும் நட்டாங்கண்டல், சிறாட்டிகுளம் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. சாதாரண துவிச்சக்கர வண்டியில்கூட பயணிக்கமுடியாதநிலை காணப்படுகின்றது என்று சிறாட்டிக்குள கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிவகுமார் தெரிவித்தார்.

அதுகுறித்து கருத்துக் கூறிய போதே பிரதேச சபைத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நட்டாங்கண்டல் சிறாட்டிக்குளம் வீதி கடந்த ஜனவரி மாதம் திருத்தப்பட்டது. இந்த வீதியூடாக பாலியாற்றில் இருந்து மணல் அகழ்ந்து கொண்டு சொல்லும் டிப்பர் வாகனங்கள் ஒரு நாளைக்கு 25க்கும் மேல் செல்கின்றன. அதனால் வீதி படுமோசமாக சேதத்துக்குள்ளாகியுள்ளது. இது தொடர்பாக கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டது. தற்போது வீதி திருத்துவதற்காக கிரவல் பெற்றுக்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது. கிரவல் கிடைத்தால் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளலாம். மழைக்கு முன்னர் இயந்திரத்தின் உதவியுடன் ஓரளவுக்கேனும் போக்குவரத்தில் ஈடுபடக்கூடிய வகையில் பள்ளங்களை நிரவி விடுவதாக தீர்மானித்துள்ளேன்.- என்றார். (ற-ரி7)

# வடக்கு மாகாணத்துக்கு அரசு அதிக நிதி ஒதுக்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.4

ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியே வடக்கு மாகாணத்துக்கும் கொழும்பு அரசால் வழங்கப்படுகின்றது. வடக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்பதைக் கவனத்தில் எடுத்து அதிகரித்த நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். கொழும்பு அரசு இந்த விடயத்தில் துளியளவும் அக்கறை காட்டவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றம் சுமத்தினார்.

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக் கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றினார்.

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணத்து வீராங்கனை தங்கம் வென்றார். இங்கு மிகக் குறைவான வளங்களுடன்தான் போட்டியாளர்கள் பயிற்சி பெறுகின்றனர். போதிய வசதிகள் - வாய்ப்புக்கள் இல்லை. அப்படியிருந்தபோதும் எமது வீர வீராங்கனைகள் சாதிக்கின்றனர். இதுபாராட்டப்பட வேண்டியது. அவர்கள் இன்னமும் திறமையாகச் செயற்படுவதற்குரிய ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாணம் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றது. முன்னேற்றம் மெதுவாகத்தான் உள்ளது. நாங்கள் எங்கள் உரிமைப் போராட்டத்தில் வீச்சாக நின்று கொண்டிருந்தோம். இந்தக் காலத்தில் எமது மாகாணத்தை கொழும்பு அரசுகள் புறக்கணித்திருந்தன. அதனால் நாம் பின்னடைவான நிலையிலேயே இருந்தோம்.

எங்கள் உரிமைப்போராட்டத்தை- போரை அடக்குவதற்கு ஒடுக்குவதற்கு - முடிப்பதற்கு கொழும்பு அரசு காட்டிய வேகத்தின் அளவுக்கு, அதன் பின்னர் எமது தேசத்தைக் கட்டியெழுப்புவதில் காட்டவில்லை. அழித்தவர்கள், ஆக்கத்துக்குக் கரம் கொடுக்கவில்லை.

வடக்கு மாகாணத்துக்கு ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியே ஒதுக்கப்படுகின்றது. போரால் பாதிக்கப்பட்ட அபிவிருத்தியில் 30 வருடங்கள் பின்தங்கிய மாகாணம் என்ற எந்த கரிசனையையும் அவர்கள் செலுத்தாது, ஏனைய மாகாணங்களையும் எங்களையும் ஒரே தட்டில் வைத்து நிதி ஒதுக்கீடு செய்கின்றார்கள்.

பன்னாட்டுச் சமூகத்துக்கு, எங்களுக்கு சகல உதவிகளையும் செய்கின்றோம் என்று கொழும்பு அரசு உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிவிக்கின்றது. தற்போது யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற தேசிய விளையாட்டு விழா கூட கொழும்பு அரசின் தேவைக்கானதுதான்.

எங்கள் மண்ணில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் திறக்கப் படவில்லை. ஆனால்தேசியக்கொண்டாட்டங்கள் நடக்கின்றன.

நாங்கள்தான் எங்கள் முயற்சியில் முன்னேற வேண்டியவர்களாக இருக்கின்றோம். தன்கையே தனக்கு உதவி என்பதை நினைவில் வைத்து, நாம் முன்னேறுவோம் - என்றார். (ற-5,ரி)

# முல்லை. மாவட்டத்தில் 45 குளங்கள் சீரமைப்பு

## மாவட்ட கமநல சேவை திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் கைவிடப்பட்ட 45 குளங்கள் 178.1 மில்லியன் ரூபா நிதியில் சீரமைக்கப்படுகின்றது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை திணைக்கள உதவிப் பணிப்பாளர் வே. ஆயகுலன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

குளங்களைச் சீரமைப்பதற்காக கமநல சேவைத் திணைக் களத்தால் ஒதுக்கப்பட்ட 45 மில்லியன்ரூபாவில் 10 குளங்களைச் சீரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டது. 9 குளங்களின் சீரமைப்பு வேலைகள் முடிந்துள்ளன.

ஒட்டுசுட்டான் கமநல வேவை நிலையத்துக்கு உட்பட்ட அலைகல்லுக்குள சீரமைப்புக்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்து மில்லியனுக்கு அதிகமான நிதியில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கான கேள்விகளை தலைமை அலுவலகமே கோருவதால் அதற்குரிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அமைச்சால் வழங்கப்பட்ட 126 மில்லியன் ரூபா நிதியில் இருந்து 34 குளங்கள் மாவட்ட ரீதியில் சீரமைக்கப்படுகின்றன. ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட 17 குளங்கள் 72 மில்லியன் ரூபா செலவிலும், அளம்பில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட ஒரு குளம் 1.7 மில்லியன் ரூபா செலவிலும், கொக்குத்தொடுவாயில் ஒரு குளம் 4.7 மில்லின் ரூபா செலவிலும், ஒலுமடுவிலுள்ள 3 குளங்கள் 11.35 மில்லியன் ரூபா செலவிலும், துணுக்காயில் உள்ள 4 குளங்கள் 17.83 மில்லியன் ரூபா செலவிலும், புதுக்குடியிருப்பில் உள்ள இரண்டு குளங்கள் 5.62 மில்லியன் ரூபா செலவிலும், பாண்டியன் குளத்திலுள்ள 4 குளங்கள் 12.8 மில்லியன் ரூபா செலவிலும் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, வேள்ட் விசன் நிறுவனத்தால் 7.1 மில்லியன் ரூபா செலவில் ஆலடிக்குளமும், அதனோடு இணைந்த நீர்ப்பாசன வாய்க்கால்களும் சீரமைக்கப் படுகின்றன.- என்றார். (ற-ரி7)

# வாழைச்சேனை காகித ஆலை உற்பத்தி வலயமாக மாற்றம்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

தூர்ந்துபோயுள்ள வாழைச்சேனை காகித ஆலை, கைத்தொழில் உற்பத்தி வலயமாக மாற்றப்படும். கிழக்கு மாகாணத்தில் செயலிழந்துள்ள 105 கைத்தறி விற்பனை நிலையங்களும் மீள இயக்கப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண முதல்வர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்.

மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் ஒரு சர்வதேச விமான நிலையம் நிறுவப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை நான் அரசிடம் முன்வைத்துள்ளேன். இந்த விமான நிலையம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைக்கும் புனாணைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைய வேண்டும் என்ற சாத்தியவள அறிக்கையையும் நாங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் சமர்ப்பித்துள்ளோம். கிழக்கு மாகா ணத்தை சுற்றுலாத் துறை மூலம் அபிவிருத்தி செய்வதற்கு இந்த சர்வதேச விமானப் போக்குவரத்து வசதி இன்றியமையாததாகும்.

பெரிய, நடுத்தர மற்றும் சிறிய கைத்தொழில் புரட்சிவலயமாக கிழக்கை மாற்றுவதற்குரிய திட்டங்களைப் பற்றி நாங்கள் அரசுடன் கலந்துரையாடி வருகின்றோம். அத்தகைய ஒரு கைத்தொழில் புரட்சி ஏற் படும் பொழுது கிழக்கு மாகாணம் ஒரு உற்பத்தி ஏற்றுமதி வலயமாக மாறும்.

கிழக்கு மாகாணத்திலே 105 கைத்தறி விற்பனை நிலையங்கள் உள்ளன. தற்போது அவை செயலற்றுக் கிடக்கின்றன. சிறந்த உற்பத்தி, சிறந்த முடிவுறுத்தல் என்பன எமது உற்பத்திகளின் கேள்வியை அதிகரிக்கும். கிழக்கு மாகாணத்தை அபிவிருத்திசெய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் ஜனாதிபதியும், பிரதமரும் அக்கறையோடு இருக்கின்றனர். அதை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்தி இந்த மாகாணத்தை வளங்கொழிக்கும் பிரதேசமாக மாற்ற அனைவரும் இன மத கட்சி பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டும்.-என்றார்.

வர்த்தகக் கண்காட்சியை மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் லங்கா எக்ஸிபிசன் அன்ட் கொன்பிரன்ஸ் சேர்விசஸ் நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. (ற-4)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஒக்.4

ஏ -9 வீதியின் ஏற்றத்தில் ஏறிய மோட்டார் சைக்கிளும் இறக் கத்தில் இறங்கிய மோட்டார் சைக்கிளும் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகின. அதில் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நுணாவில் 190 ஆம் கட்டையடி ஏற் றத்தில் இடம் பெற்றது. பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ற-9)

★★★

யாழ்ப்பாணம், ஒக்.4

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு காட்டு அந்தோனியார் வீதிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பய ணித்த இளைஞர்கள் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆ.யடிலன், புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அ.நிலக்சன் ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ற-ரி7)

# சரியாக நடக்கவில்லை கிழக்கு மீள்குடியமர்வு

## முதலமைச்சர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஒக். 4

கிழக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றம் சரியான முறையில் இடம்பெறவில்லை எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கான வீட்டுத் திட்டத்துக்கு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு சரியாகக் கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இடர்கள் மற்றும் இடப்பெயர்வுகளைச் சந்தித்த கிழக்கு மாகாண மக்களுக்கு வீடமைப் புக்கான தேவை அதிகமாகக் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த, மீள்குடியேறிய எத்தனையோ குடும்பங்கள் இன்று தங்களுடைய முயற்சியினால் தான், தங்களுடைய வாழ்வாதாரங்களை, வீட்மைப்புக்களை முடியுமான அளவு அமைக்கின்றார்கள். மத்திய அரசு மூலமான நிதியொதுக்கீடு கிழக்கு மாகாணத்துக்குக் கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் எத்தனை மக்கள் கஷ்டத்தில் உள்ளார்கள், எங்கெல்லாம் வீடுகள் தேவை என்பது கூட எனக்குத் தெரியும். பல்வேறு கிராமங்களில் ஓலைக் கூரைகள் மற்றும் கதவுகளைக்கூட போட முடியாத நிலையில் மக்கள் கஷ்டத்தில் உள்ளனர்.

எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டிய தேவை மற்றும் கடமை அரசுக்கு உண்டு-என்றார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாகரண விருக்ஷம் சரிந்தது



சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்
சமஸ்கிருதக் கல்வி பெற்று, சிறப்புப் பட்டமான
**'வியாகரண சிரோமணி'** எனப் பெருமை
பெற்றிருந்த ஒரேயொரு இலங்கையரான
***சிவாச்சார்ய சக்கரவர்த்தி சிவாகமச் செம்மல்***

**சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள்** {B.A (Hons)}

அவர்களின் மறைவு எம் எல்லோரையும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா ஸ்கந்தன் கழலடிகளில் பிரியாதிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஆதீனகுரு,
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

சிவஸ்ரீ.க.மகேஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்,
சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி,

பிரதமகுரு, ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயில் - சுதுமலை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
***ஜெயந்தி செல்வக்குமார்***

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.03.1972 | 04.09.2016 |

முப்பத் தொரு நாள்கள் அழுது விட்டோம்
உனை நினைந்து
மீண்டும் உனது முகம் பார்ப்போமா
இப்புவியில் மீளாத்துயில் கொண்டு
நெடிதுறங்கி விட்டவரே
ஆறாத்துயரமதில் வாழ்கின்றோம் நாம் இங்கே
மீண்டும் வாராயோ எம் முன்னே
நாம் வாழும் வரை எம் முன்னே நீரும் வாழ்வீர்

இன்று (04.10.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

82, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## ஓயாத துயரத்துடன் நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**தம்பு நீலாம்பிகை**
திதி : சதுர்த்தி
செவ்வாய் 04.10.2016

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.08.1943 | 31.10.2012 |

ஆண்டுகள் நான்கு ஓடிப் போனதுவோ
அம்மா எமை விட்டு நீங்கள் சென்று எக்காரியத்தை
எடுத்தாலும் உங்கள் நினைவுகள்
எம்முடன் என்றென்றும் நிலைத்திருக்கும் அம்மா

அம்பகர் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.11.1937 | 28.09.2014 |

**கனகு சின்னராசா**

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய அப்பாவே!
என்றும் உம் நினைவு அழியாதப்பா

3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

சந்திரதாஸன் கேமலதா
குடும்பத்தினர்.

# நீர் தேடி வரும் விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்க வேண்டாம்

கொழும்பு, ஒக்.4
வறட்சியால் பாதிக்கப்பட்ட விலங்குகள், நீரைத்தேடி நீருள்ள இடங்களுக்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்றும், இதனால், அந்த விலங்குகளுக்குத் தீங்கு விளைவிக்க வேண்டாம் என்றும், மக்களும் விழிப்புடன் செயற்படுமாறும் நிலையான அபிவிருத்தி மற்றும் வனவிலங்கு அமைச்சு தெரிவித்தது.

நாட்டின் பல்வேறு இடங்களில் தற்போது நிலவி வரும் கடுமையான வறட்சி காரணமாக, நாட்டின் பிரபலமான வனவிலங்குப் பூங்காக்கள் காய்ந்து போயுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்தது.

யால, உடவலவ, வில்பத்து, லுனுகம்வெஹெர, புந்தன, குமுன மற்றும் கல்லோயா போன்ற பூங்காக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பூங்காக்களுக்குப் பவு சர்கள் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதாகவும் இது தற்போது, நல்ல முறையில் முன்னெடுக்கப்பட்டுச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், இந்த வறட்சியான கால நிலை நீடிக்கும் பட்சத்தில், ஆரம்பிக்கப்படவுள்ள பெரும் போகமும் பாதிப்படையும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.

பராக்கிரமபாகு சமுத்திரம், மின்னேரியா, கவுதுல்ல, கிரிதலே, பொலன்னறுவ மாவட்டம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டம் போன்ற பகுதிகளிலுள்ள நீர்த் தேக்கங்களிலுள்ள நீரின் அளவு குறைவடைந்து உள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்தது.

பொலன்னறுவ, மட்டக்களப்பு, திருகோணமலை, குருநாகல், கிளிநொச்சி, இரத்தினபுரி, வவுனியா ஆகிய பகுதிகளில், 50,910 குடும்பங்களைச் சேர்ந்த 205,045 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| மலர்வு 10.03.1942 | மலர்வு 04.03.1935 |
| உதிர்வு 10.03.2015 | உதிர்வு 17.10.2015 |

**கந்தசாமி மாணிக்கம்** **பூதர் கந்தசாமி**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவமாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவர்களாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்தது
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கோட்டைக்காடு,
மல்லாகம்

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## இதய அஞ்சலி



நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தால் சிதைவுண்டு போயிருந்த
எமது தேவாலயத்தைப் புனரமைக்கும் வேலைகளைச்
சிந்தையில் கொண்டு மாகாணசபை உறுப்பினர்களால்
ஒதுக்கீடு செய்யும் நிதி மூலம் உதவிகள் புரிந்துதவிய
**வடக்குமாகாண சபைப்பிரதி அவைத்தலைவர்**

**கௌரவ ம. அன்ரனி ஜெயநாதன்**

அவர்களின் அகாலமரணம் குறித்து எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துநிற்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆண்டவர் பாதத்தில் விண்ணவர் கூட்டத்தில் மகிழ்ந்திருக்க வேண்டுகின்றோம்.

புனித செபஸ்தியார் தேவாலயம்,
வல்வெட்டித்துறை.

பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணங்களை நம்பாது சுயதொழிலில் ஈடுபடுங்கள்

## வடக்கு சுகாதார அமைச்சர் அறிவுரை

வவுனியா, ஒக்.4
நிவாரணங்கள், அன்பளிப்புகளுக்குப் பழக்கப்பட்ட மக்கள் சுயதொழில் மூலமாக வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அப்போதுதான் பொருளாதாரம் மேம்படும்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.
வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது-
பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேபடுத்துவதற்காகவும், அவர்கள் தமக்குத் தேவையான பணத்தைத் தாமே உழைத்துப் பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டும் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. வவுனியாவில் சிலர் நிவாரணங்களை நம்பி வாழ்கின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்று விரும்புகின்றேன். இன்னொருவருடன் தங்கி நிற்காது சுயதொழில் மூலம் வருமானம் ஈட்டுவதையே விரும்புகின்றேன்.- என்றார். (ҧ-4,402)

# இளைஞர்கள், யுவதிகளை இணைத்து அரசியல் பணியை முன்னெடுப்போம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஒக்.4
நாம் சந்தித்த பட்டறிவுகள், அனுபவங்களில் இருந்து அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இளைஞர், யுவதிகளைப் புதிதாக இணைத்துக் கொண்டு அரசியல் பணிகளை மேற்கொள்ளவுள்ளோம்.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன்.
வவுனியா, தேக்கவத்தையில் கட்சியின் அலுவலகத்திறப்புவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
இதுவரை நாங்கள் செயற்பட்டு வந்தது ஓர் அரச விடுதி. எனவே நாங்கள் ஓர் எல்லைக்கு மேல் வேலைகளைச் செய்ய முடியாது. எங்களுக்கு பல்வேறுபட்ட தடைகள் இருந்தன. அப்படியிருந்தும் 28 வருடகாலம் நாங்கள் அந்தக் காரியலாயத்தில் எங்களால் இயன்ற வேலைகளைச் செய்து கொண்டிருந்தோம். எங்களுடைய மக்களுக்கான அரசியல், பொருளாதாரப் பணிகள் இன்னும் பலமைல் தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. இந்தக்காரியாலயத்தில் எங்களுடைய முழுமையான அரசியல் நடவடிக்கைகள், ஜனநாயக ரீதியான போராட்டங்கள், புதிய இளைஞர், யுவதிகளை இணைத்து அவர்களுக்கான அரசியல் வகுப்புக்கள், கருத்தரங்குகள், சமகால அரசியல் நிகழ்வுகள் உட்பட பல்வேறுபட்ட விடயங்களை எங்களுடைய கட்சி மற்றும் வெளியே உள்ளவர்களை அழைத்து அரசியல் சம்பந்தமாக இன்னும் பல்வேறுபட்ட கலாசாரம் சம்பந்தமான கலந்துரையாடல்களை நடத்துவது போன்றவற்றை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (ҧ-4)

# நடைபவனி

## புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிதி திரட்ட வெள்ளியன்று தெல்லிப்பழையிலிருந்து ஆரம்பம்




யாழ்ப்பாணம், ஒக்.4
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சமூகத்தினரதும், தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினதும் ஏற்பாட்டில் புற்றுநோய் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபவனிஎதிர்வரும்வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் இருந்து ஆரம்பமாகி வீரசிங்கம் மண்டபத்தை அடையும்.
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் பிரிவு அமைப்பதற்கு களேர்ஸ் ஒவ் கரீஜ்நிதியத்தினர்பெரும்தொகைப் பணத்தை வழங்கியிருந்தனர். தெற்கே தெய்வேந்திர முனையில் இருந்து வடக்கே பருத்தித்துறைவரை 28 நாள் நடைபவனி மேற்கொண்ட நிதியத்தினர் அதில் பெறப்பட்ட நிதியை தெல்லிப்பழை வைத்தியசாலை புற்றுநோய்பிரிவு அமைப்பதற்கு வழங்கினர். குறித்த நிதியத்தினர் நாளைமறுதினம் வியாழக்கிழமையும் பருத்தித்துறையில் இருந்து தெற்குக்கு நடைபவனி ஒன்றை நடத்தவுள்ளனர். அதன் மூலம் திரட்டப்படவுள்ள நிதியை காலி, கராட்பிட்டிய போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவு அமைக்க வழங்கவுள்ளனர்.
அவர்களுக்கு உதவும் வகையிலேயே எதிர்வரும் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழையில் இருந்து நடைபவனி நடத்தப்படவுள்ளது. நடைபவனியில் சேகரிக்கப்படும் நிதி, பருத்தித்துறையில் இருந்து துரையப்பா விளையாட்டரங்கு வந்தடையும் களேர்ஸ் ஒவ் கரீஜ் நிதியத்தினரிடம் ஒப்படைக்கப்படும்.
தெல்லிப்பழை வைத்தியசாலையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நடைபவனியில் அரசியல் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், மதகுருமார்கள், ஆன்மிக நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள், சகல திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பல்கலைக் கழக சமூகத்தினர் - மாணவர்கள், லயன்ஸ் கழகங்கள், றோட்டரிக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், யாழ். மாவட்டத்திலுள்ள சகல சமாசங்கள், சுகாதாரத் திணைக்களத்தினர், கல்வித் திணைக்களத்தினர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள், கல்வியியற் கல்லூரி சமூகத்தினர் - மாணவர்கள், வர்த்தகர் சங்கங்கள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர், ஓட்டோ சங்கத்தினர், சென். ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவினர், சாரணர் சங்கத்தினர், பிரதேச செயலகத்தினர், உள்ளூராட்சித் திணைக்களத்தினர் என அனைவரும் கலந்து கொண்டு முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ҧ-5)




யாழ்ப்பாணம், புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 140 ஆவது ஆண்டு பூர்த்தி விழா இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படுகின்றது. அதை முன்னிட்டு வித்தியாலயத்தின் பழைய மாணவர்களால் பாடசாலை பெயர் பொறிக்கப்பட்ட ரி- சேர்ட் அறிமுகப்படுத்தப்பட்டது. (ҧ-9)

## ஆசிரியர் தின விழா

தென்மராட்சி, ஒக்.4
தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும்.
வலயக் கல்விப் பணிப்பாளர் ச.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினமும், சிறப்பு விருந்தினராக வடமராட்சிகிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரனும் கலந்து கொள்வர்.
நிகழ்வில் வலயத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள் கௌரவிப்பு, மாணவர் நாடாளுமன்றம் செயற்படும் பாடசாலைகளின் அதிபர்கள் கௌரவிப்பு, மாணவர் நாடாளுமன்ற இணைப்பாளர்கள் கௌரவிப்பு, அனைத்து மாணவர்களும் எழுத, வாசிக்கக் கூடிய தகைமை பெற்றவர்கள் என்பதை வெளிப்படுத்திய வகை III பாடசாலைகளின் அதிபர்கள் கௌரவிப்பு, ஆசிரியர்களின் கலை நிகழ்வுகள் போன்றவை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ҧ-9)

## மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு ஆகிய இடங்களில் மின் தடைப் படும்.
வவுனியாவில் பெரியார்குளம் (பூந்தோட்டம்), குட்செட் வீதி, தோணிக்கல் சிவன்கோயில் பிரதேசம், சாம்பல் தோட்டம் கிராமம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.
மன்னாரில் நொச்சிக்குளம் பிரதேசம், அரிப்பு, சவேரியார் குளம், நானாட்டான், செம்மண்தீவு, முருங்கன்பிட்டியிலிருந்து அச்சங்குளம்வரை, CECB ஆகியஇடங்களில் மின் தடைப்படும். (ҧ-11)

# வடக்கு, கிழக்கு இணைப்புக்கு மு.கா. இணக்கம் என்பது விசமப் பரப்புரை

## மன்சூர் எம்.பி. காட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4
வடக்கு, கிழக்கு இணைப்புக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம் தெரிவித்துள்ளது என்று விசமத்தனமான பரப்புரைகள் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. முஸ்லிம் சமூகத்தைக் கூறுபோடும் சதி வேலையே இது.
இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.
சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு அண்மையில் பங்களாவடி ஜனாதிபதி விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு, கிழக்கு மக்கள் அனைவரும் அனுபவிக்கக் கூடிய ஒரு நிலவரம், ஸ்திரத்தன்மை, அரசியல் அந்தஸ்த்து, அதிகாரம் என்பன உறுதிப்படுத்தப் படும் பட்சத்திலேயே வடக்கு, கிழக்கு இணைப்புக் குறித்து எமது கட்சி சிந்திக்கும்.
வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தமது ஏகோபித்த அரசியல் தலைமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவு செய்துள்ளனர். வேறு சிலர் அதனைக் குழப்பி ஒற்றுமையை சின்னாபின்னமாக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் ஏற்பட்டுள்ளது.
நாட்டில் வாழும் அனைவருக்கும் சரியான நியாயம், அவர்களது உரிமை ஆகிய கிடைக்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டே நல்லாட்சி அரசு கொண்டு வரப்பட்டது. நல்லாட்சிக்குரிய தேசிய அரசைக் கொண்டு வந்த பெருமை இந்த நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களையே சாரும்.
பெரும்பான்மை சிங்கள மக்களது வாக்கைக் கணக்கிட்டுப் பார்த்தால் தமிழ், முஸ்லிம் மக்கள் இல்லாமல் கடந்த காலத்தில் இருந்த காட்டுமிராண்டித்தனமான ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியாது.- என்றார்.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் 2015ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த 28 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தார். (ҧ)

## போதையில் வைத்திய அதிகாரி மீது தாக்குதல்!

திருகோணமலை பதவிசிறிபுர பிரதேச வைத்தியசாலைக்கு மது போதையில் சென்ற ஒருவர் வைத்திய அதிகாரியைத் தாக்கினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.
கடந்த சனிக்கிழமை மாலை சம்பவம் இடம்பெற்றது. தாக்குதல் நடத்தினார் என்று சந்தேகிக்கப்பட்டவர் தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ҧ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளமருதங்குளம், சேமமடு அழிந்து போகும் நிலையில்

## உதவிகள் கோருகின்றனர் கிராம மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.4
வவுனியா மாவட்டத்தின் பழம் பெரும் கிராமங்களான இளமருதங்குளம், சேமமடு என்பவற்றை அழிவில் இருந்து காக்க வேண்டும். அங்குள்ள பாடசாலையை இயங்க வைப்பதுடன், போக்குவரத்து வசதிகளையும் செய்து தர வேண்டும். யானைகளின் தொல்லையால் விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. உரிய தரப்பினர் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்தனர் கிராமங்களைச் சேர்ந்த மக்கள்.

வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், ஓமந்தைச் சந்திக்கு கிழக்காக 7 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது இளமருதங்குளம் கிராமம். அங்கிருந்து 3 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது சேமமடுக் கிராமம். இந்தக் கிராமங்களில் போருக்கு முன்னர் 500 குடும்பங்கள் வாழ்ந்தன. போரால் அழிந்த சேமமடுக் கிராமத்தில் இப்போது 65 குடும்பங்கள் உள்ளன. இளமருதங்குளத்தில் 19 குடும்பங்கள் உள்ளன. 19 குடும்பங்களில் 8 குடும்பங்களில் வயோதிபர்கள் மட்டுமே உள்ளனர். சேமமடுவில் 21 குடும்பங்களில் முதியவர்கள் மட்டுமே உள்ளனர் – என்று தெரிவித்தார் சேமமடுவைச் சேர்ந்த முதியவர் சுவானி மரியாம்பிள்ளை.

**வளம் மிக்க கிராமங்கள்**
இந்தக் கிராமங்கள் வயற் செய்கைக்கும், தோட்டச் செய்கைக்கும் பெயர் பெற்றவை. இரு கிராமங்களிலும் மொத்தம் 5 குளங்கள் உள்ளன. காலபோகம் மட்டுமின்றி சிறுபோகமும் செய்யலாம். இங்கு வாழ்ந்தவர்கள் வசதியாக கல் வீடு அமைத்தே வாழ்ந்தனர். சேமமடுவில் 350 குடும்பங்களுக்கு சுமார் 800 ஏக்கர் வயல் நிலங்களும், இளமருதங்குளத்தின் கீழ் 300 ஏக்கர் வயலும் இருந்தன. விவசாயனத்தின் மூலம் நாம் சிறப்பான வருமானம் பெற்றோம்.

**போர் அழிவு**
போரால் எமது கிராமங்கள் அழிவடைந்துள்ளன. கிராமத்தில் மிகப் பழைமை வாய்ந்த இரு பாடசாலைகள் உள்ளன. ஆனால் தற்போது மாணவர்கள் இல்லை என்ற காரணத்தால் இளமருதங்குளம் வித்தியாலயம் நிரந்தரமாக இழுத்து மூடப்பட்டுள்ளது. சேமமடு பாடசாலை மட்டுமே இயங்குகின்றது. அந்தப் பாடசாலை க.பொ.த. சாதரண தரம் மட்டுமே கொண்டது. உயர்தரம் கற்க வேண்டும் என்றால் 10 மைல் தொலைவிலுள்ள ஓமந்தை மகா வித்தியாலயத்துக்கே செல்ல வேண்டும்.
போரின் முன்னர் எமது கிராமத்துக்கு 6 பஸ் சேவைகள் நடத்தப்பட்டன. தற்போது பஸ் சேவையே இல்லை. வீட்டுத் திட்டங்கள் இளமருதங்குளத்தில் எவருக்கும் வழங்கப்படவில்லை. சேமமடுவில் ஒரு நிறுவனத்தின் உதவியில் திருத்தங்கள் செய்து மக்கள் வாழ்கின்றனர்.

**வாழ்வாதாரம் இல்லை**
வாழ்வாதாரத்துக்கு விவசாயத்தையே நம்பியுள்ளோம். விவசாயம் செய்தால் மாலை 5 மணியானதும் யானைகள் படையெடுக்கின்றன. கூட்டுக் காவல் செய்வதற்குக் கூட கிராமத்தில் ஆள்கள் இல்லை. வயல் காவலுக்குச் சென்றால் யானைகள் வீடுகளை நொருக்குகின்றன. வீட்டில் இருந்தால் விவசாய நிலங்களை நாசம் செய்கின்றன. எதையும் செய்ய முடியாத நிலையில் நாங்கள் உள்ளோம். இது தொடர்பில் பிரதேச செயலாளர், வனவளத் திணைக்களம் என அனைவரிடமும் முறையிட்டோம் எந்த நடவடிக்கையும் இல்லை.

**இடம்பெயர்வே வழி**
எமது பூர்வீகக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு அதிகாரிகள், அரசியல்வாதிகள் முன்வர வேண்டும். இந்த நிலமை தொடர்ந்தால் நாம் கிராமங்களைக் கைவிட்டு வேறு எங்காவது இடம்பெயர வேண்டிய நிலையே ஏற்படும் – என்று அந்த முதியவர் ஆற்றாமையோடு தெரிவித்தார்.

**இருப்பு பேணப்படும்**
போருக்கு முன்னர் இரு கிராமங்களிலும் அதிக எண்ணிக்கையானோர் வாழ்ந்தனர். அனைத்துத் திட்டங்களிலும் முன்னுரிமை வழங்கப்பட்டது. தற்போது 75 குடும்பங்களே வாழ்கின்றன. அங்குள்ளவர்களின் முக்கிய பிரச்சினையாக இரு பிரச்சினைகள் எம்மால் இனங்காணப்பட்டுள்ளன.
அதில் முக்கியமானது யானைகளின் பிரச்சினை. பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான அனுமதி கோரியிருந்தோம். தற்போது 2 மில்லியன் ரூபா நிதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும்.
இரண்டாவது விடயம் வீட்டுத் திட்டப் பிரச்சினை. எமது பிரதேச செயலாளர் பிரிவுக்குக் கிடைத்த வீட்டுத் திட்டம் போதுமானதாக இல்லை. அதனால் அவர்களுக்கான வீட்டு வசதிகள் வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கான வீட்டு வசதிகள் வழங்கப்பட்டு கிராமத்தின் இருப்பு பேணப்படும்– என்று தெரிவித்தார் பிரதேச செயலாளர் உதயகுமார். (ற-101)

# வறிய குடும்பங்களுக்கு சிமெந்துப் பொதிகள்

தென்மராட்சி, ஒக்.4
தென்மராட்சி பிரதேசத்தில் வாழும் 90 வறிய குடும்பங்களுக்கு மானிய அடிப்படையில் நேற்று தலா 10 சிமெந்து பொதிகள் வழங்கப்பட்டன.
பிரதேசத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் உட்பட வீட்டின் கட்டட வேலைகளை மேற்கொண்டு வீட்டின் சுவர்கள் பூசப்படாத நிலையில் வீடுகளில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு சுவர்களுக்கு பூச்சு வேலையைப் பூர்த்தி செய்வதற்காக அவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
பிரதேச வீடமைப்பு அலுவலரின் பரிந்துரையின் பிரகாரம் பிரதேசத்தின் 60 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 90 பயனாளிகளுக்கு வீடமைப்பு அதிகார சபையால் சிமெந்துப் பொதிகள் வழங்கப்பட்டன. (ற-9)

# யாழ். குடாவில் கடற்கலங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4
யாழ். மாவட்டத்தில் தொழிலில் ஈடுபடும் கடற் கலங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விடவும் நடப்பு ஆண்டில் அதிகரித்துள்ளன என்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ். மாவட்டத்தில் தற்போதும் தொழில் ஈடுபடும் கடற் கலங்களில் கடந்த ஆண்டை விடவும் நடப்பு ஆண்டில் 171 கடற் கலங்கள் அதிகரித்துள்ளன. குடாநாட்டில் உள்ள 14 பரிசோதகர் பிரிவுகளிலும் மொத்தமாக இதுவரை 6 ஆயிரத்து 942 கடற் கலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் 6 ஆயிரத்து 771 கலங்களே பதிவு செய்யப்பட்டன.
நடப்பாண்டில் பதிவு செய்யப்பட்ட 6 ஆயிரத்து 942 படகுகளிலும் பல நாள் படகுகள் 68, ஒரு நாள் படகுகள் 322, கண்ணாடி இளைப் படகுகள் 3 ஆயிரத்து 803, இயந்திர மயப்படுத்தப்பட்ட பாரம்பரிய படகுகள் 591, இயந்திர மயப் படுத்தப்படாத ஆயிரத்து 932 படகுகள் காணப்படுவதோடு, 226 கரைவலைப் படகுகளும் காணப்படுகின்றன.
இன்னும் ஒரு சில படகுகளே தமது படகுகளைப் பதிவு செய்யவில்லை. அவையும் இன்றுடன் முழுமை செய்யப்படும் – என்றார். (ற-101)

# யாழ். நகர அபிவிருத்தித் திட்டத்தில் நந்தாவில் வாய்க்கால் திருத்தப்படும்

## யாழ். மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4
கொக்குவில், நந்தாவில் வாய்க்கால் யாழ். நகர அபிவிருத்தித் திட்டத்தில் முழுமையாகச் சீரமைப்புச் செய்யப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக தகவல்கள் தெரிவித்தன.
நந்தாவில் வாய்க்கால் சீரற்றுள்ளதால் மழை காலத்தில் அந்தப் பகுதி எங்கும் வெள்ளம் ஏற்படுகின்றது. அங்கு வசிக்க முடியாது வேறிடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. தொற்றுநோய் தாக்கங்களும் ஏற்படுகின்றன. வீதிச் சீரமைப்பின் பின்னர் இந்தப் பிரச்சினை அதிகரித்துள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளோம். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.– என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.
வீதிச் சீரமைப்பின்போது வாய்க்காலின் எந்தப் பகுதியும் மூடப்படவில்லை. வாய்க்கால் அகலமாக்கப்பட்டே சீரமைக்கப்பட்டது.– என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் குறிப்பிட்டனர்.
நந்தாவில் வாய்க்காலுக்குள் காணப்படும் புற்கள், கழிவுகளால் மழை வெள்ளம் வடிந்தோடுவது தடுக்கப்படுகின்றது என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.
மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக எமது பணியாளர்கள் வாய்க்காலைத் துப்புரவாக்குவர். ஒவ்வொரு ஆண்டும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. வாய்க்காலை அண்டியுள்ள பிரதேச மக்கள் வாய்க்காலுக்குள் குப்பைகளைக் கொட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.– என்று தெரிவித்தனர் நல்லூர் பிரதேச சபை அதிகாரிகள்.
ஒவ்வோரு ஆண்டும் தற்காலிகமாக துப்புரவு செய்யப்படுகின்றது. அதனால் எந்தப் பலனும் கிட்டுவதில்லை– என்று விசனம் தெரிவித்தனர் அந்தப் பகுதி மக்கள்.
வாய்க்காலைச் சீரமைப்புச் செய்வதற்கு அதிக நிதி தேவை. அதேபோல் யாழ். நகர அபிவிருத்தித் திட்டத்தில் முழுமையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படாத வகையில் சீரமைப்புச் செய்யப்படும்.– என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.
அதேவேளை, நந்தவில் குளம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வாய்க்கால் தொகுதி கமநல சேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமானது. மழை காலங்களில் குளம் நிரம்பியவுடன் நீர் கடலுக்குச் செல்ல வேண்டும். வாய்க்கால் சீரற்று இருப்பதால் தற்போது அவ்வாறு நடப்பதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.
வாய்க்கால் விரைவில் சீரமைக்கப்படும். பிரதேச மக்கள் வாய்க்காலின் ஆரம்பதில் கேற் அமைக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். அதை ஏற்று கேற் அமைக்கவுள்ளோம். ஆயினும் அதற்கு முன்னதாக வெள்ளம் குளத்தை வந்தடையாது காக்கைதீவுக் கடலை நோக்கிச் செல்லக் கூடியதாக வாய்க்கால் சீரமைக்கப்பட வேண்டும்.– என்று கமநல சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-5,ரி)

# வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 4
வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை பொது நூலகத்தால் 2016ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் கடந்த முதலாம் திகதி முதல் முன்னெடுக்கப்படுகின்றன.
விஜயதசமி நாளாகிய எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை வித்தியாரம்ப நிகழ்வும், ஏடு வழங்குதலும், கல்வி ஊக்குவிப்புக்கான இலவச செயற்பாடாக நடைபெறவுள்ளன என்று சங்கானை பொது நூலக பொதுநூலகர் தெரிவித்தார்.
இது தொடர்பாக உரிய முன்னேற்பாடுகளுக்கான பதிவுகளை மேற்கொள்வதுடன், பதிவுகள் ஒழுங்குபடுத்தல் வசதிகளுக்காகவே என்றும் தெரிவிக்கப்பட்டது.
நூலக விரிவாக்கல் சேவைகளில் மழலைகளுக்கான இந்த நிகழ்வில் சென்ற முறை பதினைந்து சிறார்கள் பங்குபற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு சாரதிகளுக்கு 2 மாத கடூழியச் சிறை ஒரு வருட சாரதியத்தடை

யாழ்ப்பாணம், ஒக். 4

மதுபோதையில் மோட்டார் வாகனங்களை செலுத்திய 4 பேருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று 2 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையுடன் தண்டமும் விதித்தது.

அதே குற்றச்சாட்டுள்ள இருவரின் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழக்கு முடியும் வரை இடை நிறுத்தப்பட்டது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் தோப்பாய் பகுதிகளில் போக்குவரத்துப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் மதுபோதையில் மோட்டார் வாகனங்களைச் செலுத்திய குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் மன்றில் நேற்றும், நேற்று முன்தினமும் முற்படுத்தப்பட்டனர். குற்றச்சாட்டை 4 இளைஞர்கள் ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு 2 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஒவ்வொருவரையும் 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்துமாறும், அவர்களுடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்கு இடைநிறுத்துமாறும் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

குற்றச்சாட்டை மறுத்த இருவர் தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையிலும் 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். அவர்களுடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும்வரை இடைநிறுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ற-4,103)

# கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு ஆண்டிறுதிக்குள் மின் இணைப்பு

## மாவட்ட மின்சாரசபை பகுதி அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் 5 ஆயிரத்து 885 குடும்பங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளது. நாடே வெளிச்சம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட மக்களின் மின் இணைப்புக் கோரிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தியாக்கப்படும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மின்சாரசபை பகுதி அதிகாரி குகராஜ் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 362 குடும்பங்களுக்கு மின்சார வசதி தேவையாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. ஆயினும் நாடே வெளிச்சம் திட்டத்துக்கு ஆயிரத்து 401 விண்ணப்பப் படிவங்கள் மின்சார சபைக்கு கிடைத்துள்ளன. இந்த அதிகரிப்பு தொடர்பாக கரைச்சி உதவி திட்டமிடல் பணிப்பாளரிடம் கேட்டபோது மக்கள் தற்போதும் வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி நாடுகளிலும் இருந்தும் வந்து குடியமர்கின்றனர். திருமணம் செய்தும் இங்கு வந்துள்ளனர். இவர்கள் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்றார்.

கண்டாவளை பிரததேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 732 குடும்பங்களுக்கு மின்சாரம் தேவை என்றபோதும் 606 குடும்பங்களே நாடே வெளிச்சம் திட்டத்தில் மின்சார இணைப்புக்காக விண்ணப்பித்துள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 151 குடும்பங்களுக்கு மின்சாரம் தேவையாக உள்ளது. அவர்களில் 663 குடும்பங்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 640 குடும்பங்களுக்கு மின்சாரம் தேவையாக உள்ளது. ஆயிரத்து 624 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன.- என்றார்.

இந்தத் திட்டம் கடன் அடிப்படையில் இருப்பதாலும், மக்கள் தமது காணிகளில் நிரந்தரமாக வசிக்காததாலும் குறைந்தளவான மக்கள் விண்ணப்பித்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் நாடே வெளிச்சம் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் இந்த வருட இறுதிக்குள் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படும். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு மாத்திரம் சாவகச்சேரி மின்சார சபையால் இணைப்பு வழங்கப்படும். - என்று கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தெரிவித்தார். (ற-ரி3)

# தென்மராட்சி வீட்டுத் திட்டத்துக்கு அடுத்த கட்டப் பயனாளிகள் தெரிவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்துக்கான அடுத்த கட்டப் பயனாளிகள் தெரிவு ஆரம்பமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பதவிநிலை அலுவலர்கள், பத்து கிராம அலுவலர் பிரிவுக்கு ஒருவர் எனத் தெரிவு செய்யப்பட்டு அவர் தலைமையில் பயனாளிகள் தெரிவு இடம் பெறுகின்றது. அவருடன் கிராம அலுவலர், வாழ்வின் எழுச்சி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் போன்றோர் பயனாளிகள் வீட்டுக்குச் சென்று பார்வையிட்டு மதிப்பீடு செய்கின்றனர்.

மீள்குடியமர்வு அமைச்சால் இந்த வருடம் பிரதேசத்தில் வழங்கப்பட்ட 308 வீடமைப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவர்களது வீடுகளில் குடியமர்த்தும் நடவடிக்கையை பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வருடம் வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 308 பேரில் 5 பேர் வேலைகள் பூர்த்தி செய்து தமது வீடுகளில் குடியேறியுள்ளனர். 198 பேர் சுவரை வேலை முடித்து உள்ளக வேலைகள் மேற்கொண்டுள்ளனர். (ற-9)

# முல்லை. மாவட்டத்தில் இந்தமுறை 16,000 ஹெக்ரெயரில் நெற்செய்கை

யாழ்ப்பாணம், ஒக். 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் 16 ஆயிரத்து 889 ஹெக்ரெயரில் நெல் செய்கை செய்யப்படவுள்ளது. விவசாயி ஒருவருக்கு 5 ஏக்கருக்கே இந்த முறை மானிய உரம் வழங்கப்படும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

2016 - 2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் தங்கள் ஆரம்பகட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளனர். அது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே உதவிப் பணிப் பாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

விவசாயிகளுக்கு 5 ஏக்கருக்கு மட்டுமே உர மானியம் வழங்கப்படவுள்ளது. அதற்கு மேலதிகமாக நெற்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு உரமானியம் வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது. உறுதியான முடிவு இன்னும் எமக்கு அறிவிக்கப்படவில்லை.

மேட்டுக்காணிகளில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் இந்த முறை மானியம் வழங்கப்படவுள்ளது. மேட்டுக்காணிகளில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் நிலப்பரப்பின் விவரங்கள் தற்போது கமநல சேவை நிலையங்களால் திரட்டப்படுகின்றன.

பசளை மானிய பதிவுகளை 30 ஆம் திகதிக்கு முன்னர் தரும்படி கேட்கப்பட்டிருந்தது. தற்போது சிறிது கால நீடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. எதிர்வரும் 10 ஆம் திகதிவரை பசளை மானிய பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

காலபோக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் குறிப்பிட்ட திகதிக்குள் விதைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க அந்தந்த கமநல சேவை நிலையங்களில் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அதில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன - என்றார். (ற-4,ரி7)

ஓராண்டு நினைவு அஞ்சலி



யாழ்ப்பாணம் பருத்தித்துறை புலோலி மேற்கை
பிறப்பிடமாகவும்
மட்டக்களப்பை வசிப்பிடமாவும் கொண்ட
திருமதி. விஜிதா லிண்டன் சேவியர்
EXECUTIVE OFFICER
BANK OF CEYLON , CHENKALADY
மலர்வு: 14.02.1980 உதிர்வு : 16.10.2015
திதி: 04.10.2016
உமது ஆத்மா சாந்திக்காக அஞ்சலிக்கின்றோம்
ஓம் சாந்தி!
இங்ஙனம் : கணவர்- லிண்டன் சேவியர்

Wickramarachchi
HEARING CARE
உலக முதியோர், சிறுவர் தினத்தை முன்னிட்டு



- இலவச காது கேள்தகைமை பரிசோதனை ( Free Hearing test )
- இலவச காது கேள்தகைமை மதிப்பீடு ( Free Hearing Assessment )
- இலவச கண் பார்வை பரிசோதனை ( Free Vision test )

தெரிவுசெய்யப்பட்ட மூக்குகண்ணாடி மற்றும் காதுகேள் கருவிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்.

சலுகைக்காலப் பகுதி : அக்டோபர் 04,05,06 ஆம் திகதிகளில்

ஜெ.எம். விக்கிரமராச்சி அன் கம்பனி
இல.178, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 021 221 9288 / 021 222 8109 / 077 5051 945
www.wickramarachchiopticians.com / www.hearingsrilanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிக்கு எதிராக வீரவன்ச அணி நேற்றுப் போராட்டம்

## கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில்



கொழும்பு, ஒக். 4
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வில் தெரிவித்த கருத்துக்களுக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று கொழும்பில் போராட்டமொன்று இடம்பெற்றது.

மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் மகளிர் பிரிவினரே இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை மத்திய ரயில் நிலையத்துக்கு முன்பாக திரண்ட சுமார் ஐம்பது பேர் வரையிலான பெண்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் கடந்த 24ஆம் திகதி நடத்திய எழுக 'தமிழ் நிகழ்வில்' மோசமான இனவாதத்தைத் தூண்டும் வகையில் கருத்துக்களை முன்வைத்துள்ளதாகக் குற்றம்சாட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள், இந்தக் கருத்துக்களை அவர் மீளப்பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

விக்னேஸ்வரன் இனவாதியென்றும், அதற்காக அவர் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் தெரிவித்து விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியினர் தமது மகளிர் பிரிவினரைக் கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தின்போது மைத்திரி, ரணில் தலைமையிலான அரசு மேற் குலக நாடுகளின் அடிவருடிகளாக செயற்பட்டு வருவதாகவும், அதனாலேயே மேற்குலகைத் திருப்திப்படுத்துவதற்காக நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் புதிய அரசியல் யாப்பைத் தயாரித்து வருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சாட்டினர்.

ஏராளமான படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்தும், அவயவங்களைப் பறி கொடுத்தும் ஒருங்கிணைத்த நாட்டை மீண்டும் பிளவுபடுத்திப் பிரிவினைவாதிகளுக்குச் சார்பாக செயற்படுவதன் ஊடாக மேற்குலக நாடுகளைத் திருப்திப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் மகளிர் பிரிவினர் வலியுறுத்தினர். (த)

# ஆசியப் பாதுகாப்பு மாநாட்டில் கோத்தா

## அனுமதி வழங்கியது நீதிமன்றம்

கொழும்பு, ஒக். 4
சீனாவில் இந்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஆசிய பிராந்திய நாடுகளின் பாதுகாப்பு மாநாட்டில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய அவன்ட்கார்ட் பாதுகாப்பு நிறுவன வழக்கில் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலே, கோத்தபாயவுக்கான தடையைத் தளர்த்தி நேற்று கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டிய இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

சீனா செல்வதற்குக் கோத்தபாய ராஜபக்ச விடுத்த கோரிக்கைக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரும் நீதிமன்றில் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அவன்ட்கார்ட் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்க அனுமதித்ததால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய பெருந்தொகை நிதியைக் கிடைக்காது தடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உட்பட 7 பேருக்குக் கடந்த 30 ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் பிணை வழங்கியிருந்தார்.

எனினும், கோத்தபாய உள்ளிட்ட ஏழு பேருக்கும் வெளிநாடு செல்ல நீதிவான் தடை விதித்திருந்தார்.

இந்த நிலையில் சீனாவில் இந்த மாதம் 7ஆம் திகதியில் இருந்து 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆசிய பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்கு அழைப்புக் கிடைத்துள்ளதாக்வும், அதனால் அவருக்கான தடையை தளர்த்திச் சீனா செல்ல அனுமதி வழங்குமாறும் கோத்தபாயவின் சட்டத்தரணிகள் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமைய குறித்த கோரிக்கையைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டிய, நாளை ஐந்தாம் திகதி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை கோத்தபாய வெளிநாடு சென்றுவர அனுமதி வழங்கியுள்ளார். (த)

# வடக்குப் பிரச்சினை; நியூசிலாந்தில் பேச்சு

கொழும்பு, ஒக். 4
இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு எவ்வாறான உதவிகளை வழங்க முடியும் என்பது தொடர்பிலும் இலங்கையின் வடக்குப் பிரச்சினை குறித்தும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விரிவாகக் கலந்துரையாடியதாக நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ தெரிவித்தார்.

நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ, தலைமையிலான குழுவினருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் இடையில், இருதரப்பு பேச்சு, ஹெறாக்லாண்டில் உள்ள அரச இல்லத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன் பின்னர், நியூசிலாந்துப் பிரதமரும் இலங்கைப் பிரதமரும் இணைந்து, கூட்டாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய நியூசிலாந்துப் பிரதமர், இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்திக் கொள்வது தொடர்பில், பரந்தளவில் ஆராயப்பட்டது. வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட விடயங்களுக்கு இந்தச் சந்திப்பின் போது முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

அத்துடன் கொழும்பில், நியூசிலாந்து தூதரகத்தை நிறுவுவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கூடுதல் கரிசனை காட்டப்பட்டது. இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் இடையில், பொருளாதாரம் மற்றும் விவசாயம், பாற்பண்ணை உள்ளிட்ட துறைகளில் எவ்வாறான ரீதியில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

இலங்கையின் வடக்கு மாகாணம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் அரசமைப்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் குறித்தும், விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இவ்விரு விடயங்களிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பது தொடர்பில், எமது தரப்பின் சார்பில், இலங்கைப் பிரதமர் உள்ளிட்ட குழுவினரிடம் எடுத்தியம்பப்பட்டது - என்றார். (த)

# சார்க் கலாசாரத்தை இலங்கை பாதுகாக்கும்

கொழும்பு, ஒக். 4
பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமபாத்தில் நடைபெறவிருந்த 19ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இலங்கை எடுத்த தீர்மானமானது, ஒரு தரப்பை மாத்திரம் கருத்திற்கொண்டு எடுத்த தீர்மானம் இல்லை என்று தெரிவித்த அரசு, சார்க் கலாசாரத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதெனவும் கூறியுள்ளது. (த)

# குடிதண்ணீரை சகலரும் சிக்கனமாகப் பாவியுங்கள்

கொழும்பு, ஒக். 4
அத்தியாவசியத் தேவைகளைத் தவிர வேறு தேவைகளுக்காக குடிதண்ணீரைப் பயன்படுத்த வேண்டாமென, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை, பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேல், தெற்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாண நீர்த் தேக்கங்களின் நீர் மட்டங்கள் குறைந்துள்ளன. அத்துடன், தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக, நீரின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. இதனால், நீருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என அந்தச் சபை தெரிவித்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நீர் விநியோகிக்கப்படாத பிரதேசங்கள், பெரியளவிலான நீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளன. அந்தப் பிரதேசங்களுக்கு, பவுசர்கள் மூலம் நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதனால், நீரை மிகவும் சிக்கனமான முறையில் பயன்படுத்துமாறும், அந்தச் சபை கேட்டுள்ளது.

இதேவேளை, தற்போது நிலவும் வறட்சியான காலநிலை, எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னர் மாற்றமடையுமெனத் தெரிவித்துள்ள காலநிலை அவதான நிலையம், அந்தத் தினத்துக்குப் பின்னர், நாட்டில் பருவ மழையை எதிர்பார்க்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (த)





எதிர்கால வெற்றிக்கு
சிறந்த முதலீடு
உங்கள் வாழ்க்கையின் சகல படிகளுக்குமேற்ற திட்டமொன்று எம்மிடமுள்ளது

© 011 5 800 800

UNION BANK
INVEST PLUS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு

## அடக்குமுறைகளைக் கண்டு காலில் விழமாட்டேன் என்று கொதித்தெழுகிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, ஒக். 4
பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு எனக் கூறியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தற்போதைய அரசு தங்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறைகளைக்கண்டு காலில் விழுந்து உயிர் பிச்சைக் கேட்கும் இனமல்ல என்றும் கூளுரைத்துள்ளார்.

தனது அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களே தற்போது, தனது ஆட்சியில் மிகவும் மோசமான ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டி, தனக்கும் தனது குடும்பம் மற்றும் விசுவாசிகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுத்து வருவது வேடிக்கையாக இருப்பதாகவும் மகிந்த கூறியுள்ளார்.

தென்பகுதிக் கரையோரப் பிரதேசமான வெலிகம பகுதியில் நேற்றுமுன்தினம் கூட்டு எதிர்க்கட்சியின் வெலிகம தொகுதி அமைப்பாளர் பதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்குக் கூட்டு எதிர்க்கட்சியின் அமைப்பாளர் பதவியை மகிந்த வழங்கினார்.

இதனையடுத்து அங்கு உரையாற்றிய மகிந்த,

எனது ஆட்சியில் மேற்கொண்ட திட்டங்களைத் தாங்கள் செய்ததாக விளம்பரப்படுத்தி வரும் தற்போதைய அரசு, பெரும் எடுப்பில் திறப்பு விழாக்களை நடத்தி வருகிறது.

கடந்த ஆட்சியில் நாம் எதனையும் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டும் இவர்களுடனேயே நான் ஆட்சி நடத்தினேன் என்று நினைக்கும்போது வெட்கமாக இருக்கிறது. அமைச்சரவையில் இருந்தவர்களே என் மீதும், எனது குடும்பத்தினர் மீதும், எனது விசுவாசிகள் மீதும், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சிறையில் அடைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சிறைவாசம் என்பது எமக்கு புதியதல்ல. சிறையைக் கண்டு நாம் அஞ்சப்போவதில்லை. எனினும் அனைத்துக்கும் ஒரு எல்லை உண்டு.

ஒருவரைத் தொடர்ச்சியாக ஒடுக்கினால், ஒரு கட்டத்தில் அவர் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்.

அதேபோல் தாங்களும் விரைவில் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் காலம் வந்துவிடும்.

நாங்கள் அடக்குமுறைகளைக் கண்டு காலில் விழுந்து உயிர் பிச்சைக் கேட்கும் இனம் அல்ல- என்றார். (து)

## சிறிலங்கன் விமான சேவைக்கு 7 புதிய விமானங்கள் விரைவில்

சிறிலங்கன் விமான சேவைக்கு மேலும் ஏழு விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய விமான சேவையான சிறிலங்கன் விமான சேவை கடந்த சில வருடங்களாக நட்டத்தில் இயங்கி வருகின்றது. இதன் காரணமாக அண்மையில் இந்த விமான சேவைக்குச் சொந்தமான நான்கு விமானங்கள் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இவ்வாறு கூறியுள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பு, தொட்டலங்க பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நட்டத்தில் இயங்கிய போதிலும், தேசிய விமான சேவையை நடத்திச் செல்வது அரசின் பொறுப்பு என்றும், அதன் காரணமாகவே புதிதாக ஏழு விமானங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (து)



இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்
2 ஆம் நாள் பிரமோற்சவ தினம் (04.10.2016)
இரவு 7.00 மணிக்கு ஏகாந்த சேவை திருவூஞ்சல்
இசை ஆராதனை
பாட்டு - சிதம்பரம் இசைமைந்தன், நயினை ப.சிவமைந்தன்.
வயலின் - அ.ஜெயராமன்.
மிருதங்கம் - ஜி.வசந்
மதியம் அன்னதானம்.
(C 25486) (14,17,18)
ஆலயதர்மகர்த்தா.

# லிந்துலை நகரைச் சுற்றி தொழிலாளர் போராட்டம்

## 8ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கிறது



கொழும்பு, ஒக். 4
சம்பள உயர்வை வழங்காது இழுத்தடிக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கு எதிர்வரும் காலத்தில் நல்ல பாடம் புகட்டுவோம் என்று- தெரிவித்து, லிந்துலை நகரைச் சுற்றிவளைத்த 8 இற்கும் மேற்பட்ட தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் ரொஷான் இராஜாதுரையின் உருவ பொம்மை ஒன்றுக்குப் பாதணி மாலையிட்டுத் தொழிலாளர்கள் தூக்கிவந்து எரியூட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்டத் தொழிலாளர்களை முதலாளிமார் சம்மேளனம் ஏமாற்றுவதற்குத் தொழிற்சங்கங்கள் துணை போகும் என்றால், தொழிற்சங்கங்களையும் இவ்வாறே எரியூட்டுவோம் என போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு போராட்டத்தில் தீ வைக்கப்பட்ட உருவப் பொம்மையை லிந்துலைப் பொலிஸார் தண்ணீர் ஊற்றி அணைத்தனர். அதேவேளை, வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுப்பட வேண்டாம் என பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டபோதும், தலவாக்கலை-நுவரெலியா பிரதான வீதியில் அம்புலன்ஸ் வண்டியை மட்டும் செல்ல அனுமதித்த தொழிலாளர்கள் ஏனைய வாகனங்களைச் செல்ல விடவில்லை.

சுமார்ஒருமணிநேரம்நுவரெலியாஹற்றன் பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. பொலிஸ் உத்தரவை மீறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும், அவர்கள் தொடர்பில் புகைப்படங்கள் மற்றும் தகவல்கள் திரட்டப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை-தலவாக்கலை தொழிற்சாலைக்கு அருகிலும் தோட்ட மக்கள் வாகன நெரிசலை ஏற்படுத்தாது போராட்டத்தை நடத்தினர். அதேபோன்று தலவாக்கலை நானுஓயா தோட்டத் தொழிலாளர்களும் தலவாக்கலை நகர சபைக்கு முன்பாகப் பிரதான வீதிக்கு அருகில் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

அத்தோடு தலவாக்கலை கிறேட்வெஸ்டன், கல்கந்தவத்தை ஆகிய தோட்டங்களிலும் மெராயா தங்கலை, ஊவாக்கலை ஆகிய தோட்டங்களிலும், போராட்டங்கள் இடம்பெற்றது. ஹற்றன் பிரதேசத்தில் வட்டவளை மற்றும் குயில்வத்தை ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்களின் போராட்டமானது ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியை அண்மித்தே இடம் பெற்றது. மேலும் பொகவந்தலாவ, நோர்வூட், பத்தனை குயின்ஸ்பெரி, சாமிமலை, கவரவில் எனப் பல பாகங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (து)



வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
இன்று (04.10.2016)
செவ்வாய்க்கிழமை
மூன்றாம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
மயூரன்ஸ் நகைமாளிகை
Mayurans Nakai Malikai
22 கரட் தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 Karat Gold Jwellery
இல. 95,, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3015, 077 651 0251



வல்லிபுர ஆழ்வார்
இன்று (04.10.2016)
செவ்வாய்க்கிழமை
5 ஆம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
SB TRAVELS AND TOURS (PVT) LTD
212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Indian Visa Online
விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்வதற்கு 100/= மட்டுமே.
சென்னை 25,000/=
மதுரை 18,500/=
இங்கு அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களையும், வீசாக்களையும் மிகச் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ளலாம்.
ஐயப்பன பக்தர்களுக்கான விமானப்பயணச் சீட்டுக்கான முன்னேற்பாடுகள் நடைபெறுகின்றன.
இந்தியாவுக்கான வீசாக்கள் வெகு விரைவிலும், மலேசியா மற்றும் பல நாடுகளுக்கான விசாக்களும் பயணக்காப்புறுதி (Travel Insurance).
Hotel முன் ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான பயணச்சீட்டில் விசேட விலைக்கழிவுகளும், விசா ஆலோசனைகளும் வழங்கப்படும்.
021 222 7 111
021 222 7 666
021 222 8 555
021 222 9 555
076 691 1080,81,82,83
sbtravels212@gmail.com
sbtravelsjaffna@gmail.com
www.sbtravels.lk / sbairfares.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சித்தார்த்தனுக்கு கிட்டுமா ஞானம்?

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்திருக்கும் கருத்து ஒன்று அவர் தமிழ் மக்களைப் படு முட்டாள்கள் என்று கருதுவதை வெளிப்படுத்தியிருக்கிறது. தமிழர்கள் நடந்தவற்றை இலகுவில் மறந்துவிடக்கூடிய மாந்தர்கள் என்று கருதுகிறார் என்றும் தெரிகிறது.

“தென்பகுதியில் உள்ள சிங்கள இனவாதிகள் குழப்புவார்கள் என்பதற்காக நாம் எமது உரிமைகளைக் கேட்காமல் இருக்கமுடியாது. கேட்டும் அவர்கள் செய்யவில்லை என்பதற்காக கேட்காமல் இருக்கவும் இயலாது” என்கிறார் சித்தார்த்தன்.

கருத்தில் தவறில்லை. ஆனால், அதை இப்போது சொல்வதில் சித்தார்த்தனுக்கு இருக்கும் உள்நோக்கம்தான் விவாதத்திற்குரியது. இதையேன் அவர் 2009இற்கு முன்னர் சொன்னதில்லை?

இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதம் தூக்கியவர்களில் ஒருவர் சித்தார்த்தன். இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பின்னர் அதைக் கைவிட்டு கொழும்பின் பக்கம் சாய்ந்து கொண்டவர்களிலும் ஒருவர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை இராணுவத்துக்கு எதிராகக் கடுமையாகப் போராடியபோது இராணுவத்தினருடன் இணைந்து இயங்கியவர். இன்னும் ஆழமாகச் சொன்னால், தற்போது இனவாதிகள் என்ற சொற்பதத்துக்குள் சித்தார்த்தன் அடக்கும் மகிந்த ராஜபக்சவுக்கும் நெருக்கமானவர்.

2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி வரையில் மட்டுமல்ல, அதன் பின்னரும்கூட இலங்கை இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கியவர்கள் சித்தார்த்தனும் அவரது இயக்கத்தினரும். ஆனால் அப்போது கூடத் தமிழர்களின் உரிமைக்காக உரத்துக் குரல் எழுப்பவேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றியதில்லை. ஆர்ப்பாட்டம், ஊர்வலம் செய்யவேண்டும் என்று தோன்றியதில்லை. குறைந்தபட்சம் மகிந்த போன்ற அரசியல் தலைவர்களைச் சந்திக்கும் கூட்டங்களிலாவது அதை வலியுறுத்தவேண்டும் என்றும் தோன்றியதில்லை.

ஆனால், இப்போது தோன்றுகின்றது. மகிந்தவும் அவரது கூட்டாளிகளும் இனவாதிகளாகத் தோன்றுகிறார்கள். அவர்கள் குழப்புவார்கள் என்பதற்காக தமிழர்களின் உரிமைகளைக் கேட்காமல் இருக்க முடியாது என்றும் தோன்றுகின்றது.

இது சுத்த ஏமாற்று வேலையல்லவா?

அன்று, தமது சுயநலனுக்காகவே சித்தார்த்தன் போன்றவர்கள் அமைதியாக இருந்தார்கள். இன்றும் தமது சுயநலனுக்காகவே வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் சேர்ந்து ஊர்வலம் செல்கிறார்கள். மக்களை ஏமாற்றுகிறார்கள். இப்படித்தானே ஏமாற்றி ஏமாற்றி பல நூறு இளைஞர்களை இவர்கள் அன்றும் பலி கொடுத்தார்கள்! தூண்டித் தூண்டி சகோதரப் போருக்குள் தள்ளிக் கொன்றுவிட்டுத் தப்பிக்கொண்டார்கள்.

இப்போது அவற்றையெல்லாம் மக்கள் மறந்துவிட்டார்கள், அவர்கள் முழு முட்டாள்கள் என்று எண்ணிக்கொண்டு மீண்டும் உபதேசிக்கிறார்கள். உருவேற்றுகிறார்கள். மக்கள் அவருக்கு வாக்களித்தது ஒற்றுமையாகக் கிடந்துவிட்டுப் போங்கள் என்பதற்காகத்தானே தவிர, மீண்டும் பலி கேட்பதற்காக அல்ல என்பதை அவர் உணரவேண்டும்.

தலைவர்கள் என்பவர்கள் கொன்று வளர்பவர்கள் அல்லர், நின்று போராடி வென்று கொடுப்பவர்கள். சித்தார்த்தன் உணர்ந்துகொள்ள வேண்டும். கௌதம புத்தரின் பெயரைக் கொண்டிருப்பவர். இனியாவது ஞானம் பெறவேண்டியது கட்டாயம்.

ஐ.நா.சபையின் கௌரவத்தை ஈட்டிய

# அண்ணல் காந்தியின் அகிம்சை தத்துவம்

மு.ஈழத்தமிழ்மணி

ஐக்கிய நாடுகள் சபை, மகாத்மா காந்தி பிறந்த தினமான ஒக்ரோபர் 02ஆம் திகதியை சர்வதேச அகிம்சை தினமாக அங்கீகரித்துள்ளது. இந்த முறை, உலக நாடுகள் அந்தத் தினத்தை சிறப்பாகக் கொண்டாடியுள்ளன.

வன்முறைகளற்ற மக்களாக உலக மக்கள் உருவாக வேண்டும். வன்முறைகளற்ற விதத்தில் உலக நாடுகள் இயங்க வேண்டும். எங்கும் வன்மம், எதிலும் வன்மம் என்ற விதத்திலேயே இன்றைய உலகம் இயங்குகின்றது. வீட்டுக்கு வீடு தொடங்கி, நாட்டுக்கு நாடு என்றவாறு உலகம் முழுவதிலும் சகல இனங்களுக்கு மத்தியிலும் வன்முறைகள் தோற்றம் பெற்றவாறுள்ளன. உலகில் என்றைக்குமே நீடித்த அமைதி நிலவ ஒழுக்கமான மனிதர்களாக நாம் இருக்க வேண்டும். அன்பு, இரக்கம், கருணை மக்கள் மத்தியில் குறைந்து போகாமலிருக்க வேண்டும்.

> உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்ற வன்முறைகள் யாவும் நீடித்து செல்லாமலிருக்க வேண்டும். உலகநாடுகள் மனித நேயம் என்ற உயரிய அடிப்படை எண்ணத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அகிம்சைவழிக்கு உலகம் செல்லவேண்டும். உலகக் கட்டமைப்பு ஓர் ஒழுங்கு முறைக்குள் வரவேண்டும்.

### வன்முறைக் கலாசாரம் உலகில் விரவியுள்ளது

உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்ற வன்முறைகள் யாவும் நீடித்துச் செல்லாமலிருக்க வேண்டும். உலகநாடுகள் மனித நேயம் என்ற உயரிய அடிப்படை எண்ணத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அகிம்சைவழிக்குள் உலகம் செல்லவேண்டும். உலகக் கட்டமைப்பு ஓர் ஒழுங்கு முறைக்கு வரவேண்டும்.

ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் வன்முறைகள் ஏதோ ஒரு வழியில் உயர்ந்து செல்கின்றனவேயொழிய, அகிம்சைப் பாதையைக் கடைப்பிடிக்க பின்னடிக்கின்ற நிலையே நிலவுகிறது. அகிம்சை பற்றிய விழிப்புணர்வு இன்னமும் சமூகங்களில் குறைவாக இருப்பதை உணரமுடிகிறது.

உலகத்தில் எத்தனையோ விதங்களில் வன்முறைகள் தலை தூக்கியவாறுள்ளன. இது இருபத்தியோராம் நூற்றாண்டின் மிகப் பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. ஒவ்வொரு மனிதனும் வாழ்வியலில் அகிம்சை வழியை விட்டு விலகாதவாறு வாழவே விரும்பப்படுகின்றான். அப்படியே குடும்பவாழ்க்கையிலும் சமூகத்திலும் வன்முறை இடம் பெறவேண்டிய அவசியம் கிடையாது.

அகிம்சை வழியானது வாழ்வதற்கான ஒரு வழிமுறையாகும். அகிம்சைவழியில் எம் ஒவ்வொருவரினது வாழ்வும் அமையுமாக இருந்தால், தேவையற்ற வன்முறைகள் நம்மை விட்டு ஓடிவிடும். கட்டுக்கோப்பான ஒற்றுமையும், அமைதியும், சமூகத்தில் நிலவும்.

உலகம் இன்று அமைதியிழந்து இயங்குகின்றது. உலகளாவிய ரீதியில் ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் என்பவற்றால் உலகில் தினமும் இடம்பெறும் வன்முறைகள் குறித்த செய்திகள் வெளிக்கொணரப்படுகின்றன. அண்மைக்காலமாக உலகத்தில் வாழுகின்ற பல்வேறு இன, மத மக்களின் மீதான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. கொடூரமான வன்முறைகளால் பல இலட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளனர். பல லட்சம் குழந்தைகள் உணவின்றி மருந்து வகைகளின்றி உயிருக்குப் போராடி வருகின்றனர். தினமும் ஆயிரக்கணக்கானோர் வன்முறைச் சம்பவங்களினால் உலகத்தில் மரணிக்கின்றனர்.

உலக அரங்குகளில், அரசியல் ரீதியில் நீதிக்குப் புறம்பாக நடக்கின்ற பெரிய வன்முறைகளே இன்று மலிந்துள்ளன. ஐ.நா. சபை அகிம்சை தினத்தைப் பிரகடனம் செய்துள்ள நிலையில், உலகத்தில் தோன்றியுள்ள வன்முறைகள் யாவும் நீங்க அகிம்சை வழியில் நாம் செயற்படமுன் வரவேண்டும். அகிம்சை வழி என்பது சகலரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதொன்றேயாகும்.

### உலகால் போற்றப்படும் அண்ணல் காந்தியின் அகிம்சை தத்துவம்

அகிம்சை என்ற தத்துவம் அமைதி வடிவில் கடவுளைக் காட்டி நிற்கின்றது. அன்பு, கருணை, இரக்கம், அமைதி, சமாதானம் என்பவற்றின் வடிவில் கடவுளை அதில் நாம் காண்கின்றோம்.


இறைவனை தினமும் வணங்குகின்ற எந்த மதத்தவர்களாக இருந்தாலும் அமைதியும், சமாதானமும் தினம் நிலைக்க வேண்டும் என்ற உள்ளக் கருத்தையே ஆத்மார்த்தமாகக் கொண்டிருக்கின்றனர். அகிம்சை என்ற கடவுளை வணங்குகின்றபோது வன்ம உணர்வுகளை மறந்துவிடுகின்றோம். எழுகின்ற வன்முறைகளை - எண்ணங்களை முற்றாக நீக்கவேண்டும் என எண்ணுகின்றோம்.

மக்களாகிய நாம் நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்ந்து வருகின்றோம். இன்றைய கால கட்டத்தில் எழுந்துள்ள வன்முறைகளுக்கு முடிவுகாண வேண்டியது அவசியமான ஒன்றாகும். அகிம்சைமுறையில் வாழுகின்ற வாழ்க்கையானது உண்மையான அன்பும், அமைதியும், சமாதானமும் கொண்டதாகவேயிருக்கும்.

மக்கள் மத்தியில் புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை என்பவை அருகிக் கொண்டே வருகின்றன. உலக நாடுகள் பலவற்றில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் வன்முறைகளாக உருவெடுத்து தீராத தலைவலியாக மாறியிருக்கின்றது.

கடவுளுடைய பார்வையில் எவன் ஒருவன் அகிம்சை என்ற வாழ்வியலில் தன்னை அர்ப்பணித்து வாழ்கின்றானோ அந்த வழி போற்றப்படுகின்றது. அங்கே அகிம்சை தத்துவங்கள் உயர்வடைகின்றன.

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஸ்தமனத்தை நோக்கி

# சார்க் அமைப்பு

சேரலாதன்

எதிர்வரும் நவம்பர் மாதம் பாகிஸ்தானில் இடம்பெற விருந்த சார்க் நாடுகளின் உச்சி மாநாடு ஒத்திவைக்கப் படலாமெனத் தெரிகின்றது.

சார்க் என அழைக்கப்படும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களா தேஷ், நேபாளம், பூட்டான், ஆப் கானிஸ்தான், மாலைதீவு ஆகிய எட்டு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதன் தற்போதைய தலைமைப் பொறுப்பு நேபாள நாட்டின் வசம் உள்ளது.

19ஆவது சார்க் மாநாடு எதிர்வரும் நவம் பர் மாதம் பாகிஸ்தான் தலைநகர் இஸ் லாமாபாத்தில் இடம்பெறுவதற்கான ஏற் பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வந்த நிலையில், அது ஒத்திவைக்கப்படலா மெனத் தற்போது தெரியவருகின்றது.

### முஸ்லிம்களுக்கான நாடாக பாகிஸ்தான் அங்கீகரிப்பு

இந்தியாவும்-பாகிஸ்தானும் பரம எதிரிகள் என்பது உலகறிந்த விடயமாகும். மதரீதியான பிளவுகள் இந்தவிரு நாடுகளையும் எதிரிகளாக மாற்றிவிட்டன. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பதாக அங்குவாழ்ந்த இந்து, முஸ்லிம் மக்களுக்கு இடையில் மோசமான இனக்கலவரங்கள் இடம்பெற்றன. இதன் விளைவாகத்தான் பாகிஸ்தானின் சிற்பியான முக மதலி ஜின்னாவின் வேண்டுகோளின் பிரகாரம் ஆங் கிலேயர்கள் பாகிஸ்தான் என்ற முஸ்லிம் மக்களுக் கான நாடு உருவாகுவதற்கு அங்கீகாரமளித்தனர். 1971இல் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து சென்றமை வேறு கதை.

பாகிஸ்தானும், பங்களாதேஷும் பிரிந்து சென்ற பின் னரும், இந்தியாவில் கணிசமான அளவில் முஸ்லிம் மக்கள் வசிக்கின்றனர். இவர்களின் தொகை சுமார் 16 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றுகூட இந்திய முஸ்லிம்களும், இந்துக்களும் வெவ்வேறு சந்தர்ப் பங்களில் முரண்பட்டு நிற்பதைக் காணமுடிகின்றது. குறிப்பாக காஷ்மீர் பகுதியில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் மோசமான கட்டத்தை எட்டியுள்ளன. அங்கு மோதல்கள் இல்லாத நாளே இல்லையென்று கூறும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

### காஷ்மீர் இந்திய இராணுவ முகாம் மீதான தாக்குதலால் திருப்பம்

காஷ்மீரில் அமைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றின் மீது பாகிஸ்தானிலிருந்து ஊடுருவிய பயங்கரவாதி கள் மேற்கொண்ட தாக்குதலில் 18 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் இந்தியாவைக் கடுமையாகச் சீற்றமுறச் செய்துவிட்டது. பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்க வேண்டுமென்ற கோரிக் கைகளும் இந்தியாவில் எழுந்துள்ளன. இந்தியாவில் எழுந்துள்ள பாகிஸ்தானுக்கு எதி ரான உணர்வலைகளைத் தடுப் பது இந்திய மத்திய அரசுக்கு இலகு வானதொன்றல்ல. அதேவேளை பாகிஸ்தான் மீது போர் தொடுப் பதால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளும், அதற்குத் தெரி யாததல்ல. இந்தியாவும்-பாகிஸ் தானும் அணுவாயுதங்களைக் கொண்டிருப்பதால், கடுமையான போர் இடம்பெறும்போது இவற்றைப் பயன் படுத்த வேண்டிய தேவையும் எழும். இதனால் ஏற்படக் கூடிய அழிவுகளைச் சொல்லத் தேவையில்லை.

அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய இந்திய வெளி விவகார அமைச்சர், காஷ்மீரில் இடம்பெறுகின்ற பயங் கரவாதத் தாக்குதல்களின் பின்னணியில் பாகிஸ்தான் உள்ளதாகக் கடுமையாகக் குற்றஞ் சாட்டினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ் தானின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தியதுடன், இந் தியா மீது குற்றம் சுமத்தவும் தவறவில்லை. இது இந்தி யாவின் கோபத்தை அதிகரித்து விட்டது. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் சர்வதேச அரங்கில் தனி மைப்படுத்தப்படுவதற்கான காலம் கனிந்துள்ளதாக இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார். மேலும் சிந்துநதி நீர்ப்பகிர்வு, வர்த்தக உறவுக்கான சிறப்பு அந்தஸ்து உள்ளடங்கலான விடயங்களில், பாகிஸ்தானுக்கு எதி ரான நிலைப்பாட்டை இந்தியா எடுத்துள்ளது. அத்துடன் பாகிஸ்தானில் இடம்பெறப்போகும் சார்க் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாதென இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்தநிலையில் பாகிஸ்தானில் இயங்கிவரும் தீவிரவாதிகளின் முகாம்கள் மீது கடுமை யான கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றை முடக்கி வைக்குமாறு அமெரிக்கா பாகிஸ்தானிடம் கடுமை யான முறையில் கேட்டுக்கொண்டுள்ளது.

### சார்க் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக அமைப்பின் மூன்று நாடுகள் அறிவிப்பு

பங்களாதேஷின் உள்விவகாரங்களில் பாகிஸ்தானின் தலையீடுகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கும் அந்தநாடு, இத்தகைய சூழ்நிலையில் சார்க் மாநாடு வெற்றிகரமாக இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையெனவும், இந்தநிலையில் பாகிஸ்தானில் இடம்பெறுகின்ற மாநாட்டில் தமது நாடு கலந்து கொள்ளமாட்டாது என்றும் தெரிவித்துள்ளது. பூட் டானும், ஆப்கானிஸ்தானும்கூட சார்க் மாநாட்டைப் புறக்கணிக்கப்போவதாக அறிவித்து விட்டன. இவை தொடர்பான தகவல்கள் சார்க் அமைப்புக்குத் தலைமை தாங்கும் நேபாளத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சார்க் மாநாட்டை ஒத்திவைப்பதற்கான அறிவிப்பை நேபாளம் விரைவில் அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சார்க் உறுப்பு நாடுகளில் இந்தியா உள்ளிட்ட நான்கு நாடுகள் மாநாட்டைப் புறக்கணிப்பதாகத் தெரிவித் துள்ளமை சார்க் அமைப்பின் இருப்பையே கேள்விக் குறியாக்கி விட்டது. சார்க் அமைப்பின் பிரதான நாடு களான இந்தியாவும்-பாகிஸ்தானும் மோதிக் கொண் டிருக்கும் வரையில், எதிர்காலத்திலும் இந்த அமைப் பில் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாது. உள்ளதே எட்டு நாடுகள். இதிலும் ஒற்றுமையைப் பேண முடியாதுவிட்டால் தெற்காசிய நாடுகளுக்கென ஓர் அமைப்பு இருப்பதில் அர்த்தமே இல்லை.

## ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது

ஒரு சாதாரண பனையேறும்இயந்திரத்தை வடிவமைப்பதற்குக் கூட ஜப்பானியர்கள் தான் யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டுமா? வருடா வருடம் பட்டம் பெற்று வெளிவரும், விஞ்ஞான தொழில்நுட்ப பட்டதாரிகளால் இது முடியாதா? இவர்களின் கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காய் தானா? எமது மூலவளங்களையும்-மூளை வளங்களையும் பயன்படுத்தி பிரதேச அபி விருத்திக்கு உதவ முடியாத கல்வியும் கல்வித் திட்டமும் எதற்காக?

வருடாவருடம் ஆயிரக்கணக்கான பட்டதாரி களின் புகைப்படங்களை பத்திரிகையில் வெளி யிடுகிறீர்களே! என்ன, ஆள்கணக்கு காட்டு வதற்கா? ஒன்றை மட்டும் நினைவில் கொள் ளுங்கள். புவியீர்ப்பைக் கண்டுபிடித்த நியூட்டன் விஞ்ஞானப் பட்டதாரியல்ல. ஒரு சாதாரண கலைப்பட்டதாரி தான்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் பற்றிப் பெரு மையாகப் பேசுகின்றோமே, அது வெறும் மாயை தானா? எங்கள் புலம்பெயர் கல்விமான்கள்கூட ஏதாவது புதிய கண்டுபிடிப்புக்களை செய்து, பிரதேச வளர்ச்சிக்கு உதவுகிறார்களில்லையே? குண்டூசிகூட ஜப்பான்காரர்கள் தான் கண்டு பிடித்துத் தரவேண்டுமானால், எங்கள் கல்வியின் நோக்கம்தான் என்ன? எல்லாமே பயனற்ற கல் வித் திட்டங்கள் தானா?

விஸ்வாஸ்.

## துயர்துடைக்க கைகொடுப்போம்


அண்மையில் கிளிநொச்சி சந்தையில் ஏற்பட்ட தீவிபத்தின் பின்னர் பாதிப் படைந்த வர்த்தகர்களுக்கு உதவுமாறு கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினர் உருக்கமான வேண்டுகோளை அனைத்துத் தரப்பினரிடமும் விடுத்துள்ளனர். எமது கண்முன்னே கிளிநொச்சி நகரமானது 1ஆம், 2ஆம், 3ஆம் என ஒவ்வொரு கட்ட ஈழப்போரிலும் சிதைந்து, பின்னர் அந்தப்பிரதே மக்களது விடாமுயற்சியால் எழுந்து நிற்கின்றது. இறுதியாக நடந்த இறுதிப் போரில் கிளிநொச்சி நகரம் அழிந்த விதம் எல்லோரும் அறிந்ததே. அதன் பின்னர் மக்கள் படிப்படியாக மீண்டுவந்த நிலையில், அவர்களுக்கு தீயினால் மீள முடியாத அழிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் எமது சமூகத்திலுள்ள ஒவ் வொருவரும், ஒவ்வொரு சங்கங்களும் தங்களால் இயன்றளவு உதவியைச் செய்ய முன்வரவேண்டும்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரை மருத்துவர் சங்கம், வடமாகாண மருத்து வர் அமையம், சட்டத்தரணிகள் சங்கம், தாதியர் சங்கம், வர்த்தக சங்கம், மீன் பிடிச் சங்கம், போக்குவரத்துச் சங்கம் மற்றும் ஆசிரியர் சங்கம் போன்ற ஏராளமான சங்கங்கள் உள்ளன. சிறுதுளி பெருவெள்ளம் போல் ஒவ்வொரு சங்கங்களும் தங்களது உறுப்பினர்களுடாக இயன்ற நிதியைத் திரட்டி கிளிநொச்சி வர்த்தக சங்கத்திடம் வழங்குவதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களின் துன்பம் போக்க முன்வரவேண்டும். அனைத்து சமூகத்தினருக்கும் முன்னு தாரணமாக எமது சமூகம் திகழ வேண்டும். எனவே, அனைவரும் பாதிக்கப் பட்ட கிளிநொச்சி வர்த்தகர்களுக்கு உதவ முன்வருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சி.சிவகுமார், திருநெல்வேலி.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அமெரிக்கத் தேர்தல் களம் சிந்தித்து வாக்களியுங்கள்

## திருத்தந்தை அறிவுரை

வொஷிங்ரன், ஒக். 4

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முன்னர் மக்கள் நன்கு சிந்து வாக்களிக்க வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபையின் தலைவரானதிருந்தை பிரான்ஸிஸ் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இருபிரதான கட்சிகளில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் பிரச்சாரங்கள் சூடு பிடித்துள்ளன. இந்த நிலையிலேயே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார். அசர்பைஜான் நாட்டுக்குச் சென்று திரும்பும்போது தனது பிரத்தியேக விமானத்தில் இருந்தவாறு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முன்னர் தீர்க்கமான முடிவுடன் வாக்களியுங்கள். வேட்பாளர்கள் தரும் தேர்தல் வாக்குறுதிகள், கொள்கைகளை ஆராய்ந்து, கடவுளிடமும் மன்றாடி உரிய நபருக்க வாக்களிக்க வேண்டும். கட்சி சார்ந்து சிந்திக்காமல் கொள்கை சார்ந்து சிந்திக்க வேண்டும் என்று பாப்பரசர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக ஜனாதிபதியானால் மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் எழுப்பப்படும் என்று டொனால்ட்ரம்ப் தெரிவித்தமைக்கு பாப்பரசர் தனது அதிருப்தியைத் தெரிவித்ததுடன், உண்மையான கிறிஸ்தவர்கள் சுவர் எழுப்பமாட்டார்கள், மாறாக பாலம் அமைப்பார்கள் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

# கறுப்பினத்தவர்களின் கவலை மிகவும் அனுதாபத்துக்குரியது

## ஹிலாரி கிளிங்ரன் வருத்தம்

வொஷிங்டன், ஒக். 4

இளைய தலைமுறை தொடர்பாக, அமெரிக்காவில் உள்ள மூத்த கறுப்பினத்தவர்களது கவலை மிகவும் அனுதாபத்துக்குரியது என தனது வருத்தத்தைத் தெரிவித்தார் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான ஹிலாரி கிளிங்ரன்.

வட கரோலினாவில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றுக்குச் சென்றிருந்த ஹிலாரி கிளிங்ரன் அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எனக்கும்பேரப்பிள்ளைகள்உண்டு. அவர்களது எதிர்காலம் தொடர்பாக எனக்கு அதிக கவலை உண்டு. ஆனால் கறுப்பின முதியவர்களின் கவலை போன்று இல்லை. சமீபகாலமாகப் பொலிஸார் கறுப்பினத்தவர்களை காரணமின்றி சுட்டுக் கொன்று வருகின்றனர். பொலிஸார் உள்நோக்கத்துடன் செயற்படுகின்றனர். கறுப்பின முதியவர்களின் கவலை ஆழமானது, மிகவும் அனுதாபத்துக் குரியது. இந்த விடயம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)





# கொலம்பி... எதிர்த்து...

பொகோட்டா, ஒக். 4

கொலம்பியாவில் அரசுக்கும், ஆ... வுக்கும் இடையில் சமாதான ஒ... ஏற்பட்டமையை அடுத்து, கொலம்பி... கண்டித்து அந்த நாட்டின் மக்க... ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடடு வருகின்...

கொலம்பிய அரசுக்கும் பராக் ... குழுவுக்கும் இடையில் கடந்த அரை... டுக்கும் மேலாக போர் நடைபெற்ற... இதுவரை 2 லட்சத்து 20 ஆயிரம் ... லப்பட்டனர். ஏராளமான மக்கள் அ... களானார்கள். பல கோடி பெறுமதியா... துக்கள் சேதமடைந்தன. இந்த நி... கொலம்பியா அரசுக்கும் பராக் ஆயுத... கும் இடையில் அண்மையில் போ... ஒப்பந்தம் ஏற்பட்டது. பராக் ஆயுதக்... னிடமிருந்த சிறுவர் போராளிகளை...

# எய்ட்ஸிலிருந்து பூரண குணம் பிரிட்டன் மருத்துவர்கள் சாதனை



லண்டன், ஒக். 4

எய்ட்ஸ் நோயாளி ஒருவரை பிரிட்டன் மருத்துவர்கள் பூரணமாக குணமடைய வைத்து சாதனை படைத்துள்ளனர்.

பிரிட்டனின் 5 பல்கலைக்கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விஞ்ஞானிகள், 50 எய்ட்ஸ் நோயாளிகளிடையே தமது ஆய்வுகளையும் பரிசோதனைகளையும் முன்னெடுத்தனர். அவர்களில் ஒருவர் எய்ட்ஸ் நோயிலிருந்து பூரணமாக குணமடைந்துள்ளார். எய்ட்ஸ் நோயாளி ஒருவர் முழுமையான குணமடைவது இதுவே முதற் தடவை.

எய்ட்ஸிலிருந்து மனித இனத்தைப் பாதுகாக்கும் முதல் அடியை எடுத்து வைத்துள்ளதாகக் குறித்த விஞ்ஞான குழுவின் பணிப்பாளர் மார்க் சாமுவேல் தெரிவித்தார்.

எய்ட்ஸுக்கு எதிராக போராடுவது மிக சவாலான விடயமாக இருந்தது. காரணம், எச்.ஐ.வி. கிருமி நோய் எதிர்ப்பு ஆற்றலை தாக்கும் வலிமை உடையது. இந்த மருத்துவ சிகிச்சை முறையில், தடுப்பூசியும், மருந்துகளும் பயன்படுத்தப்பட்டது. தடுப்பூசி மூலம் கிருமி குருதியில் இருந்து அழிக்கப்பட்டதுடன், நோயெதிர்ப்பு சக்தியைப் பாதுகாக்கும் மருந்து வழங்கப்பட்டது. இவ்வாறான நீண்ட போராட்டத்தின் பின்னரே குறித்த நோயாளி எய்ட்ஸிலிருந்து முழுமையான விடுதலை பெற்றார். இது முடிவு அல்ல ஆரம்பம். இதனை முன் மாதிரியாகக் கொண்டு ஏனைய மருத்துவ ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)

எத்தியோப்பியா

# அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 50 பேர் சாவு; பலருக்குக் காயம்



அடிஸ் அபாபா, ஒக்.4

எத்தியோப்பியாவில் அரசுக்கு எதிராக வெடித்த மக்கள் கலவரத்தில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் 50 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர்.

[illegible] எத்தியோப்பியாவின் பிசொப்டு நகரில் வருடாந்தம் நடைபெறுவது வழமை. நடப்பு வருடத்துக்கான நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வின் போது கிட்டத்தட்ட 20 லட்சம் மக்கள் குழுமியிருந்தனர். அவர்கள் திடீரென எமக்குச் சுதந்திரம் வேண்டும், எமக்கு நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பி அரசுக்கு எதிராக போராடினார்கள். போராட்டம் கட்டுக்கடங்காமல் போனதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 50 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள், தடைசெய்யப்பட்ட போராளிக் குழுக்களின் கொடிகளை அசைத்தமையையடுத்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பியாவில் அமைதி ஒப்பந்தம்
# து பொதுமக்கள் கொதிப்பு


ஆயுதக்குழு
ன ஒப்பந்தம்
ம்பிய அரசைக்
மக்கள் பலர்
கின்றனர்.
ாக் ஆயுதக்
ரைநூற்றாண்
பற்று வந்தது.
ம் பேர் கொல்
அங்கவீனர்
தியான சொத்
த நிலையில்
ஆயுதக் குழுவுக்
போர் நிறுத்த
யுதக்குழு தன்
ளை விடுவிப்

பதாக உறுதியளித்து படிப்படியாக செயற்படுத்தியும் வருகிறது. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர், ஆயுதக்குழுவுடன் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையை ஏற்கவில்லை.
இந்த நிலையில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டமை தொடர்பாக, பொதுமக்கள் வாக்குப் பதிவு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கிட்டத்தட்ட 64 லட்சம் மக்கள் வாக்களித்தனர். அவர்களில் 50.22 சதவீதமானோர் போராளிக்குழுவுடன் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. தவிர, இந்த சமாதான ஒப்பந்தத்தை எதிர்த்து பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 52 வருடங்கள் இடம்பெற்ற போரில் உறவுகள், உடைமைகயை இழந்த எமக்கு எவ்வாறு நியாயம் கிடைக்கும்.
மன்னிப்பது என்றால் இழப்பை யார் ஈடு செய்வது என ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் தெரிவித்தனர்.
தேர்தல் முடிவு எமக்குக் கவலையைக் கொடுத்துள்ளது. எவ்வாறாயினும் இனி ஒரு பொழுதும் நாம் ஆயுதங்களை எடுக்கப்போவது இல்லை. வார்த்தைகள் மட்டுமே தான் எமது ஆயுதம். தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். சமாதானத்தைத் தவிர வேறு எந்த திட்டங்களும் எம்மிடம் இல்லை என பராக் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
முன்னர் சில வருடங்கள் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் விளைவாகவே சமாதானம் எட்டப்பட்டது. தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம். சமாதான முயற்சியை ஒரு பொழுதும் கைவிடப் போவது இல்லை என கொலம்பிய ஜனாதிபதி தெரிவித்தார். (ம-ரி4)

# நெதர்லாந்து செய்தியாளர் கொலை ஐ.எஸ். அமைப்பின் வெறிச் செயல்

திரிபோலி, ஒக். 4
நெதர்லாந்தைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரால் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.
லிபியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக அங்கு பணியாற்றிவந்த ஜெரன் ஓர்லிமன்ஸ் என்ற செய்தியாளரே அவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார். 2012 ஆம் ஆண்டு, குறித்த செய்தியாளர், போராளிக்குழுவினால் கடத்தப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவத்தின் பின்னரும் அவர் லிபியாவில் செய்தி சேகரிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார்.
சில மாதங்களின் முன்பு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினரால் கடத்தப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார். (ம-ரி4)





# 9 மாதத்தில் 600 சிறுவர்கள் மத்தியதரைக் கடலில் சாவு

ரோம், ஒக். 4
மத்திய தரைக்கடலினூடாக இந்த வருடம் பயணித்த அகதிச் சிறுவர்களில் 600 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்தது.
ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான், சூடான், சோமாலியா, நைஜீரியா, எதியோப்பியா போன்ற நாடுகளில் இடம்பெற்று வரும் போர்கள் காரணமாக அங்குள்ள மக்கள் பலர் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து செல்கின்றனர். அவ்வாறு சென்றவர்களில் இந்த வருடத்தில் மட்டும் 10 ஆயிரத்து 400 பேர் படகுவிபத்துக்களில் சாவடைந்துள்ளனர். இவர்களில் சிறுவர்கள் மட்டும் 600 பேர் என சிறுவர் பாதுகாப்பு நிதியம் அமைப்பு தெரிவித்தது. குறிப்பாக இத்தாலியின் கடல் பரப்பில் மட்டும் 300 சிறுவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் அமைப்பு குறிப்பிட்டது.
மேலும் இந்த வருடத்தில், 20 ஆயிரத்து 600 சிறுவர்கள் இத்தாலியைச் சென்றடைந்ததாகவும், அவர்களில் 18 ஆயிரத்து 400 பேர் பெற்றோரின்றி தனித்து வந்தவர்கள் எனவும் அந்த நிறுவனத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டது. (ம-ரி4)

# புறாவின் மூலமாக மோடிக்கு மிரட்டல்

புதுடில்லி, ஒக். 4
மோடிக்கு மிரட்டல் விடுக்கப்பட்டு எழுதப்பட்ட கடிதமொன்றைக் கொண்டு வந்த புறா, காஷ்மீர் எல்லையில் பிடிபட்டது.
இந்தியா, பாகிஸ்தான் அரசியல் நிலவரம் போரின் விளிம்பில் உள்ளதால் இரு நாடுகளதும் பாதுகாப்பு விவகாரங்கள் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகளில் பாதுகாப்பு உயர் மட்டத்தில் பேணப்படுகிறது. இந்த நிலையில் பஞ்சாப் மாநிலம் பாமியல் பகுதியில் உள்ள இந்தியாவுக்கு சொந்தமான சோதனைச் சாவடிக்குக்கு புறா ஒன்று நேற்றுமுன்தினம் வந்தது. அதனது காலில் ஏதோ கட்டப்பட்டதைப் பார்த்த பொலிஸார் அதைப்பிடித்து சோதனை செய்ததில், இந்தியப் பிரதமர் மோடி அவர்களே! 1971 ஆம் ஆண்டு இருந்த மக்களைப் போன்று எம்மை நினைக்க வேண்டாம். இங்குள்ள ஒவ்வொரு குழந்தையும் இந்தியாவுக்கு எதிராக போரிடத் தயாராக உள்ளது என எழுதப்பட்ட கடிதமொன்று இருந்தது என எல்லைப் பாதுகாப்புப் படை தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. குறித்த பகுதியில் கடந்த சனிக்கிழமை பலூன் மூலம் இவ்வாறானதொரு எச்சரிக்கை விடுக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ம-ரி4)



# சீன காட்டுப் பகுதியில் கண்ணாடிக் கழிப்பறை

பீஜிங், ஒக். 4
சீனாவின் காட்டுப் பகுதியில் கண்ணாடிக் கழிப்பறைகள் உருவாக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டன.
சீனாவின் குனான் மாகாணத்தில் [illegible] பகுதியில் [illegible] காட்டுப்பகுதியிலேயே இந்தக் கழிப்பறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தரை, கதவு, மறைப்பு அனைத்துமே கண்ணாடியினால் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றலாப் பயணிகளைக் கவருவதற்காகவும், கழிவகற்றும் சூழலில், இயற்கை அழகை ரசிக்கக்கூடிய விதத்திலும் இது [illegible] வடிவமைப்பாளர்கள் தெரிவித்தனர். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிகாலையில்

## எழுந்திருக்க வேண்டும் என முன்னோர்கள் சொல்வார்கள் ஏன்?

அதிகாலையில் சுற்றுப்புறச் சூழ்நிலை, காற்று முதலானவை எல்லாம் மிகவும் தெளிவாக இருக்கும். காற்றுத் தூய்மையாக இருக்கும். அந்தத் தூய்மையான காற்றைச் சுவாசிப்பதால் ஆரோக்கியம் கூடும்.

பொழுது விடிந்து போக்குவரத்து மிகுந்து விட்டதென்றால், சூரியனின் வெப்பம் பட்டுப் பல சக்திகள் ஆவியாகப் போய்விடும். போக்குவரத்து வாகனங்களின் நச்சுப்புகை, காற்று மண்டலத்தில் பரவி ஆக்கிரமித்துக்கொள்ளும். அப்புறம் தூய்மையான காற்றுக்கு எங்கே போவது? ஆரோக்கியத்தை நாம் அடைய வேண்டுமென்றால், அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும் என நம் நலத்துக்காகவே சொல்லி வைத்தார்கள் முன்னோர்கள்.

அப்படி எழுந்திருக்கும்போதும், வலது பக்கமாகத் திரும்பி எழுந்திருக்க வேண்டும். இதற்கும் காரணம் உண்டு.

நம் உடலில் இரண்டு விதமான காந்த வளையங்கள் இருக்கின்றன. ஒன்று, காலில் இருந்து தலைக்கும், தலையிலிருந்து காலுக்கும் வலம் வந்து கொண்டிருக்கும். இரண்டாவது, இடது பக்கம் இருந்து, முன்பக்கம் வழியாக, வலது பக்கத்துக்கும் வலது பக்கத்தில் இருந்து பின் பக்கம் வழியாக, இடது பக்கத்துக்கும் வலம் வந்து கொண்டிருக்கும். அந்த வளையங்களின் திசைக்கு ஏற்றபடி உடம்பு அசையும்போது வளையங்களின் சுருள்கள் இறுகும். அதற்கு எதிராக அசையும்போது, காந்த சுருள்கள் தொய்வடைந்து போகும். அதனால் உடம்பின் செயற்றிறன் தளர்வடைந்து போகும்.

அடுத்து, படுக்கையில் இருந்து எழுந்து கையால் தரையைத் தொட்டு, தாயே, பூமாதேவி, என்னை மன்னித்து, நான் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் கொள் என வேண்டி, கையால் தரையைத் தொட வேண்டும்.

ஏனெனில் இரவு முழுவதும் உடலை நீட்டிப் படுத்திருந்தோம். உடம்பு சம நிலையில் இருந்தது. எழுந்தவுடன் காலால் தரையைத் தொட்டால் சக்தி வீணாகும். ஏனென்றால், படுத்திருந்த போது குருதி ஓட்டமும், உடம்பின் செயற்பாடுகளும் வேறு. ஆகவே, எழுந்தவுடன் காலால் தரையைத் தொட்டால்... சக்தி பெருமளவில் கீழ்நோக்கிப் பாய்ந்து வீணாகும். கையால் தரையைத் தொட்டு நிமிரும்போது, சக்தி மேல் நோக்கிப் பரவிப் பாய்ந்து நலம் தரும்.

இதை எண்ணியே காலையில் எழுந்ததும் கையால் தரையைத் தொட்டு, பூமாதேவியிடம் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என வைத்தார்கள்.

---

# போதையற்ற சமூகத்துக்காய் பாடுபடுங்கள்

உடுவிலூர் கலா

ஒழுக்கத்தின் பிறப்பிடமான யாழ்ப்பாணம்; தற்போது போதையின் உறைவிடமாகத் தன்னை அடையாளப்படுத்தி வருகின்றது. இன அழிப்பை முன்னெடுக்கின்ற, நெறிப்படுத்துகின்ற ஒரு பகுதியினரால் சமூகத்துரோகிகள் உருவாக்கம் அடைந்து விட்டனர். எங்கும் போதை, நாட்டில். பாலியல் வன்புணர்வுகள் பரவலாக இடம்பெறுகின்றன. இலங்கையில் 17,000 பேர் போதைப் பொருள்களுக்கு அடிமைகளாகியுள்ளனர் என்கிற செய்தி எம்நாட்டுக்கு அறைகூவலாக விடப்பட்டுள்ளது. பத்திரிகைகள் இணையங்களின் முக்கிய, தவறாத செய்திகளாக போதை தொடர்பான செய்திகள் உள்ளன.

போராட்ட காலத்தில் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் சேதமாக்கப்பட்டு, உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் அதியுச்ச தண்டனை பெற்றனர். இன்று நடப்பதென்ன? உயிர் கொல்லியான போதைப் பொருள்கள் பல்வேறு நிலைகளில் பற்பல வடிவங்களில் குடாநாட்டுக்குள் கடத்தப்படுகின்றன. ஆரோக்கியமான ஒரு சமூகம் போதையால் சீரழிக்கப்படுகின்றது. எம்மினம், அழிந்தொழிந்து போகிறது எனத் தெரிந்தும், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டுப் பெரும்வருமானம் பெறுவோர் எவராக இருந்தாலும், இவர்கள் அதியுச்ச தண்டனை பெறவேண்டும். சமுதாயத்தை அழித்தொழிக்க முன்வரும் இவர்கள் இருட்டறைக்குள் சாகும் வரை வாழவேண்டும்.

அண்மைக்காலமாக எம் சமுதாயத்தில் புகுந்த போதைப் பொருள்களால் எண்ணுக்கடங்காத குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்துள்ளன. அப்பாவிச் சிறுமிகள், பெண்பிள்ளைகள் எனப் பலரது வாழ்க்கை முறைகள் கேள்விக்குறியாகியுள்ளன. பெண்கள் விதவைகளாகியுள்ளனர். போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்கள் நோய் வாய்ப்பட்டதும், நடைபிணங்களானதும் கூட உண்டு. இதை விட எச்.ஐ.வி. தொற்றுக்கும் ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு அழிவையே மையமாகக் கொண்ட போதைப் பொருள்களை ஏன் எம் சமுதாயத்தில் நிலை கொள்ளச் செய்கிறார்கள்? இன அழிப்பே பிரதான நோக்கம் என்பது எவரும் அறிந்தது. இந்த இன அழிப்புக்குத் துணைபோகிறவர்கள் எம்மவர்கள் தானே! உடலை வருத்தாது, வியர்வை சிந்தாது குறுகிய காலத்தில் பெருமளவு வருமானம் ஈட்டக்கூடியது போதைத் தொழில். இன்று எம் சமுதாயத்தில் திடீர்ப் பணக்காரர்கள் மழைக்காலத்து நீர்க்குமிழிகள் போலத் தோன்றியுள்ளனர். இவர்களதும் உறவினர்களதும் வங்கிக் கணக்குகளில் பெருந்தொகையான பணவைப்புக்கள் உள்ளன என்றும்– கைகூசாமல், மனம் நோகாமல் பணத்தைச் செலவுசெய்து ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர் எனவும், செய்திகள் பல சான்று பகர்கின்றன. இவர்கள் என்ன செய்வதென்று தெரியாமலே சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர். போதைப் பொருள் கடத்தலால் வந்த வருமானத்தைச் செலவு செய்யும் மாற்று வழியாக பெண்களைத் தெரிவு செய்வதோடு, பெண்களின் வாழ்க்கையைச் சீரழிக்கின்றனர். இவர்களுக்குத் துணை போகின்றவர்களாக, அடிவருடிகளாக அலையும் நாசதாரிகளும் உள்ளனர். இவர்களால் போதைக் கிராமங்களே தோற்றம் பெறுகின்றன. ஆனால் உண்மையை எடுத்துரைக்க முடியாமல் வாள்வெட்டுக் கலாசாரத்துக்கு பயந்து சாப்பிட மட்டும் வாய்திறந்து வாழும் ஜிவன்களாக ஒதுங்கி வாழ்வோரும் உள்ளனர்.

எது எவ்வாறு எனினும், சமுதாயத்தைக் கூறுபோட்டு வாழ்வது மானிட மாண்பு அல்ல. போதைப் பொருள் கடத்தல் நீண்ட நாள் நிலைக்காது. அநியாயமாய்த் தேடுகிற அதிக வருமானத்திலும், நியாயமாய்த் தேடுகிற சொற்ப வருமானம் உத்தமம் என்கிறது விவிலியம். பணம், பொருள் இவ்வுலக வாழ்க்கை எதுவும் நிலையற்றன. நிலையான சந்தோசம் நிலைக்க, மனிதன் மனிதனாக வாழவேண்டும். அநியாயமாய் தேடுகிற வருமானத்தில் சமுதாய சந்தோசத்தை சுட்டெரிக்க நினைப்பது மானுட தர்மமா?

சமூகத் துரோகிகளே! ஒரு தடவை சிந்தியுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் நாதன் (சட்டத்தரணி)



# மேன்மையுடன் விளங்கிய யாழ்ப்பாணம் சோனகர் தெரு

இந்தப்பெயரைப்பார்த்ததும், சகலருக்கும் நினைவில் வருவது யாழ். ஐந்துசந்தியை நுழைவாயிலாகக் கொண்ட ஒரு காலத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக (சுமார் 20,000) வாழ்ந்த அந்த சிறு குறிச்சியாகும். இன்று அங்கு வாழுகின்ற முஸ்லிம்கள் எவர் எனக் கேட்டால், எம்மவரில் கிட்டத்தட்ட 30 வயதுக்குட்பட்டோருக்கு நினைவில் நிழலாடுவது, யாழ். கிராமங்கள் தோறும் துவிச்சக்கரவண்டிகளிலும், மூன்று சக்கர வாகனங்களிலும் அலைந்து திரிந்து பழைய இரும்புகள், உடைந்த பிளாஸ்ரிக் சாமான்கள் இருக்கிறதா? எனக் கூவிக் கூவிக் கொள்முதல் செய்யும் பழைய இரும்பு வியாபாரிகளே! அத்துடன் இந்த மக்களின் முக்கியதொழில் என்ன? என்று கேட்டால் அவர்களின் மனதில் பழைய இரும்புவியாபாரமும் குடாநாடு முழுவதும் இறைச்சிக் கடை நடத்துகிறார்கள் என்பதுமே பதிலாக அமையும்.

ஆனால் இற்றைக்கு 65 வருடங்களுக்கு முன்பு அல்லது நாடுசுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து யாழ். நகரில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் சரித்திரத்தை ஆராய்ந்தோமானால், 1990ஆம் ஆண்டுக்கு முன்பு யாழ். சோனகத் தெருவில் வாழ்ந்த மக்களின் கல்வித்தரம், பொருளாதாரநிலை, சமூகத்தில் அவர்கள் வகித்துவந்த அந்தஸ்து மற்றும் அவர்களில் சிலர் வகித்த முக்கிய பதவிகளை நினைத்துப் பார்த்தால், எமது மூக்கின் மீது விரலை வைத்து மிகவும் ஆச்சரியத்துக்கு உள்ளாவோம். இவர்கள் இப்படியெல்லாம் வாழ்ந்த மக்கள் தானா என்று வியக்க நேரிடும்.

இவர்கள் ஏன் வெளியேற்றப்பட்டார்கள் என ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. அவர்கள் எப்படியெல்லாம் சிறப்பாக வாழ்ந்து, எமது தமிழ் பேசும் சமூகத்தில் ஓர் அங்கமாகத் திகழ்ந்தார்கள் என்பதை எம் இளம் சந்ததியினருக்குத் தெரியவைக்கும் ஒரு நல்ல நோக்கம் மாத்திரமே.

ஆரம்பகாலத்தில் (போர்த்துக்கீசர் காலம்) முஸ்லிம் மக்களின் பிரதான குடியிருப்புகளாக அலுப்பாந்தி, பறங்கித் தெரு, சின்னக்கடை, கோட்டை பொலிஸ் நிலையப் பகுதிகள் இருந்தன. அடுத்து மீசாலை என்னுமிடத்தில் உசன் என்ற பகுதி மற்றும் சாவகச்சேரிக்கு அண்மையிலுள்ள சோனகன்புலவு என்பனவாகும். இறுதிக் காலக் குடியேற்றங்களாக நல்லூர் கோயில் இன்று அமைந்துள்ள பகுதியும் (சோனகன் தோப்பு) தற்சமயம் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாவாந்துறையின் கிழக்குப் பகுதியுமாகும். நல்லூரில் தற்சமயம் கந்தசாமி கோயில் அமைந்திருக்கும் அதேயிடத்தில், ஆயிரம் பேர் தொழக்கூடிய பள்ளிவாசல் ஒன்று முன்பு இருந்துள்ளது. இஸ்மாயில் பள்ளியென அது அழைக்கப்பட்டது. (ஆதாரம் 1884இல் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை மற்றும் ஒல்லாந்தர் வரலாற்று நூல்கள்) யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர்கள் பள்ளிவாசலை மட்டுமன்றி இந்துக் கோயில்களையும் இடித்தழித்தனர். 1616இல் நல்லூரில் காணப்பட்ட இந்துக் கோயிலொன்றும் பள்ளிவாசலும் இடிக்கப்பட்டன. ஆனால், போர்த்துக்கீசரின் அடாவடித்தனம் குறைந்திருந்த காலப்பகுதியில், முஸ்லிம்கள் தமது பள்ளிவாசலை மீண்டும் உருவாக்கித் தொழுகை நடத்திவந்துள்ளனர். ஒல்லாந்தர் காலத்தில் இதனைப் பெரிய கட்டமாகக் கட்டினர். அப்பொழுது முன்பு இடிக்கப்பட்டிருந்த கந்தசாமி கோயிலை மீளவும் கட்டுவதற்கு தமிழர் முயன்று, சோனகரை அவ்விடத்தினின்றும் நீக்கித்தருமாறு ஒல்லாந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் செய்தார்கள். அந்த விடயத்தில் ஒல்லாந்தர் காலம் கடத்தவே, தமிழர் அந்த நிலத்துக் குப் பெரிய விலையைத் தருவதாகக் கேட்டார்கள். சோனகர் அதற்கும் அசை யாமை கண்டு தமிழர் ஒரு பன்றியைக் கொன்று, சோனகருக்கெல்லாம் பொதுவாக இருந்த கிணற்றில் போட்டார்கள். அது கண்டு சோனகர் மனக்கிலேசமுற்று, நிலத்தை விற்றுவிட்டு, நாவாந்துறைக்குக் கிழக்கேயுள்ள இடத்தை வாங்கிக் கொண்டு அங்கே குடியேறினார்கள். அவ்விடம் சோனகத் தெரு என அழைக்கப்படுகிறது. இதற்கிடையில் மேற்படி பள்ளியை அண்டியிருந்த சியார (சியாரம்) த்தை (முகமது இபுறாஹிம் என்ற பெயர் கொண்ட முஸ்லிம் பெரியார் ஒருவரின் சமாதி உடைக்க எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இறுதியாக 1902 கந்தசாமிகோயில், பள்ளிவாசல் இருந்த இடத்தில் கட்டப்பட்டது. நல்லூர் கோயினுள் நுழையும்போது வலது பக்கமாக மூலஸ்தானத்துக்கு அண்மையில் இந்தச் சியாரத்தின் கட்டடம் இன்றும் அப்படியே உள்ளது. முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது உண்மைதான் என்பதை மயில்வாகனப் புதல்வர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையும், ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலும் உறுதிப்படுத்துகின்றன. மேலும் இந்த நூலின் ஆசிரியர் இப்படியாக முஸ்லிம்கள் நாவாந்துறைக்குக் கிழக்கேயுள்ள இடத்தை வாங்கிக்கொண்டு அங்கே குடியேறினார்கள். அது சோனகத் தெரு என வழங்கப்படுகிறது. சோனகர்கள் அந்தக் காலம் முதல் பெரும்பாலும் வியாபாரத்தையே தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்குள்ளே முயற்சியின்றி இருப்பவர்களைக் காண்பது அரிது. அவர்கள் சமயாபிமானமும் ஒற்றுமையும்பெரிதுமுடையவர்கள்என்று பாராட்டுரையும் தெரிவிக்கிறார்கள். தற்சமயம் முஸ்லிம்கள் வாழ்ந்து வரும்பகுதி மேற்கே நாவாந்துறைக் கடல், வடக்கே ஓட்டுமடம் காரைநகர் வீதி, கிழக்கே வண்ணார் பண்ணை, கே.கே.எஸ். வீதி, தெற்கே கொட்டடி வீதி என அமைந்துள்ளது.

இன்று சோனகத்தெருவுக்குள் மாத்திரம் பெரிய இறைஇல்லங்கள் (பள்ளிவாசல்கள்) பத்துவரையில் இருக்கின்றன. அவை அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அங்கே ஒழுங்காகத் தொழுகைகள் நடைபெறுகின்றன. ஆண்களுக்கான ஒஸ்மானியாக் கல்லூரி, பெண்களுக்கான கதீஜா மகளிர் கல்லூரி மற்றும் நான்கு ஆரம்பப் பாடசாலைகள், ஒஸ்மானிக்கு அருகில் விளையாட்டு மைதானம், குளம், மையவாடி என அனைத்தும் அமைந்துள்ளன. ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குள் யாழ். நகரப்பகுதி, பெரிய கடைச்சந்தை, வங்கிகள், யாழ்.போதனா வைத்தியசாலை, பிரதான பஸ் நிலையம், புகையிரத நிலையம் என சகல வசதிகளும் அமைந்துள்ளன. 1972இல் ஒஸ்மானியாக் கல்லூரி மற்றும் மையவாடிக்கு வடமேற்காக பொம்மைவெளி என்ற பெயரில் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டு, 200 பேருக்குக் காணிகள் அரசால் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பொம்மைவெளிப் பகுதி பறைச்சேரி வயல் பகுதிகளில் முஸ்லிம்கள் காணிகளை வாங்கி வீடுகளைக் கட்டினர். ஆகவே இன்று முஸ்லிம்கள் வாழும் பகுதி வடமேற்காக விரிவுபட்டு பரந்துள்ளது.


> யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கீசர்களால் 1616இல் நல்லூரில் காணப்பட்ட இந்துக் கோயிலொன்றும் பள்ளிவாசலும் இடிக்கப்பட்டன. ஆனால் போர்த்துக்கீசரின் அடாவடித்தனம் குறைந்திருந்த காலப்பகுதியில் முஸ்லிம்கள் தமது பள்ளிவாசலை மீண்டும் உருவாக்கி தொழுகைநடத்திவந்துள்ளனர். ஒல்லாந்தர் காலத்தில் இதனைப் பெரிய கட்டமாகக் கட்டினர்.

1950களில் சோனகத் தெருவில் பாடசாலைகளில் தரம் 5 வரையும் வகுப்புகள் நடைபெற்றன. உயர்கல்வி கற்பதற்கு முஸ்லிம் மாணவர்கள் அயலிலுள்ள வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்.மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளையே நாடினர். அப்படி உயர்கல்வி கற்றவர்களும் பெரும்பாலும் அந்தக் கால மூத்த தராதரப் பத்திரவகுப்பு (H.S.C) கா.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளில் சித்தியெய்தியதும் ஆண்களும் சரி, பெண்களும் சரி (துங்கள் குடும்ப பொருளாதார நிலையை உத்தேசித்தோ என்னவோ நேரடியாக ஆசிரியத் தொழிலையே நாடி ஓடினர். மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த மர்ஹூம் எம்.எம். அப்துல் காதர் ஒரு (அம்பிகைபாகன் பாராட்டுமலர் 1968) கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார். யாழ்.ஒஸ்மாணியாக் கல்லூரி 1959இல் யாழ்ப்பாண சாஹிராக் கல்லூரி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டாலும், அதன் கல்வி நடவடிக்கைகள் 1963இல்தான் தொடங்கப்பட்டன. எனவே, அந்தக் காலத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களில் பலர் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அம்பிகைபாகன் அதிபரின் கீழ்தான் கல்வி கற்றிருக்கிறார் கள். 1940ஆம் ஆண்டு இருநூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மாணவர்கள் கற்றிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் சைவப் பிள்ளைகளுக்கு சமய பாட ஆசிரியர்கள் இருந்தமைபோல முஸ்லிம் மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் தானும் இருக்கவில்லை. முஸ்லிம் பிள்ளைகளின் சமயபாட நேரம் வீணாகக் கழிவதை அம்பிகைபாகனால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. சமயபாட அறிவில்லாமல் அவர்கள் (பாடசாலையை விட்டு விலகும்போது) வெளியேறப் போகிறார்களே என்ற கவலை அவரை வாட்டவே, தமது பாடசாலையிலிருந்து ஆசிரியர் ஒருவரைப் பிறிதொரு பாடசாலைக்குக் கொடுத்து, அங்கிருந்து இஸ்லாம் பாட ஆசிரியரொருவரை எடுத்து, சைவப்பிள்ளைகளைப் போல, முஸ்லிம் பிள்ளைகளும் இஸ்லாம் கற்க வசதி செய்து கொடுத்தார் என அறிகிறோம். இதனால் 1942ஆம் ஆண்டில் நடைபெற்ற மூத்த தாரதரப்பத்திர பரீட்சையில் இஸ்லாம் பாடத்தில் உயர் சித்தியுடன் நூறு வீத சித்தியை அந்த மாணவர் காட்டினர். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியின் கஞ்சத்தனம்

திருமணம் செய்து கொள்ளாமல் தனியாளாக வாழ்ந்து வரும் கந்தசாமிக்கு ஒரு சிறிய வீடும் அதனைச் சுற்றிப் பூந்தோட்டமும் இருந்தன. பூந்தோட்டத்தில் தினமும் பூக்கும் பூக்கள் நல்ல காசுக்கு விலை போயின. பூக் கன்றுகளைப் பாராமரிப்பதற்காக இருந்த வேலையாள் சொல்லாமல் கொள்ளாமல் திடீர் என்று எங்கோ சென்று விட்டான். இது அடிக்கடி நடைபெற்று வருவது தான். ஏனெனில் கந்தசாமி வேலைக்கு வருபவர்களுக்கு போதிய கூலி கொடுப்பதில்லை. கரிசனை கொள்வதும் இல்லை. இரக்கம் சிறிதுமில்லாமல் வேலைவாங்குவதிலே கண்ணாக இருப்பார். இவரிடம் வேலை செய்வதற்கு ஒருவரும் விரும்புவதில்லை. மகா கஞ்சனாகவும் இருந்தார்.



உதவியாள் இன்றித் தனியாக வேலை செய்வது கந்தசாமிக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. வேறுவழியின்றி அயல் கிராமத்தைச் சேர்ந்த மந்த புத்திக்காரனான அசட்டுச் சிறுவன் ஒருவனை வேலைக்கு வைத்துக்கொண்டார். சிறுவனும் மாடு மாதிரி கடுமையாக வேலை செய்வான். ஆனாலும் எவ்வேளையிலும் அவனுக்குப் பக்கத்தில் இருந்து வழிப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். எல்லாம் காலப்போக்கில் சரியாகிவிடும். பழகப் பழக ஒழுங்குக்கு வந்து விடுவான் என்று கந்தசாமி நினைத்தார். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. இவர் கொடுக்கும் கூலியை மறு பேச்சின்றி அவன் வாங்குவான். சில சமயம் கூலிக்குப் பதிலாக தனது உணவின் மிச்சம் மீதிகளைக் கொடுத்து அவனைச் சமாளித்து விடுவார். இவ்வாறாக தனது கஞ்சத்தனத்தை பெரும் கெட்டித்தனமாக எண்ணித் தன்னைத் தானே பாராட்டிக் கொள்வார்.

கந்தசாமியின் கணக்குப்படியே சிறுவனும் கொஞ்சம் கொஞ்சம் தொழிலைப் பிடித்துக் கொண்டான். திடீர் என்று அவசரமாக வெளியூர் செல்லவேண்டிய நிலை கந்தசாமிக்கு ஏற்பட்டது. தான் திரும்பிவர இரண்டு நாள்களாகும் என்றும், அதுவரை தினமும் இரண்டு தடவை பூக்கன்றுகளுக்கு வேர் நனைய நீர் பாய்ச்சும் படியும் அசட்டுச் சிறுவனுக்குக் கூறினார். அவனும் அதனை ஏற்றுக் கொண்டு தலையாட்டினான். கந்தசாமி புறப் பட்டுச் செல்லும்போதும், 'டேய் தம்பி வேர் நனையப் பூக்கன்றுகளுக்குத் தண்ணீர் விடு" என்று ஊன்றித் தெரிவித்து விட்டுச் சென்றார். வேலைக்காரச் சிறுவனும் மறுநாள் காலை பூஞ்செடிகளுக்கு நீரூற்றி விட்டுச் சென்றான். மாலையில் அவற்றுக்கு நீர் விடும் போதுதான் கந்தசாமி சொன்னது அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. வேர் நனையத் தண்ணீர் விடும்படியல்லவா ஐயா சொன்னவர். வேர் நனைந்திருக்கிறதா இல்லையா என்பதை எப்படி அறிந்து கொள்வது? என்றவாறாகச் சிந்தித்தவன் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தவனாக தனது மந்த புத்தியின் படி ஒவ்வொரு பூஞ்செடியாகப் பிடுங்கி, வேர் நனைந்திருக்கிறதா என்று பார்த்துவிட்டு மீண்டும் நட்டுத் தண்ணீர் விட்டான். இவனது அசட்டுத்தனம் இரண்டு நாள்களும் தொடர்ந்தது. மூன்றாம் நாள் மாலையில் வீடு வந்த கந்தசாமி பூந்தோட்டதைப் பார்த்து விட்டு தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். ஏனெனில் பூச்செடிகள் யாவும் வாடிச் செத்துக் கொண்டிருந்தன. கந்தசாமியின் கஞ்சத் தனமும் உரிய கூலியை வழங்காது ஏழைத் தொழிலாளர்களை வஞ்சித்த பாவமும் அவரது ஜீவாதாரத்தையே பாதித்துவிட்டது.

*கி.உமா*



## பட்டம் பறக்கும்

ஈர்க்கில் எல்லாம்
அளவெடுத்து
இறுக்கமாக நூலால் கட்டி
பொருத்தமான நிறத்தைக் கொண்டு
புதுமையான சட்டை போட்டு
காற்றில் ஏறும்
வகையினிலே
கையில் நூலைப் பிடித்து
நின்றால்
ஓழப் பட்டம்
ஏறுமாம்
உயர உயரப்
பறக்குமாம்

## வரலாற்றில் இன்றைய தினம்

23 - பீசன்ற் எதிர்ப்பாளர்களால் சீனத் தலைநகர் சங்கன் கைப்பற்றப்பட்டு பேரரசர் வாங் மாங் இரண்டு நாள்களின் பின் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

1227 - மொறோக்கோவின் கலிபா அல் அடில் படுகொலை செய்யப்பட்டார்.

1535 - ஆங்கில மொழியிலான பைபிள் முதன் முதலாக அச்சிடப்பட்டது.

1824 - புதிய அரசமைப்பின் மூலம் மெக்ஸிகோ சமஷ்டிக் குடியரசானது.

1830 - நெதர்லாந்திலிருந்து பிரிந்து பெல்ஜியம் தனிநாடாக உருவாக்கப்பட்டது.

1971 - புரூட் சென்டி போர், பிளண்டர்சில் பிரித்தானியா மற்றும் ஜேர்மன் இராணுவத்தினரிடையே இடம்பெற்றது.

1940 - பிறென்னஸ்பாஸில் அடொல்ப் ஹிட்லர் மற்றும் பெனிரோ முசோலினி ஆகியோரிடையே சந்திப்பு இடம்பெற்றது.

1943 - இரண்டாம் உலகப்போர்; ஜப்பானிடமிருந்து சொலமன் தீவுகள் அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டன.

1957 - ஸ்புட்னிக் 1, முதல் செயற்கைக்கோள் புவிச் சுற்றுப் பாதைக்குச் செலுத்தப்பட்டது.

1958 - ஐந்தாவதும் தற்போதையதுமான பிரான்சின் அரசமைப்பின் மூலம் ஐந்தாவது குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது.

1963 - புளோறா எனப் பெயரிடப்பட்ட சூழற் காற்றில் கியூபா மற்றும் ஹெயிட்டியில் 6000 பேர் உயிரிழந்தனர்.

1965 - பாப்பரசர் ஆறாம் சின்னப்பர் முதன் முதலாக அமெரிக்காவுக்குச் சென்றார்.

1966 - ஐக்கியராச்சியத்திடமிருந்து பசுடோலான்ட் சுதந்திரம் பெற்று லெசோதோ என மீள் பெயரிடப்பட்டது.

1992 - மொஸாம்பிக்கின் 16 ஆண்டுகால சிவில் போர் றோம் பொது சமாதான ஒப்பந்தத்தின் மூலம் முடிவுக்கு வந்தது.

1992 - எல் அல் விமானம் 1862 அம்ஸ்ரடாமில் இரண்டு குடியிருப்புக்களில் மோதியதில் தரையிலிருந்த 39 பேர் உட்பட 43 பேர் உயிரிழந்தனர்.

- லங்கா ஆயுள்வேதக் கல்லூரியை வடக்கு - கிழக்கு மாகாணசபை கையேற்பதற்கு மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எனத் தெரிவிப்பு.

- ரூபா 5 கோடி பெறுமதியான ஆயுதங்களைக் கட்டைக் காட்டில் இழந்ததாக இராணுவம் ஒப்புக் கொண்டது. விசாரணைக்கு அரசு உத்தரவு.


2001 - உக்கிரேனியனின் எஸ்-200 ஏவுகணையால் தாக்கப்பட்ட சைபீரிய விமான சேவை விமானம் 1812 கருங்கடலில் வீழ்ந்து 75 பேர் உயிரிழந்தனர்.

2006 - யூலியன் அசென்ஜேயால் விக்கி லீக்ஸ் தொடங்கப்பட்டது.

2007 - இராஜதந்திரிகள் வன்னி சென்றமைக்காக ஐஸ்லாந்து அரசு இலங்கையிடம் மன்னிப்புக் கேட்டது.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளின் திடலாக சிரியா

உலக அரசியலில் செல்வாக்கு செலுத்தும் விடயமாக சிரிய போர் உருப்பெற்றுள்ளது. உலக வல்லரசுகள் எனக் கருதப்படும் அமெரிக்க - ரஷ்ய நாடுகளின் படைகள் சிரியாவில் தமது பலத்தை காண்பித்து வருகிறன. அமெரிக்காவுடன் ஆஸ்திரேலியா, பிரிட்டன் உட்பட வேறு நாடுகள் இணைந்து அமெரிக்க கூட்டுப்படையாகவும், ரஷ்ய இராணுவத்தினர் தனித்தும், சிரிய இராணுவத்தினருடன் இணைந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைக் குறிவைத்தே தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதுவரை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை முற்றாக அழிக்க முடியவில்லை. இந்த நிலையில், சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவை அழிக்க சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்தத் தாக்குதலுக்கு ரஷ்யா தனது முழு ஆதரவையும் வழங்கியுள்ளது.

வழமை போன்று அமெரிக்காவும் - ரஷ்யாவும் சிரிய விவகாரத்திலும் எதிரும் புதிருமாக இருந்து வருகின்றன. ரஷ்யாவின் தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிப்பதும், அமெரிக்கப் போராளிகளுக்கு ஆதரவாக செயற்படுகிறது என ரஷ்யா குற்றஞ்சாட்டுவதும் வழக்கமான செயலாக உள்ளது. இந்த வல்லரசு மோதலில் நிலை குலைந்து நிற்பது சிரியா எனும் நாடுதான். குறிப்பாக அலெப்போ நகரின் கண்ணுக்கு எட்டும் தூரம் வரைக்கும், அதற்கு அப்பாலும், நகரம் சுக்குநூறாக சிதைக்கப்பட்டுள்ளது. முதலாம், இரண்டாம் உலகப்போரின்போது, இடம்பெற்ற தாக்குதல்கள் தொழில்நுட்ப பின்தங்கல்கள் காரணமாக உரியமுறையில் ஆவணப்படுத்தப்படவில்லை. ஆனால், தற்போது சிரியாவில் இடம்பெறும் போர் பல தரப்பாலும் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது. நொறுங்கிய கட்டடங்களில் மக்கள் வசிப்பது வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போர், மக்களின் உயிரை அன்றாடம் பறித்து வருகிறது. மனிதாபிமான உதவிகள் எட்டப்படாத நிலையில், மக்கள் தவித்து வருகின்ற சூழலில், இரு பகுதியினரும் தமது பலத்தை நிறுவி வருகின்றனர். தாக்குதலின் உச்சம் அதிகரிக்கின்றதே தவிர குறைந்த பாடில்லை.

உலக நாடுகளுக்கிடையில் ஆயுத கலாசாரமும், அதன் உற்பத்தியும் நாட்டின் வலிமையைத் தீர்மானிக்கும் பிரதான அலகாக உருவெடுத்துள்ளது. வடகொரியா, ஜப்பான், இந்தியா-பாகிஸ்தான் என ஆசிய நாடுகளும் தமது பலத்தை நிலைநாட்ட, ஆயுதக் கொள்வனவுகளையும், ஆயுத உற்பத்திகளையும் மேற்கொண்டு வருகின்றன. ஆயுத விற்பனை அல்லது கொள்வனவின்போது, இரு நாடுகளும் தெரிவிக்கும் ஒரே விடயம், குறித்த பிரதேசத்தின் சமாதானத்தை நிலைப்படுத்த ஆயுதக் கொள்வனவு இடம் பெற்றது என்பது தான். சிறுபிள்ளைகளைக் குச்சியைக்காட்டி மிரட்டுவது போன்று, அயல்நாடுகளை ஆயுதங்களைக் காட்டி போரை அடக்கும் சூழல் நிலவுகின்றது.

இந்த நிலையில் பல தரப்பினரின் பலத்தைக்காட்டும் தளமாக சிரியா அமைந்துள்ளது. போதாததற்கு இங்கு நூற்றுக்கும் அதிகமான போராளிக்குழுக்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் சில அமெரிக்க கூட்டுப்படையுடன் இணைந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைத் தாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளன. ஆனால், ரஷ்யா போராளி அமைப்புகளை தனது எதிரிகளாகக் கணித்து தாக்குதல்கள் நடத்துகின்றது. இவற்றால் நொடிந்து போய் உள்ளவர்கள் பொது மக்கள்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை ஒருமுறைதான். அவ்வாறான ஒரு அரிய சந்தர்ப்பத்தை எதற்காக சிதைக்க வேண்டும். ஒருவன் நன்றாக இருக்கப் பல தொழிலாளிகளின் உழைப்பு தேவை. ஒரு நாடு தலைமைத்துவம் வகிக்க பல நாடுகள் அதன் கட்டுப்பாட்டில் இயங்கும் சூழல் நிலவுகிறது. ஆதிக்கம் என்ற ஒரு வார்த்தைக்காக பல லட்சம் உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. இதற்கிடையில் சிரிய ஜனாதிபதி பதவி துறப்பதாக இல்லை. என்னவாக இருப்பினும், யாரோ ஒரு தரப்பு தான் வெற்றிபெற முடியும். அவ்வாறு கிடைக்கப் பெறும் வெற்றியால் என்ன பயன்? இறந்த உயிர்களை மீளக் கொண்டு வர இயலுமா? வெறும் வரலாற்று பதிவுக்காகத்தான் இந்தப் போரா?

எந்த ஒரு சம்பவத்துக்கும் ஆரம்பம் என்ற அலகு உண்டு. ஆரம்பத்திலேயே இவற்றைத் தடுக்க நினைத்திருந்தால் தடுத்திருக்கலாம். பன்னாட்டு அமைப்புகளில் ராஜதந்திரிகள் என்ற வார்த்தைக்கு அர்த்தம் போரைத் தொடரச் செய்வது தானோ? தமது நாடுகளைப் பாதுகாப்பாக வைத்துள்ள இரு வல்லரசுகள் தமது பலத்தைக் காட்ட மூன்றாவது நாடான சிரியாவை விளையாட்டுத் திடலாக்கியுள்ளன என்பதே உண்மை.



# பசிப்பிணி மருத்துவர்

வ.சி. ஸ்ரீஸ்கந்தராசா

பிணி, ஊனம், முதுமை போன்ற காரணங்களால் அடிப்படைத் தேவைகளாம் உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை அடைய முடியாதவர்களுக்கு உதவி செய்தல் மகத்தான சேவையாகும். இதன் பொருட்டு இன்று முதியோர் இல்லங்கள் அரச ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் அமைந்துள்ளதைக் காண்கின்றோம். கனடாவில் இத்தகைய சேவை அளப்பரியது. உடை, உறையுள் தவிர்த்து, உணவுக்காகவேனும் உதவவேண்டும். பசிப்பிணி களைதலே சிறந்த அறம். செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தன் அருள்புரிகின்றான், உள்நாட்டுப் போர்ச் சூழலில் நைஜீ ரியா, சூடான், சிரியா ஆகிய நாடுகளில் மக்களின் அவல நிலைகளை கேள்வியுறுகின்றோம். உண்பதற்கு உணவு கொடுப்பவர் பசிப்பிணி மருத்துவர் எனலாம்.

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே"

எனும் கோசங்களை அவதானிக்கலாம். வள்ளல்களை நோக்கி பழுமரம் தேடிய பறவைகளைப்போல வறியோர் செல்வர். பசியோடு தூங்குவது இயலாது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம் புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

குறள் 1050

பசிப்பிணி நீக்குதலின் சிறப்பு மணிமேகலை காப்பியத்தில்:

"மக்கள், தேவர் என இருசார்க்கும்
ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்தல் என்றே"

யார் யாருக்கெல்லாம் உணவு தரவேண்டும் என்பதை,

"காணார், கேளார், கால் முடப்பட்டோர்
பேணுநரில்லோர், பிணி நடுக்கற்றோர்
யாவரும் வருக வென்றிசைந்துடனூட்டி"

எனத் தெளிவுபடுத்துகின்றது. பசிப்பிணி; குடிப்பிறப்பு அழிக்கும்; விரும்பியதைக் கொல்லும்; கற்ற கல்வி விட்டு விலகும், நாணம் அழியும்; அழகும் சிதையும் எனும் தன்மைகளைக் கொண்டது. அறஞ் செய்யான் திறம் எட்டி மரமே. நல்லறம் செய்வோனிடம் துன்பம் நெருங்காது.

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமஞ் செய்யாதவர் தம்பால தாகும்

மூலர்

பாத்திரம் அறிந்து பிச்சை கொடு
என்றபடி, பசிக்கொடுமையகற்றிட எம்மை ஈடுபடுத்திச் சிறப்படைவோமாக.
தனியொருவனுக்குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்

# இல்லாள் அகத்திலிருக்க இல்லாதது ஒன்றுமில்லை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

குறள்

நல்லகுடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பதை நினைந்து உறுதியான கட்டுக் கோப்பினுள் இல்லறம் அமைதல் அவசியம். எவரும் சமூகத்தில் சிறந்து வாழ்வதற்கு இல்லறம் கை கொடுக்கிறது. ஒரு குடும்பம் சிறந்தோங்க இல்லத் தலைவியே காரணம்.

தெய்வம் தொழா அள் கொழு நற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

குறள்

விருந்தோம்பல் இல்லறக்கடமைகளில் தலையாயது.
வினையே ஆடவர்க்கு உயிர்
பொருள் தேடுதலே ஆண்மகனுக்கு மூச்சு. இல்லாள் விருந்தோம்பலில் ஈடுபடுவதோடு, இல்லறத்தை நடத்துவதில் தாயாக, பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதில் மனை கிழத்தியாக விளங்குகிறாள். தந்தை, தாய், தமர், நேயர், மனைவி, மக்கள், மனை, பொருள், ஆனந்தம்,இன்பம் ஆகியவை சேர்ந்ததே குடும்பம்.
மாமி மருமகள் நெருடல், தனிக்குடித்தனம் என்பன தவிர்த்து அன்போடிருக்கப் பழகுதல் அவசியம். இதுவே கூட்டுக் குடும்பம். மனையாள் கணவனின் நலனில் கண்ணும் கருத்துமாயிருப்பின் சிறப்பு.
இல்லற வாழ்வில், கணவனும், மனைவியும் பெருமை பொருந்திய மக்களுடன் நிறைந்து அறத்தை விரும்பிச் செய்வதோடு செம்பொருளை இடைவிடாது நினைத்து ஒழுகல் அவசியம்.

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

தொல்காப்பியம் 1138

கணவனின் இன்பத்தில் மட்டும் பங்கு கொண்டு, துன்பத்தில் எட்ட நிற்பவள் மனைவியல்லள். அவன் துன்பத்திலும், இன்பம் காண்பவளே நற்பெண். இன்றைய சமூக வாழ்வில் இல்லறத்தில் பொருள்வளம், சீதனம், புலம்பெயர் சீவியம் என்பவற்றால் திசைமாறிச் செல்லும் போக்கு அவதானிக்கலாம். உணவில், உடையில் பெண் விரும்பியதை அளிப்பதில் மகிழ்கின்ற பெற்றோர்கள், வாழ்வைத் தீர்மானிக்கின்ற இல்லறத்தில் அவள் [illegible] அறிவதில்லையே ஏன்?
[illegible] இருந்தோம்பி இல் வாழ, இல்லாளே காரணமாகி, அன்பான இல்லறத்துக்கு துணை என உணர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பழம்பெரும் நடிகர் கே.என்.காளை காலமானார்



பழம்பெரும் நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவருமான கே.என்.காளை 84 வயதில் மாரடைப்பால் கடந்த சனிக்கிழமை காலமானார். 'கிடாரி' படத்தில் மூக்கையா கிழவராக நடித்தவர் கே.என். காளை. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். எம்.ஜி.ஆர், சிவாஜி போன்ற நடிகர்களோடு சுமார் 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். 1000 படங்களுக்கும் மேல் பின்னணிக் குரலும் கொடுத்திருக்கிறார். 'சந்திரமுகி' படத்தில் ரஜினி வேட்டையன் கதாபாத்திரத்தில் நடித்துவரும்போது, பின்னணியில் ஒலிக்கும் ராஜாதி ராஜா... ராஜ குலோத்துங்க குரல் இவருடையது தான். இவருடைய பூதவுடலுக்கு சரத்குமார், ராதா ரவி உள்ளிட்ட பல்வேறு திரையுலக பிரபலங்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். மேலும், பல்வேறு திரை யுலகினர் கே.என்.காளையின் குடும்பத்தினருக்கு தங்களுடைய இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

WhatsApp

**ஒரு நாள் ஒரு பெண்ணுக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது.**

Boy: ஹலோ...
Girl: ஹலோ யார் நீங்க?
Boy: உங்களுக்கு Boy friend இருக்கா?
Girl: ஆம் ஏன்?
Boy: ஆ... அப்படியா நான் உன் அண்ணன் பேசுறேன் இரு வாரன் வீட்டுக்கு...

**சிறிது நேரத்தில் அவளுக்கு மீண்டும் ஒரு அழைப்பு வந்தது.**

Boy: ஹலோ...
Girl: ஹலோ யார் நீங்க?
Boy: உங்களுக்கு Boy friend இருக்கா?
Girl: இல்லை ஏன் கேக்கிறீங்க?
Boy: அப்படியா? அப்ப நான் யார்?
Girl: ஐயோ sorry டா நான் அண்ணா என்று நினைச்சன்
Boy: ஆ... நான் உன் அண்ணன்தான் பேசுறேன் இரடி வாரன் வீட்டுக்கு



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உறவினர்களிடம் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இருக்கிற வாய்ப்பை பயன்படுத்துவது போதுமானது. இலாபம் சுமாராக இருக்கும். உடல் ஆரோக்கியம் அக்கறை தேவை.

**இடபம்:** நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரம் செழித்து கூடுதல் நன்மை பெறுவீர்கள். தாராள பண வரவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு உண்டாகும்.

**கடகம்:** அனுபவசாலியின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** பிறரது ஏளன பேச்சுக்காக மனம் வருந்த வேண்டாம். குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழிலில் இடையூறுகளை சரிசெய்வது நல்லது. லாபம் சுமார். இஷ்ட தெய்வ வழிபாடு மனநிம்மதிக்கு உதவும்.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**துலாம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழிலில் பணவரவு மிதமான அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** மதிநுட்பமுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** பணிகள் நிறைவேற விடாமுயற்சி தேவை. தொழில் வியாபாரத்தில் ஏற்பட்ட குறுக்கீடை சரி செய்ய முயல்வீர்கள். லாபம் சுமார். திடீர் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

**மகரம்:** விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி பணி நிறைவேறும். லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். வருமானம் அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். வாகன பயணத்தில் இனிய அனுபவம் ஏற்படும்.

**மீனம்:** நண்பரால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். வழக்கு விவகாரத்தில் நிதானத்தைக் கடைபிடிக்கவும்.


சௌமியா


பெரும்பாலானவர்களின் ஆசை, குறைந்த செலவில் அதிக திருப்தி என்பதாகத் தான் இருக்கும்....

முன்னரெல்லாம், இவன் சிகரெட், தண்ணி அடிப்பான் என்று சொன்னால் கேவலமாய் பார்ப்பாங்க.
ஆனா, இப்போ! சிகரெட், தண்ணி அடிக்க மாட்டான் என்று சொன்னால் படுகேவலமாக பார்க்கிறாங்க!



அப்பா உன் சம்சாரம் ரொம்ப மோசம்... முழிச்சு முப்பது நிமிசமாச்சு இன்னும் ரீ வரல...





எனக்கு பிறந்தவனா இவன்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 7 | | | | | | 5 |
| | | | 8 | 3 | | | | |
| | 6 | 9 | | 5 | | | | |
| | 2 | | | | | 7 | | 9 |
| 4 | | | | 7 | | | | 8 |
| 1 | | 8 | | | | | 5 | |
| | | | | 8 | | 5 | 9 | |
| | | | | 6 | 2 | | | |
| 3 | | | | | | 6 | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 4 | 2 | 5 | 1 | 7 | 9 |
| 5 | 1 | 2 | 7 | 9 | 3 | 8 | 6 | 4 |
| 7 | 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 5 |
| 1 | 7 | 5 | 9 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 4 | 6 | 3 | 1 | 8 | 2 | 9 | 5 | 7 |
| 8 | 2 | 9 | 5 | 3 | 7 | 4 | 1 | 6 |
| 2 | 4 | 6 | 3 | 7 | 9 | 5 | 8 | 1 |
| 9 | 8 | 7 | 2 | 5 | 1 | 6 | 4 | 3 |
| 3 | 5 | 1 | 8 | 4 | 6 | 7 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும், 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே [illegible] பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்) இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிளகு வடை

### தேவையான பொருள்கள்

உளுத்தம் பருப்பு — 2 கப்
சிறிதாக நறுக்கிய இஞ்சி
கொத்தமல்லி தழை — தேவைக்கேற்ப
மிளகு — 2 தேக்கரண்டி
கறிவேப்பிலை — சிறிது
உப்பு, எண்ணெய் — தேவைக்கேற்ப

### செய்முறை

உளுந்தை ½ மணிநேரம் ஊற வைக்கவும். இத்துடன் மிளகு, உப்பு சேர்த்து பசையாக அரைக்கவும். பின் நறுக்கிய கொத்தமல்லி, இஞ்சி, சேர்த்து கலந்து சின்னச், சின்ன வடைகளாகத் தட்டி நடுவில் துளையிட்டுப் பொரித்தெடுக்கவும். மிளகு வடை தயார்.





# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 700 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 650 | 400 | 600 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 500 | 500 | 300 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 300 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 300 | – | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 200 | 100 | 400 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | – | – |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | – | 200 | 300 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 200 | 170 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 50 | – |
| பாலை | 400 | 100 | 300 | 400 | 200 | – | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | – | – |

## நாளை

புரட்டாதி-19
புதன்கிழமை -05.10.2016
திதி: சதுர்த்தி பி.ப. 01.02
நட்சத்திரம்: விசாகம் கா.07.48
ராகுகாலம்: 12.02-01.32 வரை
சுபநேரம்: 04.32-06.02 வரை




தலையில் அணியத்தக்க புதிய வகை கிளிப்புகள் அறிமுக மாகியுள்ளன. மரத்தால் உரு வானது போன்ற தோற்றத்தில், சிறிய அளவுகளில் கவ்வும் கிளிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு கிளிப்பின் விலை 120 ரூபா ஆகும்.

## முருங்கையின் மருத்துவ குணங்கள்

☆ முருங்கையில் அனைத்து பாகங்களுமே மருத்துவ குணம் கொண்டவை. கீரை வகைகளில் இரும்புச்சத்து கணிசமாக உள்ளது. முருங்கை மரம் முழுவதும் மனிதனுக்குப் பயனளிக் கிறது.

☆ முருங்கைப் பூ மருத்துவ குணம் கொண்டது. முருங்கைக் கீரையை வேகவைத்து அதன் சாற்றைக் குடித்து வந்தால் உடற் சூடு தணியும். வெப்பத் தின் காரணமாக உடலில் ஏற்படும் மந்தம், உட்சூடு, கண்நோய் ஆகியவற்றை நீக்கும் குணம் படைத்தது முருங்கைக் கீரை.

☆ முருங்கைக் காய் ஒரு சத்துள்ள காய். உடலுக்கு நல்ல வலிமையைக் கொடுக்க வல்லது. இதை உண்டால் சிறுநீரும் தாதுவும் பெருகும். முருங் கைக்காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும். இதை நெய் சேர்த்தோ அல்லது புளி சேர்த்தோ சமைப்பது நலம். முருங்கைப் பட்டையை நீர்விட்டு அரைத்து வீக்கங்களுக்கும், வாயு தங்கிய இடங்களுக்கும் போடலாம்.

☆ முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கி விட்டு பின் மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும். முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் வதக்கிச் சாப்பிட்டால் குருதிச் சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல குருதி ஊறும். பற்கள் உறுதியாகும். தோல் வியாதிகள் நீங்கும்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 80 | 60 | 50 | 80 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 60 | 80 | 40 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 150 | 120 | 130 | 160 | 200 | 40 | 100 | 60 |
| பாகல் | 100 | 100 | 160 | 120 | 200 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 25 | 60 | 70 | 30 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 100 | 60 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 30 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 100 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 160 | 220 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 110 | 110 | 110–120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 400–600 | 360 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 100 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 100 | 60 | 80–100 | 200 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




# வட்ஸ் அப்புக்கு விழுந்தது அடி

இந்த காலகட்டத்தில் வட்ஸ் அப் பயன்படுத்தாத நபர்களே இல்லை என்று கூறும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.
இந்த நிலையில் கடந்த மாதம் 25ஆம் திகதி Privacy Policyயை முதன் முதலாக மாற்றியது வட்ஸ் அப்.
அதாவது, உங்களுக்கு அளிக்கும் சேவைகளை மேம்படுத்துவதற்காக வட்ஸ் அப் நம்பர் உள்ளிட்ட தகவல்களை பேஸ்புக், அட்லஸ், லைவ்ரைல், இன்ஸ்டர்கிராம், அக்குலஸ்உள்ளிட்ட பல்வேறுநிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போகிறோம் என அறிவித்திருந்தது.
இதற்கு உலக நாடுகள் பலவற்றிலும் எதிர்ப்பு எழுந்த நிலையில், ஜேர்மனியில் இந்தச் செயற்பாடு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது.
தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கத்திலே இந்தச் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை இந்தச் செயற்பாட்டை மீண்டும் மேற்கொண்டு எஞ்சிய பயனர்களின் தரவுகளைப் பெறும் பொருட்டு பேஸ்புக் நிறுவனம் மேன் முறையீடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# புதிய அலாரம்

சில வருடங்களுக்கு முன்னர் வரை காலையில் சரியான நேரத்திற்கு எழுவதற்கு அலாரம் கடிகாரத்தைப் பலர் பயன்படுத்தினார்கள்.
பின்னர் கைபேசியிலேயே அலாரம் வைத்துப் பயன்படுத்தினார்கள். அந்த அலாரச் சத்தத்தையும் கண்டுகொள்ளாமல் தூங்குபவர்களை எழுப்பப் பல விதமான செயலிகள் இருக்கின்றன.
இந்த அன்ட்ராய்ட், ஐபோன்களில் பயன்படுத்தப்படும் செயலிகளில் புது வரவாக இருப்பது தான் 'I Can't Wake Up' செயலி. இது மற்ற அலார செயலிகளில் இருந்து மாறுபட்டதாகும்.
இதில் நாம் அலாரம் அடிக்க வேண்டிய நேரத்தை செட் செய்ய வேண்டும். அது குறித்த நேரத்தில் அலாரம் அடிக்க தொடங்கும்.
அதனைத் தொடர்ந்து புதிர் விளையாட்டு, வார்த்தை விளையாட்டு, கணித புதிர் போன்ற எட்டு வகையான விளையாட்டு புதிர்களை முடிக்க வேண்டும், அப்போதுதான் அலாரம் நிற்கும், அதுவரை அடித்து கொண்டே இருக்கும் வகையில் அது அமைக்கப்பட்டுள்ளது.
இந்த எட்டுப் புதிர்களை முடிப்பதற்குள் நம் தூக்கம் கலைவது உறுதி, நம் வேலையை பார்க்க சுறுசுறுப்பாகக் கிளம்பலாம். (த)






# சென்ரல் பினான்ஸ்-எம் காஷ் நிறுவனங்கள் ஒன்றிணைவு

சென்ரல் பினான்ஸ் வாடிக்கையாளர்கள் தங்களுடைய குத்தகைக் கொடுப்பனவுகளை சௌகரியமாக மேற்கொள்வதற்கு நாடளாவியரீதியிலுள்ள எந்தவொரு எம் காஷ் மையத்திற்கும் சென்று தமது பிரத்தியேக எம் காஷ் கணக்கின் மூலமாக தமது குத்தகைக் கொடுப்பனவுகளை இலகுவாகச் செலுத்துவதற்கு இடமளிக்கும் வகையில் தேசிய மொபைல் சேவை வழங்குனரான எஸ்.எல்.ரி மொபிடெல், சென்ரல் பினான்ஸ் ஆகிய நிறுவனங்கள் கைகோர்த்துள்ளன.
எம் காஷ் மூலமாக கிடைக்கப்பெறும் மிகச் சிறந்த நற்பயன்களை அனுபவிக்கும் வாய்ப்பை இந்தச் சேவையானது மொபிடெல் வாடிக்கையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அல்லாதோர் என அனைவருக்கும் வழங்குகின்றது.
மொபைல் தொலைபேசியை உபயோகித்து, கட்டணப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், காப்புறுதிக் கட்டுப்பணத்தைச் செலுத்தல் மற்றும் பல்வேறு பங்காளர் நிறுவனங்களுக்கான குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை சௌகரியமாக மேற்கொள்ள இடமளிக்கின்ற அனைத்தும் உள்ளடங்கிய நிதியியல் கொடுப்பனவு சேவை வழங்குனராக எம் காஷ் திகழ்ந்து வருகின்றது.
இந்த பங்குடமையின் கீழ் சென்ரல் பினான்ஸ் வாடிக்கையாளர்கள் தமது மொபிடெல் அல்லது எடிசலாட் மொபைல் தொலைபேசி மூலமாக 111 என்ற இலக்கத்தை இலகுவாக டயல் செய்து எந்த இடத்திலிருந்தும், எவ்வேளையிலும் முறையே தமது குத்தகைக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியும். கொடுப்பனவை மேற்கொண்டமையை உறுதிப்படுத்தும் வகையில் எஸ்.எம்.எஸ். ஒன்று அனுப்பிவைக்கப்படுவதுடன், வாடிக்கையாளர், சென்ரல் பினான்ஸ் மற்றும் மொபிடெல் இடையில் தங்கு தடையின்றிய கொடுப்பனவு முறையினூடாக அனைத்துக் கொடுப்பனவுகளையும் எம் காஷ் அனுப்பி வைக்கும். எம் காஷ் வாடிக்கையாளர்கள் அல்லாதோர் மொபிடெல் கிளைகள் அடங்கலாக நாடளாவியரீதியிலுள்ள 12,000 இற்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற எம் காஷ் விற்பனையாளர்கள் வலையமைப்பினூடாக தமது கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் துரித வளர்ச்சி கண்டு வந்துள்ள வாடிக்கையாளர் தளத்தைக் கொண்டுள்ள எஸ்.எல்.ரி. மொபிடெல் வலையமைப்பானது எம் காஷ் இன் வசதியை நாடளாவிய ரீதியில் உறுதியாக நிலைபெறச் செய்துள்ளதுடன், அதனைப் பயன்படுத்துபவர்கள் தமது பணக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை சௌகரியமான முறையில் விரைவாக முன்னெடுக்கும் வகையில், புதிய அனுபவத்தை வழங்கும் மொபைல் பணக் கணக்கைப் பேணுவதற்கும் இடமளித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் உரிம அனுமதியைப் பெற்றுள்ள எம் காஷ், பண வைப்பு, பணம் மீளப்பெறல், பணத்தை மாற்றீடு செய்தல், கட்டணப் பட்டியல்கள், காப்புறுதிக் கட்டுப்பணம் மற்றும் குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், அரச திணைக்களங்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல், நன்கொடை கொடுப்பனவுகளை செலுத்தல் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்தல் அடங்கலாக ஒட்டுமொத்த சேவைகளையும் வழங்கிவருகின்றது எனக் கூறப்பட்டது. (த)

வணிகம்

## சணச அபிவிருத்தி வங்கியின் புதிய வர்த்தகச் சின்னம்


சணச அபிவிருத்தி வங்கி தனது புதிய வர்த்தக நாமச் சின்னத்தை அறிமுகம் செய்துள்ளது. மக்களுக்கு மிகவும் பரந்தளவு சேவை களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தமது நிறுவனத்தினுள் விசேட மாற்றங்கள் பலதை மேற்கொள்ள வங்கி அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தது. இதில் மற்றுமொரு அங்கமாக, தனது புதிய அடையாளத்தை நன்கு உறுதி செய்யும் வகையில், இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும், அதனூடாகத் தனது செயற்பாடுகளை மிகவும் உறுதியாக முன்னெடுத்துச் செல்வதாகவும் வங்கி அறிவித்துள்ளது.
வெளிப்புற அடையாளமாக இலச்சினை மாறுபட்டபோதிலும், வங்கியின் பதிவு நாமத்துக்கு எவ்விதமான மாற்றங்களும் ஏற்படுத்தப்படமாட்டாது என்பதுடன், இதுவரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளமை, புதிய இலச்சினையை அறிமுகம் செய்வதில் தாக்கம் செலுத்திய பிரதான காரணியாக அமைந்திருந்ததாக சணச அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.
இது தொடர்பாக வங்கி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,
புதிய இலச்சினையுடன் இது வரையில் நுண் நிதியியல் சேவைகளை வழங்குவதில் தன்னை ஈடுபடுத்தியிருந்த சணச அபிவிருத்தி வங்கி, சிறு வியாபார வங்கியாக மாற்றமடைந்து, நுண், சிறு மற்றும் நடுத்தர அளவு வியாபாரங்களுக்கான வங்கியாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்த வங்கி, உலக வங்கியின் பிரத்தியேக செயற்பாடுகள் பிரிவான பல்தேசிய நிதி நிறுவனத்துடன் சணச அபிவிருத்தி வங்கி கைகோர்த்துள்ளது.
சணச அபிவிருத்தி வங்கி நீண்ட காலமாக இலங்கையர்களுக்கு நிதித்தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட வங்கியாகும். பாரம்பரிய வங்கித் துறையின் மூலம் நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கியிருந்த, குறிப்பாக கிராமிய மட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு நுண் நிதியியல் கடன் வசதி போன்றவற்றை பெற்றுக்கொடுப்பதனூடாக இந்த நாட்டின் வங்கித் துறைக்கு புதிய அடையாளத்தை ஏற்படுத்திய வங்கியாக இதனைக் குறிப்பிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

SDB வங்கி

### பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE
3/10/2016
www.cse.lk

| [illegible] | | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| ASPI | 39.62 | 6,574.39 | 6,534.77 |
| S&P SL20 | 35.28 | 3,652.60 | 3,617.32 |
| வியாபாரப்புரள்வு | | 1,315,347,200 | 1,320,595,456 |
| உள்நாடு- கொள்வனவு | | 347,360,640 | 909,162,240 |
| விற்பனை | | 432,160,864 | 913,647,744 |
| வெளிநாடு- கொள்வனவு | | 967,986,496 | 411,433,248 |
| விற்பனை | | 883,186,304 | 406,947,744 |



| அதிகூடிய பங்குபரிமாற்றம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] (Rs) |
|---|---|---|---|---|
| ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 107 | 7,504,739 | 802,994,094 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 156 | 707,635 | 110,902,603 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 227.00 | 163,449 | 37,023,613 |
| பீப்பிள்ஸ் லீசிங் & பைனான்ஸ் | PLC.N | 18.8 | 1,827,925 | 34,376,134 |
| எயிட்கன் ஸ்பென்ஸ் ஹோல்டிங்ஸ் | AHUN.N | 49 | 422,251 | 20,312,389 |
| லயன் பிரேவெரி சிலோன் | LION.N | 417.9 | 50,558 | 19,236,415 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 147 | 124,184 | 18,011,261 |
| ஏசில் கேபில் | ACL.N | 64.9 | 240,505 | 15,618,184 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N | 97.9 | 158,320 | 15,431,488 |
| சிடிஎப்ஸ் டெவலப்மென்ட் பிஎல்சி | CDB.N | 82.5 | 170,302 | 13,630,242 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
அசோசியேட் மோட்டார் (AMF) -பங்கு ஒன்றிற்கு Rs. 15.00
நமுனுகுல ப்ளான்டேஷன்ஸ் (NAMU) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.50
ஹிக்கடுவா பீச் ரிசார்ட் (CITH) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.10

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 214 |
| விலை உழைப்பு | 13.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரும்...

ரீ.கடம்பநாதன் கருத்துரை வழங்கினார். அதன்போதே அவர்கள் தமது நெடுந்துயரை வெளிப்படுத்தினர். கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் இந்த உளநல ஆலோசனை கருத்துப் பகிர்வை ஏற்பாடு செய்தது.

பிடித்துச் செல்லப்பட்ட கணவன் உயிருடனிருந்து எப்போதாவது வீடு திரும்புவார் என்ற நம்பிக்கையில் நாங்கள் இன்னமும் நெற்றிப்பொட்டோடு வாழ்கிறோம். எங்களுக்குள் ஒரு விதமாகவும், எமது பிள்ளைகளுக்கு இன்னொரு விதமாகவும், எங்களைச் சுற்றியிருக்கும் சமூகத்துக்கு வேறு விதமாகவும் நாங்கள் நடித்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமக்கு ஏற்படும் இந்த அவலங்களால் கடும் துயரங்களைச் சுமந்து கொண்டு நடைப்பிணமாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நெற்றிப் பொட்டு என்பது எங்களுக்கு ஒரு பாதுகாப்பை வழங்குகிறது. ஆனால், அந்த நெற்றிப் பொட்டைக் கூட சாற்றிக் கொண்டு ஆலயங்களுக்குச் சென்று மன ஆறுதலைப் பெறுவதற்கும், அலுவலகங்களுக்குச் சென்று தேவைகளை முடிப்பதற்கும், வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்வதற்கும்கூட சில தீய சக்திகள் இடைஞ்சலாக இருந்து வருகின்றன. எமது ஆதங்கங்களை வெளிப்படுத்துவதற்குக்கூட நாங்கள் அஞ்சிப் பயந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அன்றாடம் கூலித் தொழில் செய்து பிள்ளைகளுக்கான வாழ்வாதாரத்தைத் தேடும் வலியின் உச்சத்திற்கே நாங்கள் சென்றுவர வேண்டியநிலையில் வாழ்கிறோம். என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

கணவன் காணாமலாக்கப்பட்டு 6 பிள்ளைகளோடு வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தும் எனது வீட்டை நான்கு தடவைகள் காட்டு யானை தாக்கி சேதப்படுத்தியுள்ளது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காலங்கழிக்கிறோம். உடலில் ஏராளமான வருத்தங்களைச் சுமந்துகொண்டு அன்றாடக் கூலி வேலை செய்து வாழ்வாதரத்தைப் பெற வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். ஆனால், அரசோ அரச சார்பற்ற நிறுவனங்களோ தனக்கு உதவவில்லை என்று கரடிப்பூவல் கிராமத்தில் வசிக்கும் 46 வயதுடைய புவனேஸ்வரி செல்வகுமார் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகள் பலர் தினமும் கவலைப்பட்டு ஒருவித மன நிலைப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இந்நிலைக்கு உள்ளாகியுள்ள பலர் தனிமையில் உரத்துக் கதைப்பதையும், முன்னுக்குப் பின் முரணாகக் கதைப்பதையும் உடல் உபாதைகளுக் குள்ளாகியிருப்பதையும் அறிய முடிந்துள்ளது என்று ஆலோசகர்கள் தெரிவித்தனர்.

கடந்த கால போர்கால சூழ்நிலைகளின் போது உன்னிச்சை, ஆயித்தியமலை, கரவெட்டியாறு, கரடிப்பூவல், இராஜதுரை நகர், பாவற்கொடிச்சேனை, நாவற்காடு, மகிழவெட்டுவான் உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட சுமார் 35 இற்கும் மேற்பட்டோரின் உறவினர்கள் இந்த உளநல ஆற்றுப்படுத்தல் ஆலோசனைக் கருத்துப் பகிர்வில் கலந்து கொண்டனர். (வ-4)

## விக்கிக்கு எதிராக...

அதன் தலைவர் அஹ லுகல்லே சிறி ஜீனாநந்த தேரர் தெரிவித்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் கடந்த சில தினங்களாக தெற்கில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையிலும், பயங்கரவாதத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டும் வகையிலும் செயற்பட்டுள்ளார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (வ-5)

## பிரதி...

கிழமை நடைபெறவுள்ளது. இந்த அமர்வு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. இந்தநிலையில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் கடந்த சனிக்கிழமை மாரடைப்பால் உயிரிழந்தார். இவரது இறுதிக்கிரியைகளும் நாளை மறுதினம் வியாழக்கிழமையே நடைபெறவுள்ளது. இதன் காரணமாக அன்று நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபையின் அமர்வுகள், தேநீர் இடைவேளையுடன் முடித்துக் கொள்ளப்படவுள்ளதாக, வடக்கு மாகாண தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

## டில்லிக்குச்...

வியாழக்கிழமை புதுடில்லியில் நடைபெறவுள்ள பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்கே அவர் அங்கு செல்கின்றார் என்று இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்தது.

இந்தப் பயணத்தின் போது இரு நாட்டு பிரதமர்களிடையில் முக்கிய சிறப்புக் கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கை, சம்பூர் விவகாரம், நல்லிணக்க முயற்சி, மீனவர் விவகாரம் ஆகியன தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடிக்கு, இலங்கைப் பிரதமர் ரணில் இதன்போது விளக்கமளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இந்திய அயலுறவுத்துறை அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளுடனும் பிரதமர் ரணில் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எட்கா உடன்படிக்கை பற்றியும் இந்தப் பயணத்தின் போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. இதற்காக பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் இலங்கையிலிருந்து இந்தியா சென்று, இலங்கைக் குழுவுடன் இணைந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## விக்கிக்கு கொலை...

கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு நேற்று முன்தினம் அனுப்பிய கடிதத்திலேயே மேற்படி வலியுறுத்தினார்.

'நீதியரசர் விக்னேஸ்வரன் தனது உயிருக்கு ஆபத்து' என்று குறிப்பிடுவாரேயானால், அது ஒரு பாரதூரமான விடயமாகும்.

எனவே இந்த விடயத்தை ஜனாதிபதிக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் முறையிட வேண்டும். முழுமையான விசாரணை மேற்கொண்டு, அவ்வாறு யாரும் செயல்படுவது தொடர்பில் தெரிந்தால் அவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும், சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். முன்னாள் நீதியரசராகவும் தற்போதைய வடக்கு மாகாண முதலமைச்சராகவும் உள்ள க.வி.விக்னேஸ்வரனுக்கு உயிர்ப் பாதுகாப்புக்கான, பாதுகாப்பு போதியளவு வழங்கப்பட வேண்டும்.

இதனால் நாமெல்லோரும் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்பது அர்த்தமல்ல. எவ்வாறெனினும் இந்த விடயத்தில் காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா. (வ-5)

## விக்கிக்கு...

பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தன்னைக் கொல்வதற்கு முயற்சிகள் இடம்பெறுவதாக பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர், கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசியல் தலைமைகளுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்படக் கூடாது என்ற கட்டாயம் உள்ளது. எனினும் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாயின் அவருக்கான சிவில் பாதுகாப்பில் திருப்தி இல்லையெனின், இராணுவப் பாதுகாப்பை வழங்கத் தயார்.

அதேவேளை, அரசியல் நகர்வுகளுக்காக அவர் தனது பாதுகாப்பு விடயங்களை பகடைக் காய்களாக பயன்படுத்தக் கூடாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார். (வ-5)

## பெயர்...

நேற்றுப் பிற்பகல் பொலன்னறுவை, திம்புலாகல, நுவரகல, சுகலாதேவிகம மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:

அரசு புதிதாக எதனையும் மேற்கொள்ளவில்லையென முன்னாள் தலைவர்கள் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தும் கருத்துக்களுக்கு ஓராண்டு காலமாக பதில் அளிக்காதிருந்த போதிலும், மீண்டும் அந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதனால் பதில் வழங்கத் தீர்மானித்துள்ளேன்.

கடந்த அரசு ஆரம்பித்து இடை நடுவில் நிறுத்தப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அவற்றை முன்னெடுத்துச் செல்வது அரசின் பொறுப்பாகும். அத்துடன் வேலைகள் முடிவடைந்த திட்டங்களை திறந்து வைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

2017ஆம் ஆண்டு இந்த நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைவாக வீடமைப்பு நிர்மாணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் அடங்கிய முன்மொழிவுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக்கு முன் வைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டை விடவும் வீடமைப்பு, நிர்மாணம் தொடர்பில் மாற்றம் ஏற்படுத்தும் ஆண்டாக 2017 ஆம் ஆண்டு மாற்றப்படும்.

நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் சமமான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவரும். தலைவர்கள் தந்தமது பிரதேசங்களை மட்டும் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி நிரலுக்குப் பதிலாக, முழு நாட்டையும் ஒரேமாதிரி அபிவிருத்தி செய்வது தற்போதைய அரசின் நிகழ்ச்சி நிரலாகும் - என்றார். (வ-5)

## அமிருக்கு...

க.வி.விக்னேஸ்வரனுக்கும் நடக்கும். இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மனல்கமுவ பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு ஒரு போதும் நன்மையைத் தரப் போவதில்லை. மேலும் பிரச்சினைகளையே உருவாக்கப் போகின்றது. இனவாதத்தைக் கிளறுவதன் ஊடாக அரசியல் ஆதாயம் தேடுவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றார்.

முன்னாள் எதிர்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு நிகழ்ந்ததைப் போன்று, விக்னேஸ்வரன் இப்போது செய்யும் செயல்கள் பூமராங் போன்று அவரையே திருப்பித் தாக்கும்.

விக்னேஸ்வரன் அரசியலைப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ள முயற்சிக்கவுமில்லை. தமிழ் மக்களைத் தூண்டி விட்டு, அவர்களை ஏமாற்றித் தவறாக வழி நடத்தி வாக்குகளை அபகரிக்க முயற்சிக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு மேலாக அரசியல் அதிகாரம் பெறுவதற்கு விக்கி கனவு காண்கின்றார் - என்றார். (வ-5)

## பிரபாகரனின்...

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தமிழ் ஊடகங்களின் செய்தியாளர்களை நேற்று அவரது அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரபாகரனின் சடலத்தைக் கண்டு சந்தோசப்படும் மனநிலையில் நான் இருக்கவில்லை. அந்தத் தருணத்தில் நாம் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டது என்று சந்தோசமடைந்தேனே தவிர, அவரின் சடலத்தைப் பார்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கவில்லை.

பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் வேறு இல்லை. நடத்தப்பட்ட போர் தனிப்பட்டவர்களுக்கான போர் இல்லை. தீவிரவாத அமைப்புக்கு எதிரான போர். நான் தமிழ் மக்களுக்கு எதிராக போர் செய்யவில்லை. தீவிரவாதத்திற்கு எதிராகவே போர் மேற்கொண்டேன் என்றார் மகிந்த. (வ-5)

## வடக்கு...

அரசியல் கைதிகள் தமிழ் அரசியல் கைதிகளின் விடு தலைக்கு நாங்கள் எதிரானவர்கள் இல்லை. அன்று நாங்கள் முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி விடுதலை செய்தோம். இன்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் சிலர் அன்று, அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கோரினர். அதன் காரணமாகவே அவர்களை நீதிமன்றில் முற்படுத்தினோம். இல்லாவிட்டால் அவர்களும் அன்றே விடுதலை செய்யப்பட்டிருப்பார்கள். அவர்களை விட மிகப் பெரிய குற்றங்களைச் செய்தவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். தற்போது சிறையில் உள்ளவர்கள் கிரிமினல் குற்றச்சாட்டுக்களுக்கு உட்பட்டவர்கள். அவர்கள் தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாகவே தீர்வுகள் எட்டப்பட வேண்டும். அவர்களின் விடுதலைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.

**பன்னாட்டு நீதிபதிகள்**

போரின்போது போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை. சில சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். அவ்வாறான சம்பவங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வழக்குகளும் தொடுக்கப்பட்டன. காணாமற்போனோர் தொடர்பில் கண்டறிய பரணகம தலையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அவர்கள் கிராமம் கிராமமாக சென்று விசாரணை நடத்தினர்.

இந்த அரசு அதனை நிறுத்தி வெளிநாட்டவர்களை கொண்டு வர வேண்டும் என்கின்றது. எமது பிரச்சினையை எம்மால் தீர்த்துக் கொள்ள முடியும். பன்னாட்டுச் சமூகத்தினர் தேவையில்லை. இந்த அரசு, வாழ்க்கையில் இங்கு வந்திராத புலம்பெயர்ந்தோரின் தேவையை நிறைவேற்றும் நோக்கிலேயே செயற்படுகிறது. பன்னாட்டு நீதிபதிகளை அரசு கொண்டு வருவதாக வாக்குறுதியளித்துள்ளது. குறிப்பாக அயலுறவுத்துறை அமைச்சர் செல்லும் இடமெல்லாம் இதனைக் கூறி வருகின்றார். ஜனாதிபதி, பிரதமர், அயலுறவுத்துறை அமைச்சர் என்று ஒவ்வொரு வரும் இது தொடர்பில் மாறுபட்ட விதத்தில் கருத்துத் தெரிவிக்கின்றனர். பன்னாட்டு ரீதியில் செயற்பட அயலுறவுத்துறை அமைச்சர்தான் உள்ளார். எனவே, அவரின் கருத்தையே நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**விக்கி இனவாதியல்ல**

அரசு மக்களுக்கு எதிராக செய்யும் விரோத செயற்பாடுகளை வைத்தே வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் அரசியல் செய்கிறார். அவர் இனவாதி என்பதை நான் ஏற்கவில்லை. தமிழ் மக்களுக்கான தீர்வு, வேலைவாய்ப்பு, வீதிகள் அபிவிருத்தியின்மை, விவசாயிகளுக்கான நிவாரணம் வழங்கப்படாமை உள்ளிட்ட பிரச்சினைகளை தீர்க்க அரசு எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்பதால் அந்த மக்கள் கொந்தளித்துள்ளனர். அதனை வைத்து க.வி. விக்னேஸ்வரன் அரசியல் செய்கிறார். மாறாக அவர் இனவாதம் செய்யவில்லை.

**வடக்கில் முகாம் மூடப்படவில்லை**

இந்த அரசு அவர்கள் ஆட்சிக்கு வர உதவிய சுமந்திரன், சம்பந்தன் போன்றோரை சந்தோசப்படுத்துகின்றது. மாறாக மக்களுக்கு எதனையும் செய்யவில்லை. அதற்கு தக்க உதாரணம்தான் வடக்கில் எந்தவொரு முகாமும் இதுவரை மூடப்படவில்லை.

நாங்கள் போரின் பின்னர் அந்த மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் வடக்கில் பொருளாதார அபிவிருத்திகளை முன்னெடுத்தோமே தவிர, அரசியல் செய்யவில்லை. தேர்தலில் தோல்வி அடைவேன் என்று அறிந்து கொண்டுதான் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தினேன். அது அவர்களின் ஜனநாயக உரிமை. ஆனால் இந்த அரசு அரசியலை மாத்திரமே முன்னெடுக்கின்றது. மக்கள் தொடர்பில் அக்கறையுடன் செயற்படவில்லை. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஞாலத்தில் புதுமை புகும் தாலம்'

பனை அபிவிருத்தி சபை நடத்தும்
பனைசார் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும் ஆய்வரங்கமும்
நிகழ்வினை முன்னிட்டு
பாடசாலை மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான கட்டுரை மற்றும் சுவரொட்டி போட்டி

கட்டுரை

அ)திறந்தபோட்டி (1000-1500 சொற்கள்)

1. இலக்கியத்தில் பனை
2. அன்றுதொட்டு இன்றுவரை தமிழர் வாழ்வில் பனையின் வகிபாகம்
3. பனைவளமும் இலங்கைப் பொருளாதாரமும்

ஆ) பாடசாலை மாணவர்களுக்கான போட்டி

மேற்பிரிவு (700-1000சொற்கள்) கீழ்ப்பிரிவு (500 சொற்கள்)

11 - 13 ஆம் தர மாணவர்களுக்கு 6-10 ஆம் தர மாணவர்களுக்கானது

| 11 - 13 ஆம் தர மாணவர்களுக்கு | 6-10 ஆம் தர மாணவர்களுக்கானது |
|---|---|
| 1. பனையைதறிப்பதுசந்ததியை அழிப்பதற்குநிகரானது | 1. சுய பொருளாதாரத்தில் பனையின் பங்கு |
| 2. பனையினைபாதுகாக்கும் பெரும்பணிமக்களுடையதாகும் | 2. மருத்துவமும் பனையும் |
| 3. சூழல் பாதுகாப்பிற்கு பனைவளத்தின் பங்களிப்புபாரியதே | 3. தாலம் தரணிக்கு அமுதசுரபி |

சுவரொட்டி பாடசாலை மாணவர்களுக்கானது

1. "வடலிகளும் வானுயரும்"
2. "வாழ்வளிக்கும் பனையைவாழவிடு"
3. "நட்டுவிடு ஒருபனையை தொட்டுவிடு சுயபொருளாதாரத்தை"
4. "விழித்திடு! உழைத்திட உன் முன் பனை"
5. "அழிக்காதீர்! பனை எமது மூலவளம்"
6. "தாலமும் தமிழர் பண்பாடும்"

அறிவுறுத்தல்:

- ஆக்கங்கள் சமர்ப்பிக்கவேண்டிய இறுதி திகதி 11.10.2016. மாணவர்கள் தமது ஆக்கங்களை தமதுபாடசாலைஅதிபர் ஊடாகஅனுப்பிவைக்கவேண்டும்.
- கட்டுரைப் போட்டிக்கு பங்கு கொள்ளும் ஒருவர் ஒரு தலையங்கத்தினை மாத்திரம் தெரிவு செய்து கட்டுரையை அனுப்பலாம். கட்டுரையாளர் சுவரொட்டிப் போட்டியிலும் பங்கு பற்றலாம். போட்டித் தலைப்பினை தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடவும்.
- சபையின் பணியாளர்களின் குடும்பஅங்கத்தவர்கள் இப் போட்டியில் பங்குபற்றமுடியாது
- வெற்றிபெறும் மாணவர்களுக்குகண்காட்சியின் இறுதி நாளன்று பரிசில்கள் வழங்கப்படும்

மேற்படி கட்டுரைகளை நேரிலோ அன்றி தபால் மூலமோ கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறியத் தரப்படுகின்றது.

**தலைவர்:**
**பனை அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு செயலக கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2034**

# வைத்தியசாலை பணியாளர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைப் பணியாளரான 3 பிள்ளைகளின் தாய் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் மல்லாகம் -கோணப்புலம் முகாமில் இடம்பெற்றது. மயிலிட்டியைச் சொந்த இடமாக கொண்ட ரவிக்குமார் பவலோஜினி (வயது -34) என்ற 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு தெல்லிப்பழை வைத்திய சாலையில் இரவு கடமைமுடிந்து அவர் வீட்டுக்கு சென்றுள்ளார். வீட்டில் சாதாரணமாக இருந்தவர் காலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கும் அனுப்பியுள்ளார். மாலை பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்த பிள்ளைகள் தாயார் தூக்கில் தொங்கியதை அவதானித்து தகவல் வழங்கினர்.

சடலம் தற்போது தெல்லிப்பழை வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-21,36)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உயர்தர கணித - விஞ்ஞான பிரிவு ஆசிரியர்
சோ.சசிகரன் அவர்களின் மாமனார்

**வைத்திலிங்கம் கந்தசாமி**

அவர்கள் 28.09.2016 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03 . 02 . 1956



மறைவு
17 . 10 . 2015

**அமரர் சங்கரப்பிள்ளை சண்முகானந்தா**

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே
உங்கள் நினைவுகளில் என்றும்
நாம் வாழ்கின்றோம்

புகையிரத வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

## பன்னிரண்டு ஆண்டுகள்

பரிதவித்து நாமிங்கே ... ... ...



அமரர்

**திலகவதி குமரவேல்**

(முன்னாள் பொதுமுகாமையாளர்,
ப.நோ.கூ.சங்கம்.சுன்னாகம்)

தோற்றம்
17.04.1953



மறைவு
18.10.2004

**திதி: சதுர்த்தி (04.10.2016)**

கூடி வாழ்ந்த நாள்களை எண்ணி தவிக்கவிட்டு
காலனிடம் சென்று ஆண்டுகள் பன்னிரண்டில்
கதறி அழுதாலும் ஆறாது எம் கவலை
பாசத்தின் பரிதவிப்பில் பன்னிரண்டு
ஆண்டுகளாய் பாரினில் நாமிங்கே... ...

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'திருவேரகம்'
[illegible]க்கிருஷ்ணர் வீதி,
[illegible]ன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## திருமதி விமலாதேவி நவரட்ணம்



தோற்றம்
12.08.1949

மறைவு
03.10.2016

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி நவரட்ணம் நேற்று (03.10.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமார் - இராஜேஸ்வரி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நவரட்ணத்தின் பாசமிகு மனைவியும், ஸ்ரெலா (லண்டன்), நவலெஸ்ரர் (குமார்), நவலென்ரைன் (லாண்டோ), நவலாண்சர் (குட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாஸ்கரன் (லண்டன்), ஜெயரூபி ஆகியோரின் மாமியும், றொய்சன், றொசானா, யோயஸ், லெக்சிகா, ஜென்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வல்லை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 672 7577

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதிகள் குழப்புகிறார்கள் என்பதற்காக உரிமைகளைக் கேட்காமல் இருக்க முடியாது

## இப்படிச் சொல்கிறார் சித்தார்த்தன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஒக். 4

தென்பகுதி சிங்கள இனவாதிகள் குழப்புவார்கள் என்பதற்காக நாம் எமது உரிமைகளைக் கேட்காமல் இருக்க முடியாது. நாம் கேட்டே அவர்கள் செய்யாத நிலையில், கேட்காமல் இருக்கவும் இயலாது. இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

கொழும்பு அரச ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட ஊர்வலமானது அரசுக்கோ அல்லது வேறு எவருக்குமோ எதிரான போராட்டம் அல்ல. தமிழ்மக்களின்பிரச்சினைதொடர்பான கவனவீர்ப்புப் போராட்டமே அது. கடந்த தேர்தலில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அரசுக்கு வாக்களித்திருந்தார்கள். அரசின் மீது எதிர்பார்ப்பு இருந்த போதும், இலகுவில் செய்யக் கூடிய விடயங்கள் பலவற்றை அரசு நிறைவேற்றவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு தமிழ் மக்களின் கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்ட போதும், அவற்றை அரசு கவனத்தில் எடுக்கவில்லை.

எமக்குத் தென்பகுதியில் உள்ள அரசியல் நிலமைகள் புரியாமல் இல்லை. இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே அரசியல் ரீதியாக இவ்வாறான கவனவீர்ப்பொன்றுக்குச் செல்ல வேண்டியிருந்தது. தென்பகுதியில் உள்ள சிங்கள இனவாதிகள் குழப்புவார்கள் என்பதற்காக நாம் எமது உரிமைகளைக் கேட்காமல் இருக்க முடியாது. கேட்டே அவர்கள் செய்யாத நிலையில் கேட்காமல் இருக்கவும் இயலாது. நாங்கள் 60 வருடங்களுக்கு மேலாகக் கேட்டே வருகின்றோம்.

மகிந்த ராஜபக்ச கண்டி யாத்திரை சென்று தீர்வொன்றைக் கொடுக்கக் கூடாது என கோர முடியுமாயின், தீர்வொன்றைக் கொடுங்கள் என்று நாம் ஏன் கூற முடியாது? சிங்களப் பேரினவாதிகள் இப்படிச் செய்வார்கள் என்று எமக்குத் தெரியும். ஆனால் தமிழ் தரப்புக்கள் உறுதியாக நிற்கின்றன என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.

நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் வடக்கிலுள்ள சிங்களவர்களை வெளியேறுமாறு கூறவில்லை. இதுவரை சொல்லவும் இல்லை சொல்லப் போவதும் இல்லை. அவர்கள் தாமாகவே வந்து குடியேறுவார்களாயின் அவர்களை நாம் போகச் சொல்ல மாட்டோம். வடக்கில் காணிகளை வாங்கி அவர்கள் அங்கு வசிக்க முடியும். வடக்கில் பாரம்பரியமாக பௌத்த விகாரைகள் இருக்கின்றன. இதனை நாம் எதிர்க்கவில்லை. ஏனெனில், நாம் அதற்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் எமது மக்களுடைய காணிகளை பலவந்தமாகப்பிடித்து சண்டித்தனம் போன்று குடியமர்த்த முற்பட்டால் அதனை நாம் எதிர்ப்போம்.

ஏன் புலிகளின் காலத்தில் கூட வடக்கிலிருந்த பௌத்த விகாரைகள் எதுவும் சேதமாக்கப்படவில்லை. நாம் எந்த மதத்துக்கோ அல்லது இனத்துக்கோ எதிரானவர்கள் அல்ல. மாறாக பல வந்தமான திணிப்புக்களையே எதிர்க்கின்றோம் - என்றார். (வ-5)


## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில்
கடற்றொழில்
பரிசோதகராகக்
கடமையாற்றிய
**தர்மசீலன் கணேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்

**தர்மசீலன் சாரதாதேவி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட அலுவலகம்.
கடற்றொழில் நீரியல் வளத்துறைத்
திணைக்களம், யாழ்ப்பாணம்.**

**உதவிப் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்,**

## மரண அறிவித்தல்



**சைவப்புலவர் திருமதி சத்தியவதனி மாணிக்க நடராசா**
**(சித்தாந்த ரத்தினம்)**

**தோற்றம்** 19.08.1940 — **மறைவு** 30.09.2016

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியவதனி மாணிக்க நடராசா 30.09.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் (இளைப்பாறிய ஆசிரியர்) - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற மாணிக்கநடராசா(ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் வதனிகுணம்(சுவிஸ்லாந்து), சற்குணவதனி அரியநாயகம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரசன்னா, பிரசாந்ராஜன் ஆகியோரின் பெரியதாயாரும் சில்ப்பா, ஜியேரே ஆகியோரின் அன்பு மாமியாரும் டிலன் இன் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.10.2016) புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம் பெற்று பிற்பகல் 2மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரி - வதனி குணம்**

**தொடர்பு: 075 233 6916/
011 236 1972**

## மரண அறிவித்தல்

### கருணாகரன் விஜயகுமார்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் செங்குந்தா வீதி வெள்ளை பிள்ளையார் கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கருணாகரன் விஜயகுமார் 03.10.2016 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கருணாகரன்-நாகம்மா (பவளம்) தம்பதிகளின் இளைய மகனும் சற்குணநாதன்-பூங்கோதை தம்பதிகளின் மூத்த மருமகனும் மோகனாம்பாளின் பாசமிகு கணவரும் கஜானன், லோஜன் (யாழ்/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தா சிவசுப்பிரமணியம் (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்), நந்தகுமாரன் (கனடா), செல்வகுமார் (கனடா), மோகனகுமாரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (03.10.2016) பிற்பகல் 4.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு சுப்பிரமணியம்



சின்னப்பு சுப்பிரமணியம் 03.10.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னராசா, சின்னம்மா ஆகியோரின் சகோதரனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் நாகேந்திரன் (C.T.B கோண்டாவில்) காலஞ்சென்ற மகேந்திரன் (கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினபூபதி (வீரசிங்கம் மத்திய கல்லூரி, இளைப்பாறிய ஆசிரியை), சிவமணி ஆகியோரின் மாமனாரும் நிரோஜன் (Qs,ucc Trading and constructing, கட்டார்), ஆஷாயினி (People's Bank, kilinochchi), தஷாயினி(Demons trator,University of Jaffna), டிலோசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.10.2016) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாமோதரம் பிள்ளை வீதி,
சாவகச்சேரி.**

**தகவல்:
நாகேந்திரன் (மகன்)**

### திருமதி சாரதாதேவி தர்மசீலன்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் மருதனார் மடம் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாதேவி தர்ம சீலன் 03.10.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் துரையப்பா தர்மசீலனின் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், அளவெட்டி, மல்லாகம் பல நோ.கூ. சங்கம் ) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான துரையப்பா-சரஸ்வதி தம்பதிகளின் மரு மகளும் கணேஸ்வரனின் (கடற்றொழில் பரிசோதகர், கடற்றொழில் திணைக்களம்) அன்புத் தாயாரும் நிரஞ்சலாவின் (முன்னாள் தாதிய உத்தியோகத்தர்) அன்பு மாமியும் நயனிதா, ஆருத்திரன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற பாலசிங்கம்-மற்றும் சரோஜினி கல்யாண சுந்தரேசன் (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்), பாலராஜா,ஜெயமலர் நித்தியானந்தன் (ஓய்வு பெற்ற உப அதிபர்), ஜெகசோதி புஷ்பநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சுசீலாதேவி செல்வராஜா (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர் கிளிநொச்சி பொது வைத்தியசாலை), சுபந்திராதேவி இராஜசிங்கம், சதானந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.10.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ் வீதி,
மருதனார்மடம்,
சுன்னாகம்.**

**தகவல்:
கணேஸ்வரன் (மகன்)
077 2278931**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவானுக்குக் காயம் கம்பீருக்கு வாய்ப்பு

நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்று முன்தின மூன்றாம் நாளில் பவுன்சர் பந்தால் காயமடைந்தார் தவான்.

தவான் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த பொழுது வேகப்பந்துவீச்சாளர் போல்ட் வீசிய பவுன்சர் பந்தை தவறாக எதிர்கொண்டு கையில் காயமடைந்தார். அவர் ஆட்டமிழந்த பின்னர் அருகிலிருந்த மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகள் செய்து பார்க்கப்பட்டது. மருத்துவ அறிக்கை இன்னும் வெளியாகவில்லை. ஆனாலும் தவான் மூன்று வாரங்களுக்கு ஓய்விலிருக்கப் பணிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு தவானுக்கு ஓய்வு கொடுக் கப்பட்டால் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கும் வாய்ப்பு கம்பீருக்குக் கிடைக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன. (ம)






# காரில் பற்றியது தீ ஹமில்டன் விலகல்

காரில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக மலேசிய கார்பந்தயத் தொடரிலிருந்து பாதியில் விலகினார் கார்ப்பந்தய உலகின் ஜாம்பவானான பிரிட்டனின் வீரர் லூயிஸ் ஹமில்டன்.

வழக்கம் போல நடப்பு வருட உலக கார்ப் பந்தயத் தொடர் 21 சுற்றுக்களாக நடத்தப் பட்டு வருகிறது. இதன் 17 ஆவது சுற்றான மலேசியப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தகுதிச்சுற்றில் வெற்றி பெற்றதால் முதல் நிலை வீரராக போட்டியை ஆரம்பித்தார் ஹமில்டன். 311 கிலோ மீற்றர் தூரமுடைய பந்தயத்தில் 210 கிலோ மீற்றர்களின் முடிவில் ஹமில்டனே முதலிடத்தில் நீடித்து வந்தார். ஆனால் அவரது காரில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக போட்டியிலிருந்து பாதியில் விலகினார்.

ஆஸ்திரேலிய வீரரான டானியல் ரிச்சார்டோ சம்பியனானார். நெதர்லாந்து வீரரான மக்ஸ் வெர்ஸ்ட்டப்பன் இரண்டாமிடத்தையும், ஜேர்மனிய வீரரான நிக்கோ ரஸ்பேர்க் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

முடிவடைந்த 16 சுற்றுக்களின் ஒட்டு மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ரஸ்பேர்க் முதலிடத்திலும், ஹமில்டன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். (ம)

## ஜொனியன்ஸை வீழ்த்தியது முல்லை தெரிவு அணி

மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையில் மாகாண ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் துடுப்பாட்டத் தொடரில் ஜொனியன்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது முல்லைத்தீவு தெரிவு அணி. சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லை அணி 48.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுரேந்திரன் 43 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணியின் சார்பாக றஜிந்தன் 4 இலக்குகளை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 23.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக கபில்ராஜ் 17 ஓட்டங்களையும், சஞ்சயன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் முல்லை அணியின் சார்பில் அருணா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் வவுனியா யுனிபைட் அணியுடன் முல்லை அணி மோதவுள்ளது. (ம-102)

# மே.இ.தீவுகளை வீழ்த்தி தொடரை வென்றது பாக்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்திலும் வெற்றி பெற்று தொடரைக் கைப் பற்றுவதை உறுதி செய்தது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து அசாமின் சதத்தின் உதவியுடன் 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 337 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அசாம் 123 ஓட்டங்களையும், மலிக் 90 ஓட்டங்களையும், அஹமட் ஆட்ட மிழக்காமல் 64 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக கோல்டர், ஜோசெப் இருவரும் தலா 2 இலக்கு களையும், நரைன் ஓர் இலக் கையும் வீழ்த்தினர்.




பதிலுக்குக் களமிறங்கிய மேற் கிந்தியத் தீவுகளால் 50 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 278 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

இதனால் 59 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பாகிஸ்தான். அதிகபட்சமாக பிராவோ 61 ஓட்டங்களையும், சாமுவேல்ஸ் 57 ஓட்டங்களையும், பிரீத்வைட் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரியாஸ் இரு இலக்குகளையும், ஆமிர், இமாட் வசிம் இரு வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# றூனி ஒருவரே தலைவர்; மொரின்கோ திட்டவட்டம்

மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் தலைமைப் பதவியை இழப்பது குறித்து, வெய்ன் றூனி கவலைப்படத் தேவையில்லை எனவும் அவர் ஒருவரே அந்த அணியின் தலைவர் எனவும் யுனைற்ரெட்டின் முகாமையாளரான ஜொஸ் மொரின்கோ தெரிவித்தார்.

இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றி அணிக்கெதிராகக் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டத்தில், முதல் பதினொரு வீரர்கள் பட்டியலில் றூனி சேர்க்கப்பட்டிருக்கவில்லை. எனவே, அவரின் மீதான நம்பிக்கையை, மொரின்கோ இழந்துவிட்டாரா என்ற சந்தேகம் ஏற்பட்டதோடு, றூனியின் அணித்தலைமை தொடர்பாகவும் கேள்விகள் எழுந்தன. இந்த நிலையிலேயே றூனி மட்டுமே மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் தலைவர் என மொரின்கோ திட்டவட்டமாக தெரிவித்தார். மன்செஸ்டர் நிர்வாகம் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பிலேயே மொரின்கோ இவ்வாற தெரிவித்தார்.

மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் தலைவர் றூனி ஒருவர் மட்டுமே. ஆடுகளத்தில் அவர் இருக்கிறாரா அல்லது வெளியில் இருக்கிறாரா என்பது ஒரு விடயமல்ல. எனது அணித்தலைவர் அவர். கழகத்தின் தலைவர் அவர். வீரர்களின் தலைவர் அவர். ஆகவே, அனைத்து மதிப்பும் ஆதரவும் அவருக்கு உண்டு. அவர் எங்களது வீரர். எங்களுக்காக கோல்களைப் பெறுவார். எங்களுக்காகக் கடினமாக உழைப்பார். அதில் எனக்குச் சந்தேகம் கிடையாது என மொரின்கோ மேலும் தெரிவித்தார். (ம)




## மே.தீவுகளுக்கு கௌரவச் சிக்கல்

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் திவுகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் அபுதாபி பன்னாட்டு கிரிக்கெட் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது பாகிஸ்தான். இதனால் அடுத்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் பாகிஸ்தானை விட்டுச் செல்லவாய்ப்பில்லை. ஆனால் பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரையும் 3:0 என்று இழந்த தீவுகள் ஒருநாள் தொடரில் ஓர் ஆட்டத்திலேனும் வெற்றிபெற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 4

**ஞானமுருகனின் கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.க. கால்பந்தாட்டம்**

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் முன்னெடுத்துவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். லூட்சியா அணியை எதிர்த்து கில்லறி அணி மோதவுள்ளது.

**குறிஞ்சிக்குமரன் வி.கழகத் தொடர்**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் அணியை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழமும் மோதவுள்ளன.

(ம-23-108-422)



## நாவலரின் துடுப்பாட்டம்; குறிஞ்சிக்குமரன் சம்பியன்

கரணவாய்,ஒக். 4

தும்பளை நாவலர் வி.கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை 7 இலக்குகளால் வீழ்த்தி சம்பியனானது குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம்.

நாவலர் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மைக்கல் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

120 பந்துகளில் 109 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய குறிஞ்சிக்குமரன் அணிக்கு ஆரம்ப வீரர்கள் தடுமாற்றம் காட்டிய போதிலும், அடுத்த நிலை வீரர்களான நாகப்பா, சாந்தன் இணை பலமான நம்பிக்கையை வழங்கியது. முடிவில் 17 பந்துப்பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது குறிஞ்சிக்குமரன் வி.கழகம். அதிகபட்சமாக சாந்தன் 55 ஓட்டங்களையும், நாகப்பா 36 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-108)



*நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கு என புதிதாக அமைக்கப் படவுள்ள விளையாட்டு மைதானத்துக்கான இடத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் பார்வையிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தின், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண விளையாட்டுத்துறை இணைப்பாளர் இ.ஆனல்ட், வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-23)*

## சென். அன்ரனிஸுக்கு இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 4

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. ஆட்டத்தின் 38 ஆவது நிமிடத்தில் அன்ரனிஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ரஜித். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் கலிஸ்ரஸ், அன்ரனிஸின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். 67ஆவது நிமிடத்தில் மயூரனின் உதவியுடன் பதிலடி கொடுத்தது பாடும்மீன். தற்போது 2:1 என்ற நிலைமை. கலிஸ்ரஸ் மீண்டும் ஓர் கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். அன்ரனிஸ். (ம-23-108)

## நெல்லியடி மத்திக்கு இரண்டாவது இடம்

யாழ்ப்பாணம், ஒக். 4

கன்னங்கராவினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியது.

அவிசாவளை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கம்பளை விக்கிரமபாகு மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் விக்கிரமபாகு மத்திய கல்லூரியின் சார்பாக முதல் கோல் பதிவானது. அதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் விக்கிரமபாகு மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றதையடுத்து நெல்லியடி மத்திய கல்லூரி அணிக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

(ம-422)



## சென். சாள்ஸின் கிண்ணத்தை வென்றது கரவெட்டி ஞானம்ஸ்

கரணவாய், ஒக். 4

யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் வித்தியாலயத்தின் 140ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர்களால் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணம் வென்றது.

சென். றொக்ஸ் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், குருநகர் சீ ஸ்ரார் வி.கழகமும் கரவெட்டி ஞானம்ஸ் வி.கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஞானம்ஸ் அணி



முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 3 இலக்குகள் இழப்புக்கு 70 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுகந்தன் 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டினேஸ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

36 பந்துகளில் 71 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு களமிறங்கிய சீ ஸ்ரார் அணியால் 51 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதையடுத்து 19 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியனானது ஞானம்ஸ் அணி. பந்து வீச்சில் சேந்தன் 4 இலக்கு களைக் கைப்பற்றினார்.

(ம-108-422)

## நெருக்கடி நிலையில் ஆஸ்திரேலிய அணி

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இந்த ஆட்டத்திலும் அந்த அணி வெற்றிபெற்றால் தென்னாபிரிக்கா கிண்ணத்தை வெல்வது உறுதி. எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டுமாயின் நாளைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி நிலை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்வின் 400

பன்னாட்டு அரங்கில் தனது 400 ஆவது இலக்கைக் கைப்பற்றினார் இந்திய அணியின் சுழல் பந்துவீச்சாளரான அஸ்வின்.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நேற்று நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸின் நியூசிலாந்து அணியின் தலைவரான ரெய்லரை அஸ்வின் ஆட்டமிழக்கச் செய்திருந்தார். இந்த இலக்குச் சரிவு பன்னாட்டு அரங்கில் அஸ்வினின் 400 ஆவது இலக்குச் சரிவாகப் பதிவானது.

மொத்தமாக 185 பன்னாட்டு ஆட்டங்களில் விளையாடியுள்ள அஸ்வின், டெஸ்ட் ஆட்டங்களில் 207 இலக்குகளையும், 102 ஒருநாள் ஆட்டங்களில் 142 இலக்குகளையும், 45 ரி-20 ஆட்டங்களில் 52 இலக்குகளுமென மொத்தம் 401 இலக்குகளை இதுவரை கைப்பற்றியுள்ளார். (ம)



## முதலிடம் பிடித்தது இந்தியா நியூசியை மீண்டும் வீழ்த்தி

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்துக்கு முன்னேறியது இந்திய அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 316 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக புஜாரா 87 ஓட்டங்களையும், ரகானே 77 ஓட்டங்களையும், சஹா ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பாக ஹென்றி 3 இலக்குகளையும், போல்ட், வாக்நெர், பட்டேல் மூவரும் தலா இரு இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 204 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பட்டேல் 47 ஓட்டங்களையும், ரெய்லர் 36 ஓட்டங்களையும், ரோஞ்சி 35 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக புவனேஸ்குமார் 5 இலக்குகளையும், சமி 3 இலக்குகளையும், ஜடேயா, அஸ்வின் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

112 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிஸ்ஸுக்காகக் களமிறங்கிய இந்திய அணி, 263 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரோகித் சர்மா 82 ஓட்டங்களையும், சஹா 58 ஓட்டங்களையும், கோக்லி 45 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்து அணியின் சார்பாக போல்ட், ஹென்றி, நான்நெர் மூவரும் தலா மூன்று இலக்குகளையும், வாக்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

376 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து ஒரு கட்டத்தில் 103-3 என்று இந்தியாவுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் அஸ்வின், ஜடேயா கூட்டணி அடுத்தடுத்து இலக்குகளைச் சரிக்க, முடிவில் 197 ஓட்டங்களுக்கு அந்த அணி சகல இலக்குகளையும் இழந்தது. இந்திய அணி 178 ஓட்டங்களால் வெற்றிபெற்றதுடன், தொடரைக் கைப்பற்றுவதையும் உறுதி செய்தது. அதிகபட்சமாக லாதம் 74 ஓட்டங்களையும், ரோஞ்சி 32 ஓட்டங்களையும், குப்தில் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக அஸ்வின், ஜடேயா, சமி மூவரும் தலா மூன்று இலக்குகளையும், புவனேஸ்குமார் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்திலிருந்த இந்திய அணி, இந்த வெற்றியின் மூலம் முதலிடத்தில் இருந்த பாகிஸ்தானைப் பின்தள்ளி முதலிடத்தைப் பிடித்தது. (ம)

## சர்ச்சையை ஏற்படுத்தும் அம்லாவின் நிராகரிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்துக்கான தென்னாபிரிக்க அணியிலிருந்து அம்லா நிராகரிக்கப்பட்டமை சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி, ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது ஆட்டத்துக்கான தென்னாபிரிக்க அணியில் சுகவீனம் காரணமாக அம்லா சேர்க்கப்படவில்லை. இரண்டாவது ஆட்டம் ஆரம்பிப்பதுக்கு முதல் நாள் அம்லா நலம்பெற்றார். தென்னாபிரிக்க அணிக் கான மருத்துவக் குழு இதை அறிவித்தது. ஆனால் இரண்டாவது ஆட்டத்தில் அம்லாவை அணியிலிருந்து நீக்கினார் அணித்தலைவரான பிளாசிஸ்.

பிளாசிஸின் இந்த முடிவு சர்ச்சைகளைத் தோற்றுவித்தள்ளது. பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அம்லாவின் உடல்நிலை சரியாக இல்லை என்று என்னிடம் கூற முடியாது. பிளாசிஸின் முடிவைக் கண்டு நான் உண்மையிலேயே மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். அம்லா தென்னாபிரிக்காவின் சிறந்த வீரர். வில்லயர்ஸ் காயம் காரணமாக வெளியில் இருக்கும் நிலையில், அம்லா அணிக்கு கட்டாயம் தேவை என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான கெப்லர் தெரிவித்துள்ளார். ஏனையோரும் தமது கருத்துக்களை முன்வைத்தள்ளனர். ஆனால் பிளாசிஸ் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அபார வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## சீன ரென்னிஸ் தொடரில் ரட்வன்ஸ்கா முன்னேற்றம்

சீன ரென்னிஸ் தொடரில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார் போலந்தின் வீராங்கனையான அக்னீஸ்கா ரட்வன்ஸ்கா.

சீன ரென்னிஸ் தொடர் பெய்ஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டமொன்றில் சீனாவின் வாங் கி யாங்கை எதிர்த்து போலந்து வீராங்கனையான அக்னீஸ்கா ரட்வன்ஸ்கா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ரட்வன்ஸ்கா, மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

## போராடி வென்றது லிவர்பூல்

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் லிவர்பூல் அணி போராடி வெற்றிபெற்றது.

லிவர்பூல் - சுவான்சீ அணிகளுக்கிடையிலான இந்த ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வெற்றி பெற்றிருந்தது. முதல் பாதியின் முடிவில் சுவான்சீ 1:0 என்று ஆதிக்கம் செலுத்திய போதிலும், இரண்டாவது பாதியில் நட்சத்திர வீரர்களான ரொபேர்ட்டோ, ஜேம்ஸ் மில்னர் இருவரினதும் கோல்களின் உதவியுடன் லிவர்பூல் வெற்றிபெற்றது. (ம)

CHEMISTRY COURT
80, ARASADY ROAD, JAFFNA
2017 A/L DAY CLASS
ஆரம்பம்:- 05.10.2016
Mon to Fri
(4.30-6.00) pm
BY: RAJAH

வேலைவாய்ப்பு
நீங்கள் O/L தகைமையுடையவரா? எமது Amarican நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கவுள்ளது.
- வயதெல்லை 18-30
- அனுபவம் அவசியமற்றது
- மேற்பார்வையாளர்கள், விற்பனை பிரதி நிதிகள்
- தங்குமிடவசதியுண்டு (ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும்)
தொடர்புகளுக்கு
077 6644442, 077 2302795

தமிழ் சித்த மருத்துவ நிலையம்
சகல நோய்களுக்குமான பக்க விளைவற்ற முறையில் மூலிகைகளில் தயாரிக்கப்பட்ட மருந்துகளைக் கொண்டு வைத்தியசேவை இடம்பெறுகின்றது.
[illegible] வைத்தியம் தலைமுடிசம்பந்தமான பிரச்சினைகள்
[illegible] பாக்கியம் நீரிழிவு ஆண்மைக் குறைவு தோல் நோய்கள்
[illegible] குடல்புண் விறைக்கடி
[illegible] அனைத்து நோய்களுக்குமான சிறந்த சேவை வழங்கப்படுகின்றது.
[illegible]
வைத்தியர் இரா.மாதவராசா (RIMP) [illegible]
[illegible] அரச பதிவிலக்கம் AMC 13905
நேரம் - [illegible] காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை - 077 137 4728

MayZone College
The Capstone of Success
CIMA Strategic Level
Commencing On 05th October.
ACCA Knowledge Level
Commencing On 22nd October.
Call 021 722 3444 For details.
No.61-3rd Floor,Palaly Road,Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.